வெளியீடு—7—10—1967]
Issued—7—10—1967]

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*சனிக்கிழமை, 1967 மார்ச் 18*

**Saturday, 18th March 1967**

தொகுதி I—எண் 3

**Volume I—No. 3**

©
தமிழக அரசு
1967

©
GOVERNMENT OF MADRAS
1967

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

## உள்ளடக்கம்.


பக்கங்கள்

1. அறிவிப்புகள்—

(அ) அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் நியமனம் .. 47

(இ) கவர்னர் பேருரைக்கான நன்றியறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்தல் .. .. 132

(உ) அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள் .. .. 132–134

2. கவர்னர் பேருரையின மீது விவாதம் .. .. .. 48–132

3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. .. 134

# தமிழகச் சட்டப் பேரவை.

---

**சனிக்கிழமை, மார்ச் 18, 1967.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 8-30 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர், **திரு. சி. ப. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) யிடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இன்று கேள்விகள் இல்லை. அடுத்தாற்போல் நான் இந்தச் சட்டப்பேரவைக்குத் தெரிவிக்க வேண்டிய அறிவிப்பு ஒன்றுள்ளது. தமிழக சட்டப்பேரவை விதிகளின் 193-வது விதியின் 1-வது உட்பிரிவின்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை, அலுவல் ஆய்வுக் குழு (பிசினஸ் அட்வைசரி கமிட்டி) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்
2. மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்—அவை முதல்வர்
3. மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி
4. மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்
5. திரு. து. ப. அழகமுத்து
6. திரு. பி. ஜி. கருத்திருமன்
7. திரு. கே. விநாயகம்
8. திரு. பி. கே. மூக்கையா தேவர்
9. திரு. அ. பாலசுப்பிரமணியன்
10. திரு. ஆ. கு. சுப்பையா
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
12. திரு. க. ர. நல்லசிவம்
13. டாக்டர் ஹபிபுல்லா பேக்
14. திரு. ம. பொ. சிவஞானம்

இந்தக் குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள அனுமதி உண்டு. இந்தக் குழுவின் முதற் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் பேரவைத் தலைவர் அறையில் நடைபெறும் என்று அறிவிக்கிறேன்.

D V211,31 N67
N67-1.4
64985

[1967, மார்ச் 18

## 2. கவர்னர் பேருரையின் மீது விவாதம்.

*மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்* : கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை, திரு. எம். எஸ். மணி அவர்கள் முன்மொழிவார்கள்.

* **திரு. எம். எஸ். மணி** : கனம் மன்றத் தலைவர்களே, "கவர்னர் அவர்களுக்கு நன்றியுரை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கவேண்டும்";

"1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் தேதியன்று இரண்டு சபைகளும் சேர்ந்த சட்டப்பேரவையின் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. மு. சண்முகம்** : நான் அதை வழிமொழிகின்றேன்.

*மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்* : இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. எம். எஸ். மணி அவர்கள் இப்பொழுது பேசுவார்கள்.

* **திரு. எம். எஸ். மணி** : மன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் நேற்று இந்த மாமன்றத்தில் ஆற்றிய உரையின்போது தற்போது நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற அனைவருக்கும் தன்னுடைய பாராட்டுதலையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிப் பாராட்டுதலும், வாழ்த்துக்களும் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்திலே சென்ற தடவை தேர்தலிலே வெற்றிபெற்று இந்தத் தடவையும் தேர்தலிலே போட்டியிட்டு வெற்றிபெற்றவர்களுக்குப் பாராட்டுதலையும், புதிதாக 1967 தேர்தலிலே வெற்றிபெற்றவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1962 தேர்தலில் வெற்றிபெற முடியாதவர்கள் பலர் இன்றையதினம் 1967 தேர்தலிலே வெற்றியடைந்திருக்கிறார்கள். 1962 தேர்தலிலே வெற்றிபெற முடியாதவர்கள் அதற்குப் பிறகு நல்ல முறையிலே பணியாற்றியதால் இப்பொழுது வெற்றி பெற்றிருக்கிறார்களென்று கருதுகிறேன். நான்காவது பொதுத் தேர்தல் குறித்து கவர்னர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தலை அகில உலகம் பூராவும் கூர்ந்து கவனித்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே நடைபெற்றது மிகப் பெரிய தேர்தல்தான். அதுவும் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே யார் ஆட்சிக்கு வருவார்கள் என்ற சர்ச்சை நாடு பூராவும் இருந்தது. எந்தக் கட்சி வெற்றிபெறும் என்பதை அகில உலகம் பூராவும் கூர்ந்து கவனித்தது. இந்தத் தேர்தல்

* 135–141-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது. கவர்னர் பேருரையின் தமிழாக்கம் 141–150-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





ஜனநாயக முறையிலே நடைபெற்றதோடு மட்டுமல்லாமல் எந்த விதமான அசம்பாவிதமும் ஏற்படாமல், மற்ற மாநிலங்களைப் போன்று எந்தவிதமானத் தொந்தரவும் இல்லாமல் அமைதியாக நடைபெற்றதற்குக் காரணம் எதிர்க்கட்சியும், ஓரளவு ஆளுங்கட்சியும்தான் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவ்வளவு கண்ணியமாக நடைபெற்ற காரணத்தால்தான் வேண்டத்தகாத, விரும்பத்தகாத விளைவுகள் பெரிய அளவிற்கு எதுவும் ஏற்படவில்லை. நான்காவது பொதுத் தேர்தலிலே உள்ளபடியே முன்பு எதிர்க்கட்சியாக இருந்தவர்கள் இன்றைய தினம் ஆளுங்கட்சியாக மாறியிருக்கிறார்கள். ஆளுங்கட்சியாக அன்றையதினம் இருந்தவர்கள் இன்றையதினம் எதிர்க்கட்சியாக மாறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறதென்று இதற்கு முன்னாலே எங்கள் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எடுத்துச் சொன்ன நேரத்திலே அப்பொழுதிருந்த ஆளுங்கட்சியினர் கவனிக்காமல் இருந்தார்கள். மக்களுடைய குறைகளை நாங்கள் எடுத்துச்சொன்ன நேரத்திலே அதற்கு மதிப்புத் தராத நிலை இருந்து வந்தது. ஆனால் எங்களுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. நாங்கள் அப்பொழுது, அந்தப் பக்கத்திலே இருக்கிறவர்கள் இந்தப் பக்கத்திற்கு மாறுவார்கள், இந்தப் பக்கத்திலே இருக்கிறவர்கள் அந்தப் பக்கத்திற்கு மாறுவார்கள் என்று சொன்ன நேரத்திலே கூட அவர்கள் அதைப்பற்றி ஏளனம் செய்து சிரித்தார்கள். மக்களுடைய நம்பிக்கை எங்களிடம் இருந்தது. ஆனதால்தான் இன்று எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாகவும், ஆளும் கட்சி எதிர்க்கட்சியாகவும் மாறியிருக்கிறது. அகில இந்தியாவிலேயே எந்த ஓர் அரசியல் கட்சியும் வெற்றி பெறாத அளவுக்கு மிகப் பெரிய வெற்றியை மக்கள் தேடித் தந்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே பாராளுமன்றத்திற்குப் போட்டியிட்ட எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் போட்டியிட்டார்களோ அத்தனை பேர்களும் வெற்றிபெறக்கூடிய முறையிலே மக்கள், தில்லியிலே நம்முடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு போட்டியிட்ட அத்தனைபேர்களையும் தேர்ந்தெடுத்து பெரிய ஒரு வெற்றி வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள் அவர்களுக்கெல்லாம் நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்ல; கடந்த கால நிலைமைகளைப் பற்றியும் கவர்னர் பெருமான் அவர்கள் சூசகமாக குறிப்பிட்டார்கள். கடந்த பத்தாண்டு காலமாக காங்கிரஸ் கட்சி வேறு எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வர முடியாத அளவுக்கு இந்த நாட்டிலே ஆட்சி நடத்திக்கொண்டிருந்தது. அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற நேரத்திலேயே தேர்தல் முறைகளைப் பற்றிய பல குறிப்புகளைச் சொன்னோம். அந்தக் குறிப்புகளை அன்றையதினம் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த ஆட்சியின் நிலைமையையொட்டி அப்போது அரசாங்க ஊழியர்கள் எப்படி பணியாற்றினார்களோ அதைப் போலவே இன்றையதினம் அரசாங்கத்திற்கு நல்ல முறையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள் தேர்தல் நேரத்தில் பொதுவாக அரசாங்க ஊழியர்கள் எந்தவித அரசியலிலும் சம்பந்

தப்படாமல் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு இந்த நேரத்திலே பாராட்டுதலை தெரிவிக்க விரும்புகிறேன். பாராட்டுதலைத் தெரிவிக்கின்ற நேரத்தில், ஓரிரு இடங்களில் சிறு சிறு தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். தேர்தலுக்கு முன்னாலே அரசாங்கம் எல்லா கலெக்டர்களுக்கும் ஒரு தாக்கீது அனுப்பியிருந்தார்கள். தேர்தல் முடிகிற வரையில் எந்த அதிகாரியையும் மாற்றக்கூடாது என்பதுதான் அந்த உத்தரவு. ஆனால் திருச்சி நகரத்தைப் பொருத்தமட்டில் தேர்தல் அதிகாரியாக இன்னார் வர வேண்டும் என்று அங்கு போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் விரும்பியதன் பேரில் அன்றையதினம் இருந்த அரசாங்கம் அவர் குறிப்பிட்ட அதிகாரியை தேர்தல் கமிஷனராக அங்கே கொண்டு வந்து போட்டார்கள். அதற்காக கலெக்டரிடத்தில் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம். கலெக்டர் அவர்கள் 'நீங்கள் என்ன கோரிக்கையை விரும்புகிறீர்கள்' என்று கேட்டதற்கு நாங்கள் அந்த அதிகாரியிடத்தில் ஓட்டுப் பெட்டிகளை ஒப்படைக்கக்கூடாது என்றும், மற்றும் பிரசைடிங் ஆபீசர் போன்ற அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு அவரிடம் இருக்கக்கூடாது என்றும் எடுத்துச் சொன்னோம். அதன்படி கலெக்டர் அவர்கள் ஏற்பாடு செய்த காரணத்தால் தேர்தல் அங்கு நல்ல முறையில் நடந்தது. இந்த அதிகாரி நியமனத்தைப் பற்றி நாங்கள் இந்த அரசாங்கத்துக்கும், மத்திய அரசாங்கத்துக்கும், தேர்தல் கமிஷனருக்கும் தந்திகள் கொடுத்தும்கூட பலன் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட குற்றங்களைக் களைந்தெறிய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் புதிய அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லுகின்றபோது, புதிய அரசாங்கம் எல்லோருடைய ஆதரவையும், ஆலோசனைகளையும் பெற்று ஆட்சி நடத்துகிறது என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே ஒரு அரசியல் கட்சிக்கு இருக்க வேண்டிய கண்ணியம் நம்முடைய அரசாங்கத்துக்கு இருக்கிறது. அரசாங்கப் பொறுப்பு கைக்கு வந்தவுடன் நாட்டிலே உள்ள அறிஞர்கள், அனுபவசாலிகள் அத்தனை பேருடைய ஆலோசனைகளையும், ஆதரவையும், அன்பையும் பெற்று ஆட்சியை நடத்துவது உள்ளபடியே பாராட்டத்தக்கது என்பதைக் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதற்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சி இருந்தது. அப்போது நாங்கள் எதிர்க்கட்சியிலிருந்து மக்களுடைய குறைகளை எடுத்துச் சொன்ன நேரத்தில் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். எதிர்க்கட்சியினர் புள்ளிவிவரங்களைக் கேட்கிற நேரத்தில் அன்றைய அரசாங்கம் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்தது. டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் கொடுத்த பதிலுக்கும், அரசாங்கம் கொடுக்கக்கூடிய புள்ளிவிவரத்திற்கும் சம்பந்தம் இல்லையே என்று எடுத்துச் சொன்ன நேரத்தில் அதிலே அக்கறை காட்டாமல் இருந்தார்கள். ஆனால், இன்றுள்ள அரசாங்கம் எதிர்க்கட்சிகள் எதைச் சொன்னாலும் அதிலே உண்மையிருக்கிறதா என்று கண்டறியும்





என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்று புள்ளிவிவரத்தை தவறாகக் கொடுத்ததும் விலைவாசி உயர்வுக்கு ஒரு காரணமாக இருந்தது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, தினசரி ரேடியோவில் சொல்லக்கூடிய விலைக்கும் கடையில் விற்கும் விலைக்கும் சம்பந்தமே இல்லாமல் இருந்தது. ரேடியோவில் சொல்லுகின்ற விலையை வைத்து கடைகளில் கேட்கின்ற நேரத்தில் தகராறுகள் ஏற்படக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. இதைப் பற்றி அன்று எடுத்துச் சொன்ன நேரத்தில் அரசாங்கம் அதைப் பற்றிக் கவனிக்கவில்லை. அந்த நிலைமைகள் எல்லாம் இன்றையதினம் மாறும் என்ற நல்ல நம்பிக்கை இருக்கிறது.

அதைப்போல் நம்முடைய நாட்டிலே உள்ள மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டம் ஏன் நடைபெற்றது, எதற்காக நடைபெற்றது, அந்த மாணவர்களைக் கூப்பிட்டு விசாரிக்க வேண்டாமா என்றெல்லாம் மிகத் தாழ்மையோடு அமைச்சரவையைப் பார்த்துக் கேட்டோம். ஆனால் அதை அலட்சியம் செய்தார்கள். வந்த மாணவர்களைச் சந்திக்க மறுத்தார்கள். அந்த மாணவர்களுக்குக் களங்கம் ஏற்படுகிற வகையில், யாரோ பிரியாணி வாங்கிக் கொடுத்ததாகச் சொன்னார்கள். அதனுடைய விளைவுதான் ஆட்சி மாறுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது என்பதை இன்றையதினம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, மக்கள் பட்டினியால் செத்தார்கள் என்று சொன்ன நேரத்தில் அன்றையதினம் உணவு அமைச்சராக இருந்தவர்கள் 'அவ்வாறு செத்ததை நாங்கள் பார்க்கவில்லை' என்று சொன்னார்கள். பட்டினியால் செத்தார்கள் என்று சொன்னால் உடனடியாகச் சாவதில்லை; சிறுகச் சிறுகத்தான் உயிர் போகும். அதைப்போலவே, இந்த மன்றத்திலே இன்றையதினம் இருக்கிற நண்பர் நல்லசிவம் அவர்கள், அன்று தன்னுடைய தொகுதியைப் பற்றிய ஒரு குறிப்பைச் சொன்னார்கள். 'என்னுடைய தொகுதியில் பெண்கள் உணவுக்கு வழி இல்லாமல், வேலை கிடைக்காத காரணத்தால் தலையில் இருக்கும் முடியை அமெரிக்காவிலிருந்து வாங்க வருபவர்களுக்கு விற்பனை செய்கிறார்கள்' என்று எடுத்துச் சொன்ன நேரத்தில் அன்று ஆளும் கட்சியில் இருந்தவர்கள் சிரித்தார்களே தவிர, நம்முடைய நாட்டு மக்களின் பரிதவிப்பை உணரவில்லை.

இந்த நிலைமைகள் எல்லாம் போக நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மத்திய சர்க்கார் நமக்கு நல்ல உதவிகளைச் செய்யவேண்டும். இன்றைக்கு இருக்கின்ற அரசியல் அமைப்பு முறையில், மாகாண சர்க்கார் சுயேச்சையாக ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. அதை நம்முடைய சர்க்கார் மாற்றியமைக்க முயலவேண்டும். நல்ல அதிகாரங்களைப் பெற வேண்டும். சுயேச்சையாகச் செயல்படுகிற அளவுக்கு நிலைமைகளை உண்டு பண்ண வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த நாட்டு மக்கள் எல்லோராலும் பேசப்படுகிற உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க முடியும். இந்த உணவுப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு

எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் அது முதல் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டு, நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு கொண்டு போனால் லாரியைப் பறிமுதல் செய்வதோடு மட்டுமல்ல; கொண்டு போகிறவர்கள் யாரோ அவர்களுக்கு அபராதம் போடுவதோடு கூட சிறைத் தண்டனையும் கொடுத்தால்தான் பயம் ஏற்படும் என்ற நிலையில் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த நான்கு, ஐந்து தினங்களில் மூன்று லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள தானியங்களைக் கைப்பற்றி இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை அன்றையதினம் இருந்திருந்தால் உணவுப் பண்டங்கள் கள்ள விலையில் விற்கப்படாமல் இருந்திருக்க முடியும்; வெளி மாநிலங்களுக்கும் கள்ளத்தனமாகச் சென்றிருக்காது. அவ்வாறு கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுகின்றவர்கள் அத்தனை பேரும் தங்களுக்கு வேண்டியவர்கள் என்ற காரணத்தால் அன்றையதினம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு விட்டார்கள். இன்றையதினம் அவர்களுக்கெல்லாம் பயம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் வெளியே தானியங்கள் செல்லுகின்ற நிலைமை இல்லை. வெளி மாநிலங்களுக்கு அரிசி தேவைப்பட்டால் அரசாங்கத்தின் மூலம் அனுப்பலாம்; இந்தச் சபையோ, மந்திரி சபையோ எவ்வளவு அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்து அனுப்பலாம். அப்படிப்பட்ட முறையில் கேரள முதலமைச்சர் பதவியேற்ற சில தினங்களுக்குள் நம்முடைய முதலமைச்சர் அவர்களைச் சந்திக்கும் நிலைமை ஏற்பட்டது. திரு. ஏ. கே. கோபாலன் அவர்களும் அந்த நிலைமையை எடுத்துச் சொல்லுகின்ற நிலைமை ஏற்பட்டது. இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே இங்கே உள்ள நிலைமை என்னவென்றால் கேரளாவுக்கு அரிசி கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. முன்னாலே இருந்த அரசாங்கம் பட்ட கடனை இன்றையதினம் தீர்க்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் பார்த்தால் கிட்டத்தட்ட 18,000 டன் அரிசி அவர்களுக்கு நாம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதையும் கொடுப்பது என்று நாங்கள் இருக்கிறோம். அதே நேரத்தில் நம் நிலைமை பற்றியும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இங்கு கொள்முதல் செய்யப்படுகிற நிலைமை பற்றி நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். கொள்முதல் செய்கிற நிலைமையில் முன்பிருந்த நிர்ப்பந்தம், முன்பிருந்த பலவந்தம் எவ்வளவு என்று எண்ணிப் பார்க்கவேண்டும். முன்பு யாரை நிர்ப்பந்தப்படுத்தி, யாரை பயமுறுத்தி வாங்கினார்கள்? அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருந்தவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வாங்கினார்கள். ஆனால், இன்றையதினம் அவர்களிடம் கொஞ்சம் மரியாதையாக வசூல் செய்யவேண்டும், அவர்கள் இந்த நாட்டு மக்கள் என்ற எண்ணத்தில் வசூலிக்கவேண்டுமென்று இன்றையதினம் தாக்கீது பிறப்பித்திருப்பதாக நான் அறிகிறேன். ஏனெனில் ஒரு ஏக்கருக்கு 12 மூட்டை என்று வைத்துக் கொள்வோம். 12 மூட்டை லெவி கேட்டார்கள். ஆனால் 12 மூட்டை விளையவில்லை என்றால், எட்டு மூட்டைதான் விளைந்தது என்று சொன்னால் நான்கு மூட்டை விலைக்கு வாங்கிக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் அன்று இருந்தது. ஆனால் இன்றையதினம் அந்த நிலையை மாற்ற வேண்டு





மென்று அதை மாற்றுவதற்கு சாதகமாக அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று வைத்திருப்பவர்களுக்கு இன்றையதினம் கொஞ்சம் பாதுகாப்பு இருக்கிறது. அதிகமான எண்ணிக்கை உள்ள நிலம் இருக்கிறவர்களிடமிருந்து அதிகமாக வசூல் செய்யவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அப்படி வசூல் செய்தால்தான் இன்றையதினம் நாட்டு மக்களுக்கு நல்ல அரிசியை, குறைந்த விலையில் கொடுப்பதற்கு ஒரு நல்ல நிலை ஏற்படும். அந்த நேரத்தில், தேர்தல் நேரத்தில் நாம் ஒன்றை கவனித்தோம். மக்களுடைய வோட்டுகளை பெற வேண்டும் என்பதற்காக இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் சர்க்கார் ஒரு முறையைக் கையாண்டது. அன்றையதினம் லெவி முறையில் நெல் கொள்முதல் செய்யவேண்டாம் என்று தாக்கீது பிறப்பித்து விட்டது. இன்றையதினம் கோடவுனிற்குச் சென்று பார்க்கிறபோது அரிசி ஸ்டாக் இல்லை, ஒரு நாளைக்குத்தான் அரிசி இருக்கிறது. 500 டன்தான் இருந்தது. அதுவும் கெட்டுப் போய் இருந்தது. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். தேர்தல் வருகிறது என்று சொன்னால் சட்டத்தைத் தளர்த்துவதும் தேர்தல் முடிந்த பிறகு சட்டத்தை கடுமையாக்குவது என்ற பாலிசியை முன்பிருந்த அமைச்சரவை மேற்கொண்டிருந்தார்கள். அவற்றையெல்லாம் இன்றையதினம் மாற்றியமைப்பதற்கு ஒரு வழிவகை இருக்கிறது என்பதைத்தான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். விலைவாசி நாட்டில் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. விலை ஏறிக்கொண்டே போகிறது. அதைத் தடுக்க வேண்டுமென்று அன்றையதினம் இருந்த அமைச்சரவையை பல நேரத்தில் நாங்கள் கேட்டுப் பார்த்தோம். அதற்கு அன்றையதினம் அமைச்சரவை சொன்ன பதில் சூப்பர் மார்க்கட்ஸ் வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். சூப்பர் மார்க்கட்ஸ் சென்னையில், திருச்சியில், கோவையில் வைக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். இப்படி சூப்பர் மார்க்கட்ஸ் வைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் விலையை குறைக்க முடியுமா என்று கேட்டோம். சூப்பர் மார்க்கட்ஸ் வைத்தார்களே தவிர நிலைமை என்ன என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். திருச்சியிலே ஒரு சூப்பர் மார்க்கட் வைத்தார்கள். அது வைத்ததற்குப் பிறகு அங்கு ஜவுளிகள், மற்றப் பண்டங்களை வாங்க மக்கள் போனார்கள். ஒரு ஷாப்பிலே வேட்டி 11 ரூபாய் என்று சொன்னால் 11 ரூபாய்க்கு ஒரு ஜோடி வேட்டி கொடுத்தார்கள். அங்கு வந்திருந்த வேட்டிகளை ஜோடியாக வைத்திருந்தார்கள். 11 ரூபாய்க்கு ஒவ்வொரு ஜோடி வேட்டி கொடுத்து விட்டார்கள். வியாபாரம் தெரியாதவர்களை அங்கு போட்ட காரணத்தினால் ஒரு வேட்டி 11 ரூபாய் என்று தெரியாது 11 ரூபாய்க்கு ஒரு ஜோடி கொடுக்கிற நிலைமை ஏற்பட்டது. அதேபோல்தான் வாசனைத் திரவியங்களும். அதேபோல்தான் மற்ற பண்டங்களும். இப்படி விற்று ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. அது மட்டுமல்ல. இன்றையதினம் அங்கு போட்டிருக்கிற அதிகாரிகள், சிப்பந்திகள் இவர்களின் சம்பளம் மற்றவைகளை கணக்குப் பார்த்தால் நாள் ஒன்றுக்கு 15,000 ரூபாய்க்கு விற்பனையானால்தான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியும் நஷ்டம் ஏற்படாமல்– லாபம் கிடைக்காவிட்டாலும் கவலையில்லை, நஷ்டம் ஏற்படாத நிலை ஏற்படும். ஆனால்

நிலைமை என்ன? நாள் ஒன்றுக்கு 10,000 ரூபாய் அளவிற்கு விற்பதற்கு வழியில்லை. அதே நேரத்தில் நாள் ஒன்றுக்கு 10,000 ரூபாய் அளவிற்கு விற்பனையாக வேண்டும் என்றால் எவ்வளவு ஸ்டாக் வேண்டும்? எவ்வளவு மூலதனம் போடவேண்டும்? அந்த மூலதனத்தைப் போடாமல் இன்றையதினம் தினசரி 10,000 ரூபாய்க்கு விற்பனையை எதிர்பார்த்தால் அது எப்படி முடியும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். எனவே அதில் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் வேளாண்மைக்கு முதல் இடம் கொடுத்து வேளாண்மை பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். வேளாண்மையைப் பொறுத்தவரையில் இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தில் ஏ.டி.டி. 27 என்ற தானியத்தைப் பயிரிடுகிறார்கள். அது அதிகப்படியான விளைச்சலைத் தருகிறது. அதேபோன்று கோவைப் பகுதியில் ஸி.ஓ. 25 என்ற தானியத்தைப் பயிரிடுகிறார்கள். இவை பயிரிடுகிற நிலை பற்றி கவனிக்கவேண்டும். ஏ.டி.டி. 27 என்பதற்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்படியாக உரம் போடுகிறோமோ அந்த அளவிற்கு விளைச்சலை கவனிக்கவேண்டும். ஏ.டி.டி. 27 என்பதற்கு எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக விளைகிறதோ அதேபோன்று அதைவிடக் கீழான நிலைமைக்குப் போய் விடுகிறது. ஆகவே நல்லவிதத்தில் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் நல்ல தரமான உரங்களை தரவேண்டும். உரம் தேவை என்று கேட்கப்படுகிறபோது உள்ளபடியே கூட்டுறவு முறையில் அல்லது பஞ்சாயத்து யூனியன் மூலம் உரங்கள் நல்லமுறையில் கொடுக்கப்படவில்லை என்று பல புகார்கள் அன்றையதினம் ஆளும் கட்சியில் இருந்தவர்களே கூறினார்கள். விவசாயத்தைப் பெருக்குவதற்கு தரமான விதைகளை விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும். ஆனால் பொறுக்கு விதைகள் கொடுக்கிறோம், பொறுக்கு விதைகள் கொடுக்கிறோம் என்று அன்றையதினம் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த விதைகளை வாங்கிப் பார்க்கிறபோது அந்த விதைகளைப் பொறுக்க வேண்டிய நிலைதான் இருந்தது, காரணம் அவ்வளவு பதர் இருந்தது. யார் யார் தங்களுக்கு வேண்டியவர்களோ அவர்களிடம் இருந்து அவற்றை கொள்முதல் செய்தார்களே தவிர உத்தமமான விதைகளா, தரமான விதைகளா என்று பரிசீலனை செய்யவில்லை. அதன் காரணமாகவும் பலவிடங்களில் விளைச்சல் மோசமாகவிருந்தது. ஆகவே விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகள், தரமான உரங்கள் கொடுக்கப்படவேண்டும். நல்ல உரங்கள் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைப்பதில் பற்றாக்குறை இருக்கிறது. கேட்ட அளவிற்கு இன்றையதினம் உரம் கிடைப்பதில்லை. அதேநேரத்தில் நம் நாட்டிலிருந்து ஏராளமான அளவிற்கு பிண்ணாக்கு இன்றையதினம் வெளிநாடுகளுக்குச் செல்கிறது. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நம் கப்பல்களில் நிறைய பிண்ணாக்கு செல்கிறது. அங்கு சென்று அது உரமாக்கப்படுகிறது. அதை நாமே பயன்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். அவற்றை நம் வயல்களில் போடாமல் வெளி



நாடுகளுக்குச் செல்கிற காரணத்தால் இன்றையதினம் அது அவர்களுக்கு நல்லமுறையில பயன்படுகிறது. ஆகவேதான் உரத்தை நம நாட்டில் தயார் செய்யவேண்டும் என்பதை கவர்னர் பெருமான் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி உரத்தை நம் தமிழகத்தில் தயார் செய்து இந்த நாட்டு விவசாயிகளுக்கு, உழவர்களுக்கு அதைக் கொடுக்கவேண்டும். விவசாயம் செய்கிற உழவர்களுக்கு நல்லமுறையில் கடன் வசதி செய்து கொடுக்கவேண்டும். அப்படி கடன் வசதி செய்து கொடுக்க பல தொகைகளை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னாலும் விவசாயிகளுக்கு நேரடியாக நல்லமுறையில் அது கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நேரடியாக கிடைப்பதில்லை. இடையில் பலர் அதை அபகரித்துக் கொள்கிறார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டோம். அந்த நிலையெல்லாம் மாற்றப்படவேண்டும் என்று கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே அந்த நிலை இன்றையதினம் மாறிக் கொண்டேயிருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்கள் தம் உரையில் சேலம் உருக்காலைபற்றி சொல்லியிருக்கிறார்கள். சேலம் உருக்காலைபற்றி இந்த மாமன்றத்தில் மூன்று, நான்கு ஆண்டுகளாகப் பேசிப் பார்த்தோம். சேலம் உருக்காலை வந்து விடும், நிச்சயமாக வந்துவிடும், அப்படி வராவிட்டால் ராஜிநாமா செய்வோம், அதற்காக முயற்சிகள் எடுக்கிறோம், அதற்கான பேச்சு வார்த்தைகள் நடக்கிறது, ஜப்பானில் இருந்து வந்திருக்கிறார்கள், வெளிநாடுகளில் இருந்து வந்து பார்க்கிறார்கள் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர இந்த மன்றத்தில் அதற்காக அனைவரும் சேர்ந்து நல்லதொரு முடிவை அன்றையதினம் எடுக்க முடியவில்லை. ஆக, சேலம் உருக்காலை நிச்சயமாக நமக்கு வேண்டும். அதற்காக இந்தச் சர்க்கார் பாடுபடும். ஆளும் தரப்பில் இருந்து மட்டுமல்லாது எதிர்தரப்பில் இருந்தும் அதற்கு நல்ல ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். அதன் நிலைமை பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும். மந்திரிசபை அமைந்தவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள எங்கள் ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முதலில் தங்கள் சம்பளத்தை பாதியாக குறைத்துக் கொள்வோம் என்று குறிப்பிட்டார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பொது மக்களின் பிரதிநிதிகளாக வந்திருக்கிற நிலையில் ஆயிரம் ரூபாயா என்று மக்கள் எண்ணுகிற அளவிற்கு இருக்கக் கூடாது, ஆகவே அதைக் குறைத்துக் கொள்ளவேண்டும், ஆடம்பரங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார்கள். இப்படி சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு சென்னையில் குடும்பம் நடத்த முடியுமா என்பது வேறு. அப்படிச் செய்திருப்பது ஏழை எளிய மக்களைப்போல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். அது மட்டுமல்ல. அன்றையதினம் ஆடம்பரக் கார்களை வாங்கினார்கள். ஏழைகளின் பிரதிநிதிகளாக இருக்கிற நாம் 75,000 ரூபாய்க்கா கார் வாங்கவேண்டுமென்று அன்று கேட்டோம். ஆனால் அதற்கு சரியான பதில் இல்லை. ஏதோ ஒரு பதில் கொடுக்கப்பட்டது. ஒருவர் வாங்கியதைப் பார்த்து

இன்னொரு அமைச்சரும் வாங்கினார். ஆனால் இன்றையதினம் அத்தகைய ஆடம்பர கார் ஒரு அமைச்சருக்கும் இல்லை. சாதாரண கார்களில்தான் வருகிறார்கள். ஏழை மக்கள், இப்படிப்பட்ட பெரிய காரிலா பவனி வருவது என்று நினைப்பார்கள். ஆகவே, அந்த வகையில் சாதாரண கார்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூடுமானவரையில் எந்த அளவிற்கு வசதிகளைக் குறைத்துக் கொள்ளவேண்டுமோ அந்த அளவிற்கு குறைத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பணத்தை மிதப்படுத்தி, ஆடம்பரச் செலவுகள், ஆர்பாட்டச் செலவுகள், வீண் விரயங்கள் இவற்றைத் தவிர்த்து—தங்கள் கட்சிக்காரர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காக சில இலாகாக்கள் உற்பத்தி செய்ததை அதையெல்லாம் இன்றையதினம் குறைத்து அந்தப் பணம் மக்களுக்குப் பயன்படுகிற அளவில் இந்த அரசாங்கம் நல்ல வழிவகைகளைக் காணும் என்று நம்புகிறேன். ஆகவேதான் நாங்கள் ஒரு புதிய பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். இன்று நாட்டிலே 19
முற் பகல் 9-50 ஆண்டுகாலமாக ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி இந்தியா பூராவிலும் தனக்கு இருக்கிற பலத்தையெல்லாம் செலவழித்தும் இந்தத் தேர்தலிலே தோல்வி கண்டு விட்டது என்றால், அப்படிப்பட்ட காங்கிரஸே தோல்வி கண்டு விட்டது சாதாரணமாகத் தமிழகத்திலே இருக்கிறவர்கள் தவறான வழியில் சென்றால் நமக்கும் அந்தப் பாடம் பொருந்தும் என்பதால் நல்ல முறையில் ஆட்சி அமைய பாடுபடுவோம் என்று கவர்னர் அவர்கள் சூசகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கவர்னர் உரைக்கு எங்கள் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி தெரிவித்து இந்தத் தீர்மானத்தை முன் மொழிகிறேன், வணக்கம்.

* திரு. மு. சண்முகம்: கனம் அவைத் தலைவர் அவர்களே, தோழர் எம். எஸ். மணி அவர்கள் முன்மொழிந்து கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு நன்றியுரை அளிக்கும் தீர்மானத்தை நான் வழி மொழிந்து இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே அவர்கள் குறிப்பிட்டபடி நடைபெற்ற தேர்தல் இந்த நாட்டு மக்களுடைய பொறுப்புணர்ச்சியை வெளிப்படுத்தக் கூடிய முறையிலே மக்கள் தாங்கள் இந்த நாட்டு ஆட்சியின் பொறுப்பை எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஒரு உணர்வை அறிந்த முறையிலே இந்தத் தேர்தலை நடத்தியிருக்கிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றி நான் பெரிதும் பாராட்டுகிறேன். குறிப்பாக, தமிழகத்திலே உள்ள மக்கள் நடைபெற்ற ஆட்சியின் நிலைமைகளை நன்கு உணர்ந்து, அந்த ஆட்சியினாலே நலன்கள் ஏதும் இல்லை என்று உணர்ந்து, மக்களின் நலனுக்காகப் பாடுபடும் ஆட்சி தேவை என்று உணர்ந்து, அந்தக் காரணத்தினாலே தங்களுக்கெனத் தேடிக் கொண்ட ஆட்சியை அவர்கள் பெரிதும் பாராட்டியிருப்பதைப் பற்றியும் நான் கவர்னர் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே ஆட்சியினர் வகுத்த திட்டங்கள் பெரிதும் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் அளிக்கவில்லை என்பதை அவர்கள் உரையிலே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் உரைக்குப் பாராட்டுதல் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திட்டங்கள் பல வகுக்கப்பட்டிருந்தும் கூட, அவைகள் ஏன் பலன் அளிக்க கூடிய வகையில் செயல்படுத்தப்படவில்லை என்பதற்கான காரணங்களை அவர்கள் கூறியிருக்கிறார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலேயும் அரசினர் பல பெரிய திட்டங்களை வகுத்தும், கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டும் கூட, எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டதைப்பற்றி பெரிதும் அவர்களைப் பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் மக்களுக்குப் பயன்படும் அளவில் அரசு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்கியிருப்பதால், இன்றைய அமைச்சரவை அந்தப் பொறுப்பை உணர்ந்து, மக்களுக்குப் பலன் அளிக்கும் வகையில் ஆட்சியை மேற்கொள்ளும் நிலைமை இருக்கிறது என்பதை கவர்னர் பெருமான் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் துறையிலே மிக முக்கிய பிரச்னை, மக்களிடத்திலே எழுச்சியை ஏற்படுத்தியிருக்கக் கூடிய பிரச்னை உணவுப் பிரச்னை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் பல முயற்சிகளிலே, உற்பத்தி விஷயத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கும் வகையில், எதிர்பார்த்த அளவு பலன் அளிக்கவில்லை என்று அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. அதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளில், விவசாயிகளின் நிலைமைகளில் அவர்கள் வாழ்க்கையை நடத்துவதிலும், உணவுப் பொருள்கள் உற்பத்தியில் குறைந்த செலவில் சீரிய முறையில் உற்பத்தி செய்வதற்கு வழிவகைகள் அரசினர் திட்டங்களில் அமைக்கப்பட்டிருந்தாலும், அவைகள் பயன்படக் கூடிய முறையிலே செயல்படுத்தப்படாமல், விவசாயிகள் குறைந்த செலவில் உற்பத்தியைப் பெருக்க வழிவகைகளைக் காண முடியாது குறைபாடுகள் இருந்து வந்தன. அவைகளைப் போக்க இன்று ஆட்சியிலே இருக்கிற அமைச்சரவை வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வழிவகைகளை மிகவும் ஊக்கத்தோடு கவனிக்க வேண்டும், அதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது என்பதை கவர்னர் பெருமான் அவர்களுக்கு கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.

இன்றைய விவசாயிகளின் நிலைமையை கவனிக்கும்போது, அவர்கள் வாழ்க்கையை நடத்துவதிலும், விளைபொருள்கள் உற்பத்தியை மேற்கொள்ளுவதிலும் அதிகச் செலவில் தங்கள் வாழ்க்கையை நடத்தும் நிலைமை இருக்கிறது. இதரப் பொருள்களைப் பெறுவதிலும், உற்பத்திக்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதிலும் குறைந்த செலவில் வாழ்க்கையை நடத்திப் பொருள்களைப் பெறுவதற்கில்லாத நிலைமை இருந்து வருகிறது. குறைந்த செலவிலே வேண்டிய வசதிகளைப் பெறுவதற்கு நிலையான வழிகளை அரசாங்கம் செய்து வந்த வழிவகைகள் எந்த விதத்திலும்

பயன்பட்டதாகத் தெரியவில்லை. இந்த அமைச்சரவையில் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறவர்கள், விவசாயிகளின் உணவுப் பொருள் உற்பத்திச் செலவினங்களில் எந்தெந்த வகையில் குறைந்த வகையில் செலவினங்கள் ஏற்படவேண்டுமோ அதற்கான வழிகளைப் பரிசீலனை செய்து வருகிறார்கள் என்ற உறுதியை கவர்னர் பெருமான் அவர்களுக்கு அமைச்சரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயிகளுக்காக விதைப் பண்ணைகள் வைத்து நடத்துவதிலே அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற முயற்சியில் இருக்கக் கூடிய குறைகளைப்பற்றி விவசாயிகளிடமிருந்து நான் அறிந்துள்ளவற்றை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகளின் தேவைக்காக ஏற்படுத்தப்பட்ட விதைப் பண்ணைகள் உண்மையில் பலன் தரக்கூடிய வகையில், நலன் தரக் கூடிய வகையில் இல்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இது விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து அறியப்படும் குறைபாடு ஆகும். இவைகளைப் பற்றி அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லப்பட்டிருந்தும் அவைகள் மீது கவனம் செலுத்தப்படவில்லை. விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக விதைப் பண்ணைகள் ஏற்பட்டன; ஆனால் அவைகளால் பெறக் கூடிய பலன் சிறு அளவுக்குக்கூட இல்லாத முறையில் அவைகள் செயல்பட்டு வந்தன. விதைப் பண்ணைகளில் உண்மையான விதைகள் உற்பத்தி செய்யப் படவில்லை. உற்பத்தி ஆகக் கூடிய விதைகள் கூட பலன் தராத வகையில் உற்பத்தி செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இதிலே முக்கியமாக கவனம் செலுத்தி, விதைகளை நல்ல முறையில் உற்பத்தி செய்து கொடுக்க முக்கியமாக கவனம் செலுத்த வேண்டியதில் இந்த அமைச்சரவைக்குப் பொறுப்பு அதிகமாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த முறையில் இந்த அமைச்சரவை கவனம் செலுத்தும் என்று கவர்னர் பெருமான் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உணவுப்பொருள்கள் விலைவாசி உயர்வு பற்றி இதுவரையில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளில், கட்டுப்பாடுத் திட்டங்கள் மூலமாக எந்த வகையிலும் ஒழுங்கு செய்ய முடியாது இருந்தது. இந்த அமைச்சரவை பொறுப்பை மேற்கொண்டதிலிருந்து, தங்களுக்கு மக்களால் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக, விலைவாசி உயர்வை ஒழுங்கு படுத்தக் கடமைப் பட்டுள்ளவர்கள் என்றாலும், மிகவும் சிக்கலான பிரச்னையாக இருப்பதால், அவர்கள் கடமைப்பட்டுள்ளவர்களாக இருந்தாலும் மத்திய அரசின் உதவியின்றி இந்தப் பிரச்னையை விரைவிலே சுலபமான வழியில் தீர்க்க முடியாது என்பதை கவர்னர் பெருமான் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பாராட்டுகிறேன். அந்த வகையில் விலைவாசிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்த அமைச்சரவை எடுத்துக்கொள்ளும் முயற்சியில் மத்திய அரசாங்கத்திடமிருந்து வேண்டிய உதவிகளை கவர்னர் பெருமான் அவர்கள்





தன்னுடைய செல்வாக்கினால் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உணவுப் பொருள் கொள்முதல் திட்டங்களிலே இதுவரையில் அரசு பின் பற்றி வந்த செயல்பாடுகள் பெரும்பாலும் விவசாயிகளுடைய நலன்களை பாதிக்கக் கூடிய அளவிலே அமைந்திருந்தன, அவை அந்த முறையிலேதான் கையாளப்பட்டு வந்தன என்ற பெருங் குறையை நாம் விவசாயக் குடி மக்களிடமிருந்து கேள்விப்பட்டிருக்கிறோம். கொள்முதல் திட்டங்களிலே ஒழுங்கான முறைகளை கையாள்வதிலே மிகுந்த சிக்கல்கள் இருந்து வருகின்றன என்பது உண்மை. அரசாங்கத்தின் கட்டுப்பாடு திட்டங்களை நிறைவேற்றுவதில் அவர்கள் ஒத்துழைக்கக் கூட முடியாத நிலைமை இருந்த சூழ்நிலைதான் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு தடையாக இருந்தது என்பதை அரசாங்கம் மறுத்துவிடுவதற்கில்லை. விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் உபயோகத்திற்குப் போக உபரியாக இருக்கக்கூடிய தானியங்களை வலுவிலே அரசாங்கத்திற்கு விற்பதற்கு முன்வரக்கூடிய மனப்பான்மையை அவர்கள் பெறுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்த வகையிலும் இடையூறு இல்லாமல் அவர்களே வலுவிலே வந்து மக்களின் உபயோகத்திற்காக தங்களிடமுள்ள உபரி தானியங்களை வழங்க முன்வரும் மனப்பான்மையை கொள்வதற்குத் தக்க வகையில் பலவித சலுகைகளை இந்த அரசாங்கம் அவர்களுக்கு அளிப்பதற்கு முயற்சி எடுப்பது பற்றி பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. பொது மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் அவர்கள் எந்த நிலைமையை எதிர்பார்க்கிறார்கள் என்பதற்கேற்ப அதற்கு வேண்டிய வழிவகைகளையும் செய்வதற்கு அவர்கள் உணவுப் பொருள் உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதற்கு வேண்டிய வகைகளிலும் முயற்சிகளை எடுத்துக் கொள்வதற்கு இந்த அமைச்சரவை முன்வரும் என்பதை இந்த அமைச்சரவை சார்பிலே பொதுமக்களுக்கும் நான் இந்த சந்தர்ப்பத்திலே கவர்னர் பெருமான் உரையை அனுசரித்து தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயக் காரியங்களுக்கு சிறிய பாசன வசதித் திட்டங்கள் சம்பந்தமாக சென்ற ஆட்சியிலே மக்களால் பல குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தும்கூட, அவர்களால் பெரிய திட்டங்களில் செலுத்தப்பட்ட கவனம் சிறிய பாசன வசதிகளுக்கு போதுமான அளவில் செலுத்தப்படவில்லை என்பதை நான் கூறாமல் இருக்கமுடியவில்லை. பெரிய திட்டங்களும் மக்களுக்கு அவசியம் என்று கருதினாலும்கூட, சிறிய பாசனத் திட்டங்கள்தான் நேரடியாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பயன் தரக்கூடியவை என்பதை இந்த அமைச்சரவை கவனத்தில் எடுத்துக்கொண்டு, எதிர்காலத்தில் சிறிய பாசனத் திட்டங்களில் அதிக கவனம் செலுத்தி விவசாயிகள் நலன் பெறக்கூடிய பாசன வசதிகளைத் தேடிக்கொடுப்பார்கள் என்ற உறுதிப்பாட்டை நான் இந்த அமைச்சரவையின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

சென்ற ஆட்சி, வரவு-செலவுத் திட்டத்தில் பற்றாக்குறைக்காக வரி உயர்வை ஏற்படுத்தியபொழுது, ரூபாய் 1¾ கோடி துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்காக வரி உயர்வை ஏற்படுத்திய பொழுது, அது சரியல்ல என்று நாங்கள் சொல்லியும், வேறு வழியில்லை ரூபாய் 1¾ கோடி துண்டு விழுவதைச் சரிகட்டுவதற்கு என்பதாகக் கருதி வரி உயர்வை ஏற்படுத்தினார்கள். ஆனால், கூடிய விரைவிலேயே அதையே அந்த அரசாங்கம் தள்ளுபடி செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டது. தேர்தல் சந்தர்ப்பத்தில் அப்படிச் செய்வது தேவை என்று தோன்றி அதே ஆண்டிலே அவர்களே அந்த வரி உயர்வைக் குறைப்பதற்கான நிலைமை ஏற்பட்டது. அம்மாதிரி நிலைமையை அவர்கள் உணர்ந்ததுபற்றி நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறத்தான் வேண்டியிருக்கிறது. இருந்தாலும் கூட நிலவரி விதிப்பிலே ஒரு ஒழுங்கான முறை கையாளப்படவேண்டும் என்பது உண்மை. இந்த அமைச்சரவை இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, மக்களுடைய நல்வாழ்வுக்கு வேண்டிய வகையிலே அதைத் திருத்தி அமைப்பார்கள் என்பதை நாம் நம்பலாம். அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய உதவியும் தேவைப்படும், அதையும் அவர்கள் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

கூட்டுறவு இயக்கம் சம்பந்தப்பட்ட மட்டில் கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மிகவும் முக்கியமானது. மக்களுடைய வாழ்க்கைத் துறையிலே எந்தத் துறையும் கூட்டுறவு முறை மூலம்தான் மனிதனுடைய வாழ்க்கைத்தரம் அமைய வேண்டும் என்பதில் நான் முழுநம்பிக்கை கொண்டவன். எந்தத் துறையிலும் கூட்டுறவு இயக்கம் மூலம் வழிவகைகள் செய்யப்பட்டு, மக்களுடைய தேவைகளையெல்லாம் கூட்டுறவு இயக்கம் மூலம் அவர்கள் பெறுவதற்கு வேண்டிய அமைப்பு ஏற்பட்டால்தான், உண்மையில் மனித சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு உள்ள நிலைமைகள் சரிக்கட்டப்பட்டு, சோஷலிஸ சமுதாயம் நாட்டில் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. அரசாங்கம் இதிலே முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையில் சட்ட விதிகளெல்லாம் பெரும்பாலும் சீர்திருத்தப்பட்டு அமுலுக்குக்கொண்டுவரக்கூடிய நிலையில் தான் இருக்கிறது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பல விதிகள் திருத்தப்பட வேண்டும், அனுபவத்திற்குத் தக்க முறையில் விதிகள் அமைய வேண்டும். இன்றைய நிலைமையில் கூட்டுறவு இயக்கத்திற்காக அமைக்கப்பட்ட சட்ட திட்டங்களில் பல குறைபாடுகள், அனுபவத்திற்கு ஒத்து வராத முறைகள் கூட இருந்து வருகின்றன. அவைகளெல்லாம் திருத்தப்பட்டு, அனுபவத்திற்குத் தக்க முறையில் கூட்டுறவு சட்டத்திட்டங்கள் அமையுமானால், மனித சமுதாயத்தினுடைய வாழ்விலே பல துறைகளிலும் அவைகள் சீர்திருத்தப்பட்டு நல்வாழ்வு பெறக்கூடிய வகையிலே அவர்களுக்கு வழி காட்டும். கூட்டுறவு இயக்கத்தின் மூலம்தான் மனித சமுதாயத்திற்கு நல்வாழ்வு அளிக்க முடியும் என்பதை நான் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவைகள்





பரிசீலனை செய்யப்பட்டு, சீர்திருத்தப்பட்டு, திருத்தப்பட்டு, கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் அமைய வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரம் வழங்கும் திட்டம் மிக மிக முக்கியமானது. விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவது பற்றி நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவதில் கையாளப்படும் முறைகளினால் விவசாயிகளுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலில் முழு நேரத்திலும், விவசாயிகளுக்கு தேவைப்படும் பொழுது மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்தும் முறையில் வழிவகை செய்யப்பட்டது. ஆனால், நாளடைவிலே முழு நேரத் திட்டமானது கைவிடப்பட்டது. நாடு முழுவதற்கும் தாங்கள் மின்சாரம் கொடுத்து வழங்கினோம் என்ற ஒரு பெயரை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு சிறிய கருத்தில், அவர்கள் எல்லா கிராமங்களுக்கும் வழங்க வேண்டும் என்ற ஒரு தவறான கருத்து கொண்டு, மின்சாரம் வழங்கப்படும் முறையை திருத்தி அமைத்து, முழு நேரமும் மின்சாரத்தை விவசாயிகள் பெறமுடியாத நிலையில் அந்தத் திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு குறித்த நேரத்திற்கு மட்டும் விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்பட்ட நேரத்தில் பயிர்களுக்கு தண்ணீர் இறைக்க மின்சாரம் கிடைக்கவேண்டும். அல்லது, குறித்த நேரத்தில்தான் மின்சாரம் கிடைக்கும் என்ற முறை விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுத்தும், விளைபொருள்கள் மிகவும் பாதிக்கப்படும், உற்பத்தி பாதிக்கப்படும் என்பதை அந்த அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, மின்சாரம் வழங்கும் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். மின்சாரம் எந்த நேரத்திலும் விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் அமைக்கப்பெற்றால்தான், உணவு உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் தூண்டப்படுவார்கள். குறித்த நேரத்தில் மின்சாரம் வழங்கப்படும் என்ற நிலை இல்லாமல் எந்த நேரத்திலும் விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான வழிவகைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

எல்லா வகைகளிலும் ஆட்சித் துறையிலே சீர்திருத்தங்கள் செய்யக்கூடிய பல குறைபாடுகள் இருந்து வருகின்றன என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. இதன் விளைவுதான் சென்ற தேர்தலில் பொதுமக்கள் கூறி இருக்கும் ஒரு முடிவான விடையாகும். ஆகவே, இந்த அரசு அதை உணர்ந்து செயலாற்ற கடமைப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவியும் மிகவும் தேவைப்படுகிறது என்பதை ஒருவரும் மறுப்பதற்கில்லை என்பதை கவர்னர் பெருமான் உரையிலேயே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த அரசினுடைய செயல்பாடுகள் மக்களுக்கு எதிர்காலத்தில் பயன் அளிக்கும் வகையில், பொருளாதாரத்தில் சீர்பாடு ஏற்படும் வகையில் கையாளப்படவேண்டும். அந்தப் பணியில்

மத்திய அரசினுடைய உதவி மிகவும் தேவைப்படும், அந்த உதவியை தன்னுடைய செல்வாக்கினால் இந்த அரசிற்குத் தேடிக் கொடுத்து இந்த ஆட்சியோடு அவர்கள் ஒத்துழைப்பு இருக்கும் என்கிற நம்பிக்கையுடன் இந்த உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இனிமேல் பேசுகின்ற மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கால்மணி நேரம், அதாவது 15 நிமிட நேரம், என்கிற கால வரம்பிற்குள் பேசவேண்டும். இந்தக் கால வரம்பு இந்த மன்றத்தில் நடைமுறையில் இருந்து வருகின்ற வழக்கத்தைப் பின்பற்றியதுதான். பிறகு, 10 மணிக்கு நடைபெறவிருக்கும் அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு இணங்க கால வரம்பைக் கூட்டுவதோ, குறைப்பதோ செய்யலாம். அடுத்தாற்போல, மதிப்பிற்குரிய திரு. டி. எம். நல்லசாமி அவர்கள் பேசுவார்கள்.

*** திரு. தோ. மு. நல்லசாமி :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரைமீது எங்கள் கட்சியின், என்னுடைய, சில கருத்துக்களை எடுத்துச்சொல்ல முன் வருகிறேன். அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இதே மன்றத்திலே தனிநபர் தீர்மானத்தின் மூலமாக நிலத்தின் மேலான எல்லா வரிகளையும் ரத்து செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார்கள் என்பது என்னுடைய ஞாபகம். அப்படிப் பூரண வரிவிலக்குக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்திய திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கும் இந்த நேரத்தில் விவசாயிகள் நிலவரி பூராவும் நீங்கி விடும் என்று எதிர்பார்த்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சி நெடு நாளாகவே நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்கின்ற கொள்கையைக் கொண்டிருந்தது. அதற்கு இணங்க, அந்தக் கட்சியின் ஆணைக்கு இணங்க, கடந்த ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்கின்ற முயற்சி எடுக்கப்பட்டது. அதன் விளைவாகத்தான் நிலத்தின் மேல் இருந்துவந்த, 'லாண்ட் ரெவின்யூ ஸர்சார்ஜை' நீக்கினார்கள். அதோடு மட்டுமல்லாமல், 'லாண்ட் ரெவின்யூ'-வையே, நிலவரியையும் ரத்து செய்வதற்கான வழிவகைகளைக் காண, அதற்கென்று ஒரு ஸ்பெஷல் ஆபீசரை, தனி அதிகாரியை நியமித்து, அவரிடம் அந்தப் பொறுப்பும் விடப்பட்டது. நிச்சயமாக அடுத்த பசலியில் இருந்து ரத்து செய்யப்படும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதில் ஆச்சரியம் இல்லை. அப்படி இருந்தும்கூட, அன்றைக்கு பூரண வரிவிலக்கை வற்புறுத்திய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தும், நிலவரிக்கு விலக்கு அளிப்பதில் போதிய ஆர்வம் காட்டாமல் இருக்கும் நிலையைத்தான் காண்கிறோம். நிலவரியை நீக்குவதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கவர்னர் பெருமான் உரையில், 'பேஸ்ட் புரோக்ராம்' என்ற முறையில் முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நான் தெரிந்து கொள்வது,





வருகிற பசலி ஆண்டில் கூட நிலவரி ரத்து செய்யப்படமாட்டாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இது பெரிய ஏமாற்றமாகும். நிலக்கிழார்களுக்கும், இன்னும் மற்றபடி நிலத்தை வைத்துக் கொண்டு இருப்பவர்களுக்கும் ஏமாற்றமாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த கொள்கை விளக்கத்தில், கல்லூரிப் படிப்பை இலவசமாக்குவது பற்றி குறிப்பிடப்படவில்லை. முன்பு ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் கல்வியை எல்லா மக்களுக்கும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்ற சீரிய முயற்சியில், ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிருந்து உயர் நிலைப் பள்ளி வரை இலவசமாகச் செய்தார்கள். அந்த வகையில் படிப்படியாக கல்லூரிப் படிப்பிற்கும் இலவசமாக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அதன் விளைவாக, வரும் ஆண்டிலிருந்து பி.யு.ஸி. என்கின்ற புதுமுக வகுப்பிற்கும் மக்களுக்கு இலவசமாகக் கல்வி கொடுக்கும் வழியைச் செய்ய வேண்டும் என்று முன் வந்தார்கள். அப்படிப்பட்ட நல்ல முயற்சி இப்பொழுது என்னவாயிற்று என்று இந்த உரையில் எதுவும் குறிப்பிடப்படாதது வருந்தத்தக்கது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விலை வாசிகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக, இன்றைக்கு ஆட்சிப் பீடத்தில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் மிகவும் அழுத்தம் திருத்தமாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவோம் என்று கூறியவர்கள், இன்றைக்குக் கவர்னர் பெருமானின் உரையின் வாயிலாக, என்ன செய்யப் போகிறார்கள் என்பதனை வகைப்படுத்திக் குறிப்பிட்டார்கள் இல்லை. உற்பத்திப் பெருக்கத்தால்தான் பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்க முடியும். அதற்கேற்ற வகையில் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று பொருள்படும்படி நான் சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலே விலைவாசிகளின் ஏற்றத்தின் காரணம் என்ன என்பதனைச் சிந்திக்க வேண்டும். வளர்ச்சி பெற்றிருக்கின்ற எல்லா உலக நாடுகளிலும் விலைவாசி ஏற்றம் அடைந்து வந்துள்ளதும், அதேபோல நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியாலும், ஏற்பட்ட எதிர்பாராத இன்னல்களையும் ஞாபகப்படுத்திக் கொண்டால்தான் உண்மை தெரிய வரும். பாதுகாப்பிற்காக மத்திய சர்க்கார் ஆண்டுதோறும் சுமார் 350 கோடி வரையில் செலவிட்டு வந்தார்கள். எதிர்பாராத அன்னிய படை எடுப்பின் காரணமாக 350 கோடிக்குப் பதிலாக, சுமார் 850 கோடி வரை செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஏராளமாக பாதுகாப்பிற்காக செலவிட்ட அதே நேரத்திலே, நம்முடைய திட்டச் செலவுகளையும் குறைத்துக்கொள்ள முடியாத நிலைமை நிர்ப்பந்தம் ஏற்பட்டது. திட்டச் செலவுகளைக் குறைத்தால், போர் முனையிலும் சக்தி வேண்டும், நாட்டிலும் வளர்ச்சி குன்றாமல் இருக்கவேண்டும் என்கிற காரணத்தினால், திட்ட வளர்ச்சியின் வேகத்தைக் குறைத்துக்கொள்ள நாம் ஆளுகின்ற கட்சித்

தரப்பிலும் எதிர் தரப்பிலும் இரண்டு விதமான எண்ணம் இருக்க வில்லை. திட்ட வளர்ச்சியும் அதிகமாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆகையினால்தான், பாதுகாப்பையும், திட்ட வளர்ச்சியையும் குறைக்காமல் பார்த்துக்கொள்ளும் அந்த நிலையில் அதிகப்படியான தொகைகளை செலவிடும் அந்த நிலையில் ஓரளவு பொருளாதாரச் சரிவு ஏற்பட்டது உண்மை. அவ்விதம் ஏற்பட்ட விளைவுகளை, அசௌகரியங்களை நாட்டு மக்கள் எதிர் நோக்க வேண்டியிருந்தது. திட்டங்கள் நல்லபடியாக, அதிகமாக, வளர்ச்சியடையும் வகையில் செலவுகள் செய்யப்பட்டன, பாது காப்பின் பொருட்டு செலவிடப்பட்டன என்றால், அதன் விளைவாக மக்கள் கையில் பூராவாக பணப் புழக்கம் ஏற்பட்டதால் வாங்கும் சக்தி அதிகமாக ஏற்பட்டது. வாங்கும் சக்தி அதிகமாக ஏற்பட்டதால், பண்டங்கள் கிராக்கி ஆகும் சூழ்நிலை ஏற்பட்டது, என்பதை இந்த உரையிலே நச்சு வட்டம் ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நச்சு வட்டத்தை அகற்றிவிடு வதற்கு எத்தகைய முறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த உரையின் வாயிலாகத் தெளிவுபடுத்தவில்லை.

அடுத்தபடியாக, இந்த உரையில் உணவு நெருக்கடியைத் தீர்த்து வைப்பது பற்றியும், உணவுப் பண்டங்களை வினியோகிப்பது, அவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்துவதுபற்றியும் இந்த அமைச் சரவை என்னென்ன செய்ய இருக்கிறது, என்னென்ன திட்டங்கள் இட்டு இருக்கின்றன என்று குறிப்பிடத் தவறியிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால், தேர்தல் காலத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இன்னின்ன காரியங்களைச் செய் வோம், ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம் என்றும், இன்னும் பல நீண்ட வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. இன்னும் பல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன, பெரிய கார்கள் வேண்டாம், சம்பளமே வேண்டாம், என்பன போன்ற வாக்குறுதிகள் கொடுக் கப்பட்டன. ஆனால் இன்றைக்கு நிலைமை முற்றிலும் மாறாக இருப் பதையும், பாதிச் சம்பளம் எடுத்துக்கொள்வதையும் பார்க் கின்றோம். உணவுப் பிரச்சினையைப்பற்றிச் சொல்லும்போது, வினியோகத்தைத் தாராளமாக்க வேண்டும், அப்பொழுதுதான் மக்களுக்கு வேண்டிய அரிசியைக் கொடுக்க முடியும் என்று குறிப் பிட்டார்கள். அப்படிக் குறிப்பிட்டவர்கள் இன்றைக்கு ஆட்சிப்
முற்பகல் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் மக்கள் ஆறுதல் பெறும்
9-30 வண்ணம் தங்கள் கொள்கையைத் திட்டவட்டமாகத் தெரிவித் திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். உற்பத்தியாளர் களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும், வாங்கி உண்பவர்களுக்கு நியாயமான விலையில், நல்ல தரமான அரிசி கிடைக்கச் செய்யும் வகையிலும் தாங்கள் உணவு கொள்கை சம்பந்தமாக நிறைவேற்றப் போகும் திட்டத்தைச் சொல்லியிருக்க வேண்டும். நல்ல தரமான விதைகளை விநியோகிப்பது பற்றியும், பாசன வசதிகளைப் பெருக்குவது பற்றியும், அதிகப் பலன் தரக் கூடிய ஏ.டி.டி. 27, சி.ஓ. 25 ஆகியவற்றைப் பெருக்கி வழங்குவது பற்றியும், கொள்முதல் விஷயத்தில் உற்பத்தியாளர்களுடைய நலன் பாதிக்கப்படாமல், அதே சமயம் வாங்கி உண்பவர்களின்





நிலைமையையும் கவனத்தில் கொண்டு—சிறு நிலச்சுவான்தார் களுக்கு தொந்தரவு கொடுக்காமல் இன்றைக்கு ஆளும் கட்சியில் உள்ளவர்கள் சொல்கின்ற முறையில் 'டாக்ட்புலாக' ( tacttui -ஆக) மூதுகைத் தட்டிக்கொடுத்து கொள்முதல் செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் காங்கிரஸ் இந்த மாநிலத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தபோதே சொல்லி வந்ததுதான். இதனை இந்த மன்றத்தில் தங்கள் மூலமாக நான் சமர்ப்பிக்கும்போது—இன்றைய தினம் கவர்னர் ஆற்றிய உரையை முந்தினவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தால் வார்த்தைகளில் வேண்டுமானால் மாறுபட்டு இருக்க லாமே ஒழிய, கருத்து, அர்த்தம் எல்லாம் ஒன்றுதான் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உணவுக் கொள்கை சம்பந்தமாக ஸோனல் கவுன்சில்ஸ் சிறப் பாகப் பணியாற்றச் செய்வது, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு நல்லதாக இருக்கும் என்று பொருள்பட கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. தென்மண்டல உணவுக்கொள்கை நடைமுறையில் கொண்டுவரப்பட்டபோது அது தமிழக மக்களுக்குப் பாதகமாக இருந்த காரணத்தினால்தான் எங்களது ஆட்சியில் கைவிடப் பட்டது. கேரள மக்களின் வாங்கும் சக்தி அதிகம், அந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் பண்டங்களோ அந்நியச் செலா வணியைச் சம்பாதித்துக் கொடுக்கின்றன. ஆகவே, பல்வேறு துறையில் அங்கே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு வருமானம் அதிகம். அதேசமயத்தில் உணவு அங்கே பெருவாரியாக உற்பத்தியாவதில்லை—அது டெபிசிட் ஸ்டேட். ஆகவே உணவுப் பண்டங்கள் என்றால் என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து வாங்கத் தயாராய் இருக்கிறார்கள். ஆகவே, தென்மண்டலம் என்று அமைக்கப்பட்டிருந்த காலத்தில் தமிழ் நாட்டில் இருந்து உணவுப் பண்டங்கள் கேரளத்திற்கு ஓடிக்கொண்டே இருந்த காரணத்தினால்தான் நான் சார்ந்துள்ள கட்சி முன்பு அதைக் கைவிட்டார்கள் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இன்றையதினம் ஆட்சியில் இருக்கக்கூடிய அமைச்சரவை மீண்டும் தென்மண்டலம் பற்றி எண்ணும்போது அதனால் தமிழகத்திற்குப் பாதகம் விளையாதவண்ணம் செயல்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். புதிதாக ஆட்சிப் பொறுப்பில் ஏறியிருக்கக்கூடியவர்கள் நல்லாட்சியை ஏற்படுத்தி, எல்லாத் துறையிலும் மக்களுக்கு சிறந்த தொண்டு செய்ய வேண்டு மென்ற ஆவலை இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி உணர்த்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட ஆவலை, எண்ணத்தைக் கொண் டிருக்கக் கூடிய அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களுடைய ஆவலை செயலாக்குவதற்கு அவர்கள் எத்தகைய புதிய புதிய முயற்சிகளை மேற்கொண்டாலும் அதனை வரவேற்கத் தயாராய் இருக்கிறோம். அவர்கள் நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு எடுத்துக்கொள்கிற முயற்சிகள் யாவற்றுக்கும் நாங்கள் பூரண ஒத்துழைப்பு கொடுப்போம்

என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகருக்கு நன்றியறிதலைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் நான்காவது பொதுத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றுள்ளதைப் பாராட்டியுள்ளார்கள். மக்கள் பெரும் மாறுதலை ஆட்சியில் ஏற்படுத்தியுள்ளார்கள். காரணம் அருமைத் தாய்மார்கள், மாணவர்கள் கடந்த ஆட்சியில் பட்ட கஷ்டங்களை நினைத்து அந்த ஆட்சியை மாற்றித்தான் தீரவேண்டுமென்ற நல்ல முடிவிற்கு வந்தார்கள். அந்தத் தாய்மார்களுக்கும், மாணவர்கள் சமூகத்திற்கும் என் கட்சியின் சார்பாக பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்த பொதுத் தேர்தலில் எந்தவித மான அசம்பாவிதமும் இல்லாமல் உலகைப் பெரும் அதிசயமாக அரசியலில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்குக் காரணமே சென்ற ஆட்சியின் கொடுமைதான். அந்த ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பலவிதமான அதிருப்தி காரணமாகத் தான் இந்தப் பெரும் மாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளார்கள். மக்களுடைய பேராதரவு காரணமாகத்தான் நாங்கள் ஆட்சிப் பீடத்தில் ஏறியுள்ளோம் என்பதை மனதில் கொள்ளவேண்டும். எங்களுடைய அடிப்படையான நோக்கமே மக்களுக்குக் குறைந்த விலையில் நல்ல தரமான உணவுப் பண்டங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான். அதை நாங்கள் தலையாய கடமையாகக் கொண்டுள்ளோம். இருந்தும் தேர்தல் காலத்தில் ரூபாய்க்கு 3 படி அரிசி தருவதாகச் சொன்னீர்களே, எங்கே 3 படி அரிசி என்பதாக தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடனேயே ஒரு காங்கிரஸ்காரர் என்னிடம் வந்து கேலியாகப் பேசினார்கள். அன்றைக்கு 1952-ல் திரு. ராஜாஜி அவர்கள் பதவி ஏற்றவுடனேயே கண்ட்ரோல்களை எடுத்தார் என்றால் காரணம் போதுமான உணவுப் பண்டங்கள் கையிருப்பில் வைத்துக்கொண்டது. ஆனால் இன்றைக்குள்ள நிலைமை என்ன? முந்திய காங்கிரசு கட்சியினரின் ஆட்சி ஏற்படுத்தியுள்ள நிர்வாக ஊழல்களையே சரி செய்ய நமக்கு அவகாசம் வேண்டும். தேர்தலுக்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி கொள்முதலையே சரியாக நடத்தவில்லை. அதன் காரணமாக கையில் ஸ்டாக் கிடையாது. நிர்வாக ஊழல்களை சரி செய்யாமல், கையில் போதுமான ஸ்டாக் இல்லை என்கிற நிலையில் கண்ட்ரோல்களை எடுத்துவிட்டால் நிலைமை என்ன ஆவது? எங்கே 3 படி அரிசி என்று கேட்பது கேலிக் கூத்தாக இருக்கிறதே தவிர—நாட்டின் நிலைமையை உணர்ந்து பேசுவதாக இல்லை. அதற்காக நாங்கள் மக்களுக்கு என்ன என்ன நன்மைகளைச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்யாமல் போவதில்லை. மக்களது கஷ்டங்களை நீக்குவதுதான் எங்கள் தலையாய கடமை. எனவே, அறுவடைக் காலத்திலே நல்ல முறையிலே கொள்முதல் அவர்கள் செய்யவில்லை. அதனாலேதான் ஸ்டாக் பொசிஷன் நல்ல முறையில் இல்லை. அவர்கள் கொள்முதல் நல்லமுறையிலே செய்திருந்தால் ஸ்டாக்





நிறைய இருந்திருக்கும். கண்ட்ரோலைக் கூட ஓரளவுக்கு எடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு இப்பொழுது உடனடியாகச் செய்ய முடியாததற்குக் காரணம் சென்ற ஆட்சியின் போக்கு, கொள்கை, இவைதான் காரணம். மக்கள் இன்று உணவுக் கொள்கையில் புரட்சிகரமான மாறுதலை எதிர்பார்க்கிறார்கள். நிச்சயமாக இந்த ஆட்சி உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் என்பதை நான் மக்களுக்கும் இந்த மன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன். (Tapping the rich) டேப்பிங் தி ரிச் என்று அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள்; (tapping the rich land owners and patting the small land owners ) டேப்பிங் தி ரிச் லேண்ட் ஓனர்ஸ் அண்ட் பேட்டிங் தி ஸ்மால் லேண்ட் ஓனர்ஸ் என்று அவர்கள் அழகான சொற்களிலே ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அதை காங்கிரஸ்காரர்கள் கேலி செய்யக்கூடிய முறையிலே பேசுகிறார்கள். மக்களை ஏமாற்ற முடியாது. ஏதோ மேடையிலே பேசலாம், நிர்வாகத்திலே பயன் இல்லை என்ற முறையிலே கேலி பேசுகிறார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரிய மிராசுதார்களிடம் அதிகமாகக் கொள்முதல் செய்து, ஏழை விவசாயிகளைத் துன்புறுத்தாமல் இருக்கலாம் என்று சொன்னார்கள். இதிலே என்ன தவறு இருக்கிறது? இந்த விதமான தீவிரமான கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் சென்ற ஆட்சியினுடைய குறைதான் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நகரங்களிலே ரேஷன் முறையும், கிராமங்களிலே கொள்முதலும் இருப்பது கொஞ்சம் கசப்பாகத்தான் இருக்கும். கூடிய விரைவிலே நல்ல முறையிலே நிர்வாகத்தை நடத்தி குறைந்த விலைக்கு அரிசி கிடைக்கச் செய்ய முடியும். ஃபேர் ரெண்ட் ஆக்டின்படி பெரிய நிலச்சுவான்தார்களுக்கு 40 சதவீதமும், உழவர்களுக்கு 60 சதவீதமும் என்று இருக்கிறது. அந்த முறைப்படி 60 சதவிகிதம் கொடுத்துவிடுகின்றபொழுது அவர்களிடம் அதிகமாகக் கொள்முதல் செய்வது கடினமாக இருக்கும். அதிகமாகக் கொள்முதல் செய்ய முடியாது. அதோடு 100-க்கு 90 பேர்கள் குறைந்த நிலமுள்ள நிலச்சுவான்தார்கள்தான் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யாமல் அறவே நீக்கிவிட்டால் போதுமான நெல்லே கிடைக்காது. ஆகவே, இதையெல்லாம் நல்ல முறையிலே யோசித்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று அமைச்சரவையை நான் கேட்டுக்கொள்கிறேன். உர விநியோகம் பற்றிக்கூட இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உரங்கள் சென்ற ஆட்சியிலே நல்ல முறையிலே விநியோகிக்கப்படவில்லை. கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக ஃபெர்டிலைசர் உரம் நல்ல முறையிலே விநியோகிக்கப்படவில்லை. கூட்டுறவு சொசைடிகளிலே தலைமை வகிக்கக்கூடியவர்கள், எல்லாம் ஆட்சியாளர்களின் கட்சியை சேர்ந்தவர்கள்தான் இருந்தார்கள். பிரசிடெண்ட்கள், செகரட்டரிகள் எல்லோரும் சுயநலத்திற்காகத்தான் அவற்றைப் பயன்படுத்தினார்களே தவிர, மக்களுக்குப் பயன்படக்கூடிய விதத்தில் செயல்படவில்லை. இதையெல்லாம் நம்முடைய அரசாங்கம் சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. எஸ். எஸ். மணி] [1967, மார்ச் 18

அடுத்ததாக, நெசவுத் தொழில்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக இருப்பது நெசவுத் தொழில்தான். அதற்கான ஊக்கம் கொடுக்கப்பட வேண்டும். எந்தவிதத்திலும் கைத்தறி நெசவாளர்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அவர்களுக்கு எல்லா விதங்களிலும் ஆதரவு கொடுக்க வேண்டும். எந்தத் துறையிலேயும் அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member, Dr. H. V. Hande will now speak.

* DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, at the very outset I wish to congratulate the Dravida Munnetra Kazhagam Party on its coming to power and giving us an excellent galaxy of brilliant men in the Treasury Benches. Sir, as a person who has been intimately connected with the problems of the poor, I have had several occasions to find that the general feeling of the public has been very, very heart-breaking. There was, a few months ago, a feeling even to the extent of desperation among the public that things would not change. The desperation was to such a great degree that but for democracy and for the General elections, the situation would have been explosive. Such an explosive situation has been converted into a very peaceful and orderly transfer of power. To this greatest act in this 20th century and in this Sub-Continent, the maximum credit straightaway goes to the leaders and organisers of the D.M.K. Party. In this particular context when I wish to speak a few words on the Governor's Address, I want to make it very clear at the outset that I wholeheartedly support and welcome the Governor's Address.

Not only I but also all the members of our Party are very happy to know that the Governor's Address has been laid on a very, very nice temper and a number of excellent points have been brought out in the Governor's Address. My congratulations to the Members of the Treasury Benches for this.

Sir, I have also had the great pleasure and privilege of sharing the wisdom of smart replies and the excellent conservations of the Hon. Speaker when I had the occasion of sitting next to him for nearly three years in the Upper House. Now I am very happy to see that a brilliant person like you has had this opportunity to preside over this House and we are all very grateful to you for the way in which you have started conducting the proceedings of this House.

Now, Sir, coming to the subject-matter, there have been a number of points raised in the Governor's Address. In the very beginning, mention has been made about the elections. There is a sentence that has crept into the Governor's Address, viz.,

'I consider it specially significant that this general election should have gone off peacefully and without any untoward incident, particularly in our State.'



1967, மார்ச் 18] [Dr. H. V. Hande]

I know what prompted the Governor to bring out this particular sentence. The credit for this peaceful and orderly election straightaway goes to the D.M.K. Party and its leaders who when addressing their audience, asked them to control themselves and remain very peaceful. But I am sorry to bring to the attention of this House that in spite of the tremendous efforts of the present ruling Party which was their the Opposition Party, there were quite a number of untoward incidents which, to a large extent, impaired the peaceful elections here and there. For those incidents, the then ruling Party must be held squarely responsible. That is my humble submission to this House. But for the fact that a number of workers and a number of leaders exercised extreme patience, things would have been very explosive. I know, as a person contesting from a City constituency, how many times, my election workers came and told me heart-breaking things. They came and told me, 'Look here, how many times do you want us to put up with these things. You always tell us and our own leaders tell us to exercise patience but how long can we exercise patience. We have been physically manhandled and we have been subjected to all sorts of abuses and insults. How long can we tolerate all these things?' I still remember those words told by my Swatantra Party workers also. Then I had to tell them, that even when their own leaders were facing danger, they were exercising patience. That was the way we conducted ourselves. Everybody knows the series of incidents that took place and the explosive situation that developed in a number of constituencies just on the eve of the elections. Sir, I request this Government to look into this matter and see that at least in future when we will be having a number of elections, the persons who are responsible for those faults are booked straightaway. I also implore everyone in this Government to see that such untoward incidents do not take place in future.

Then, Sir, because of the paucity of time, I have to skip over several points. Now I want to refer to the food problem. The most important thing is that unless production of food increases, there is no solution. The only solution for the millions of families starving, is increase in production. Unless we address ourselves seriously to this task, whatever rules and regulations that we may bring forwarded, will be of no avail. Now the question is, how can we increase production? Can we increase production by having controls?

I wish to stress very clearly that the most important disincentive to increase in production, in other words the most important factor that prevents increase in production, is controls. That has been the plank on which my Party has been built; that has been the plank on which Sri N. G. Ranga, the Chairman of the Party to which I belong, started the Krishikar Lok Party when he was in Madras. I know the Hon. the Chief Minister is very much concerned with the food problem. We have an excellent Food Minister whose speeches even as a Member of the Opposition have been very excellent and I have been an admirer him even from then. But the question is how he is going to translate his brilliant

ideas into a reality. He cannot do it with the help of officials. Officials come between the ideas and their translation into a reality. The moment there is procurement unfortunately there is harassment and that is the greatest disincentive to the producer. Most of the farmers are afraid of the officials. I know that when a Minister comes and makes an inspection, everything will be very fine there. But the moment he leaves, officials begin to harass the farmers. I am not blaming anybody. If I were an official, my mind also will work in the same single-track direction. The most important incentive to increase production is the abolition of control. The most important factor that the Hon. Food Minister should take into account is this. He will be guided in administration mostly by the officials. The officials have been trained in a particular direction for the last twenty years like the horses provided with blinds and they have developed a single-track mind. They have been trained to think in the same routine way. Therefore I request the Hon. Food Minister not to rely too much on the advice of officials. Officials are there only to execute the policies and decisions on policies must be taken by the Ministry. Members of the Legislature of the party in power and the other parties are in intimate contact with the masses and the small ryots. Therefore it is most important that the Food Minister does not depend too much on officials. For Heaven's sake let not the officials affect the policy decisions. There is a lurking fear in my mind that, if the Ministry is a little less cautions, there is the possibility of the Ministry being loaded with ideas by the Secretariat, which means that they will immediately loss their individuality and original judgment, and may simply follow whatever the officials say as an easy way of escapism from problems. The ministry followed the advice of the officials when Congress was the ruling party. They used phrases like 'marketable surplus' and 'marginally surplus'. We hear the same slogans and the same expressions again and again. We are deluded by these expressions. The farmers are simply scared by the jeepwallas and the officers. I can tell the Ministers that whatever their orders are, the officers will not follow the policy of tapping the rich. The moment an officer sees a rich man or a landlord, he comes down and acts according to the wishes of the landlord. It should be made very clear that the small landlord should not be put into trouble. The very clamour or rush for procurement is itself a disincentive. A number of ryots are giving up the villages and running to the cities to eke out their livelihood. The farmers are getting disgusted. Why should we go on tilling the soil and be answering these officials who come and trouble us—this is how they feel. Therefore in whatever we do, we must take care to see that it does not provide a disincentive. We must bear in mind that the small farmer is the backbone of our agriculture. He is very sensitive.

In this connection I would like to offer one solution. We have had very good relationship with Kerala. Kerala is a deficit State and it is our duty to help our neighbours. But at the same time let us have some profitable friends. Andhras are our profitable friends Eventhough the Ministry in the Andhra State belongs



to a different party, let us try to develop friendship with that State and it will be very useful for us in solving our food problem. I request the Hon. Food Minister to ponder over this carefully.

There has been a ban on the movement of paddy from village to village, taluk to taluk and district to district. All these barriers must be removed. All the four Southern States must be combined into one zone. That is the one solution that I can offer. Kerala will be ready to accept this, because it will be profitable to it. Andhra may or may not accept it. We must sit across the table and discuss. The former Minister for Indutries was constantly saying that no agreement could be reached regarding the resumption of the State Transport bus service between Madras and Tirupati. But, the then Chief Ministers of both the States sat across the table and came to an agreement within a few minutes. The benevolent Chief Minister of Madras, who has earned the love of the masses, should discuss with the Chief Minister of Andhra and come to an agreement. Madras State wants Nellore rice. We can send our Kuruvai rice to Kerala. There is a great demand for Krishna rice also. Import of Andhra rice is a better method than the adoption of police methods to make the merchants, who have been hoarding stocks and holding the State radsom, to disgorge their boarded stocks Businessmen have not realised their duty towards the public. Businessmen are businessmen and the only method of correcting them and making them come down on their knees is to introduce competition. When there is competition, businessmen will bring all the stocks lying with them into the market and that will bring down the prices.

Therefore, the only method is to see that rice from Nellore or Krishna comes to the Madras State. That is the only solution. 1-00 மு.பகல்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

Sir, I shall finish my speech in five minutes. With regard to the Salem Steel Plant, there are a number of problems. As far as I know, the investigation with regard to the Salem Steel Plant, is not complete. We have been kept in the dark all these years and we have been told that the investigation has been completed. I have got reliable information that the investigation for the Steel Plant is not yet complete. I request the Hon. Minister to find out why the investigation has not been completed. I am also given to understand that it has not been decided whether it should be a pellet plant or a full scale steel plant. There is a method by which pellets could be manufactured by putting the raw iron ore into the furnace. So, I request the Hon. Minister to apply his mind immediately and see that the question of the exact type of the steel plant is finalised immediately. Otherwise, the Central Ministry will go on dodging the issue for a long time and will also raise the problem of foreign exchange. The foreign exchange required will not be more than Rs. 15 or 20 crores and the Central Ministry must be able to give it from the taxes collected from us.

[Dr. H. V. Hande] [1967, மார்ச் 18

Now the Central Ministry is collecting Central Excise, customs income-tax and other taxes. It must be the duty of the Centre to see that a fair portion of the tax amount is given to the States. To this task, the State Government must address itself and see that at least the foreign exchange to the extent of Rs. 15 to 20 crores is given. After all, we want only a small plant and we are not asking for a big plant. The entire production of steel in this country is about six million tons, at least on paper. I do not know how much it is actually produced. I think it is about 4½ million tons. Some of the steel plants are not working properly. Now all that we ask for is a small plant to produce ·25 million tons, that is 1/24th of the entire steel production in the country. If we start with .25 million tons, we can increase it to half a million tons later on. Therefore, the most important thing is that this Government should convince the Central Government that it is only a small plant and that it can be run efficiently by them. The Central Government are now putting a premium on the efficiency of States and they are denying to them certain rights and facilities which other inefficient States are getting. That should not be the case. The attitude of the Central Government should not act as a disincentive for those States working harder. It is better that they the Central Government should give us better facilities and devote more attention to us. In this connection, I would request the Hon. Chief Minister to instruct the Members of the Parliament belonging to this State—there are nearly 30 to 35 Members who will obey to impress upon the Central Government that at least a portion of the Central Excise should be given to us. Also, a portion of the income-tax which is one of the biggest sources of income for the Central Government must be given to us. If necessary, they can send a delegation and tell the Central Ministers about the need for a portion of these taxes and also the necessary foreign exchange for the Salem Steel Plant. With these words, I once again assure the Hon. Ministers sitting on the Treasury Benches that they will always have our co-operation. We are prepared to give our constructive suggestions. Sometimes our ideologies and those of the Ruling Party may vary but that would not stand in the way of our co-operation. In this connection, I wish to quote the statement of Mr. Voltair made a few centuries ago—' I will fight every inch of the battle disagreeing with you, but you also have a right to say what you want to say '. In the same way I request the Treasury Benches to look at us and examine whether our suggestions are worthwhile and see that as for as possible they are implemented because they are good irrespective of from whom they come.

*** திரு. எஸ். ஆறுமுகம்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை ஆதரித்து என் கருத்துக்களை இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் தமது உரையில் இந்த அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள், வரவேற்கத்தக்க வகையில். கவர்னர் அவர்கள் ஆற்றியுள்ள உரையில் எங்கள் சர்க்கார் திட்டம் பூராவும் இதில் இடம்



1967, மார்ச் 18] [திரு. எஸ். ஆறுமுகம்]

பெற்றிருக்கிறது என்று எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்ற சர்க்கார் நடைமுறையில் ஏற்று நடத்திய கொள்கைகளை பிரதிபலிக்கிற வகையில்தான் இந்த உரை அமைந்திருக்கிறது என்பதை முதலில் உணர வேண்டும். அந்த வகையில் இந்த உரை சென்ற சர்க்காரின் நடைமுறைக் கொள்கைகளைத்தான் பிரதிபலிக்கின்றன. இடைக்கால பட்ஜெட்டை, வரவு செலவுக் கணக்குகளைக் கொண்டு வருகிறபோதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் என்ன, நாட்டு மக்களுக்கு நாங்கள் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதுபற்றி தெளிவாகக் குறிப்பிடப்படும்.

கவர்னர் அவர்கள் தமது உரையில், நான்காவது பொதுத் தேர்தல் அமைதியாக நடைபெற்றிருப்பதைப்பற்றி பாராட்டியிருக்கிறார்கள். பல மாவட்டங்களில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் காட்டிய அன்பு வழி காரணமாகவும், ஜனநாயகத்திற்கு மதிப்பு கொடுத்து, தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி மக்களின் வாக்குகளைப் பெற்று பொறுப்பேற்கும் நிலையில் வந்திருக்கிறோம். இதற்கு முன்பு ஆண்டு கொண்டிருந்த சர்க்கார் சில இடங்களில் நடந்து கொண்டது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல தொகுதிகளில் பல அட்டகாசங்கள் செய்தார்கள்; அதை அனுபவித்தவர்கள் நாங்கள் என்பதை எவ்வால் சொல்லாமல் இருக்கமுடியாது. இன்று முதல் அமைச்சராக இருக்கக் கூடிய எங்கள் தலைவருக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தேர்தல் நேரத்தில் ஏற்பட்டவைகளை நாங்கள் மறந்துவிடுவதற்கில்லை. அதுமட்டுமல்ல. திருச்சியில், முன்னாள் அமைச்சர் ராமையா அவர்கள் போட்டியிட்ட தொகுதியில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கு ஏற்பட்ட சம்பவங்கள் எங்களுக்குத் தெரியும். அதேபோல் பரங்கிமலைத் தொகுதியிலும் தேர்தலுக்கு முன்னால் நடைபெற்ற கலவரங்கள், தேர்தலுக்குப் பின்னால் இப்போதும் கூட ஏற்படக் கூடிய சம்பவங்கள் எல்லாவற்றையும் பார்க்கிறபோது முன்பிருந்த எதிர்க்கட்சிக்காரர்கள்தான் ஜனநாயகத்திற்கு மதிப்பு கொடுத்து, மக்களை மதித்தார்கள் என்பது தெரியவரும். ஆனால், முன்னாலே ஆண்டுகொண்டிருந்த காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுக்காமல் சர்வாதிகாரப் போக்கில் நடந்துகொண்டது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்னையை எடுத்துக்கொண்டால் இந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அதை முதல் படியாக கவனிப்போம், உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நாட்டு மக்களுக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் அதை கவனிப்போம் என்று கூறியிருக்கிறார்கள். முன்னால் இருந்த காங்கிரஸ் கட்சி மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் விவசாயத் துறையிலும், உணவுப் பிரச்சனையிலும் முக்கிய கவனம் செலுத்தாத காரணத்தினால், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பிறகும் இந்த நாட்டிலே இவ்வளவு பெரிய பஞ்சம் ஏற்பட்டது என்பதை உணர்ந்து நாட்டு மக்கள்

பொதுத் தேர்தலில் வாக்கு அளித்ததை மனதில் வைத்துக்கொண்டு இன்றைய தினம் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அமைச்சரவையும், முதல் அமைச்சர் அவர்களும் என்ன சொல்லுகிறார்கள் என்றால், முதலில் உணவுப் பிரச்னையை கவனிப்போம், உணவுப் பிரச்னை உடனடியாக கவனிக்கப்படவேண்டிய முக்கியமான பிரச்னை என்று சொல்லுகிறார்கள். நிச்சயமாக நடைமுறையில் எங்கள் சர்க்கார் நாட்டு மக்களுக்கு உணவுப் பிரச்னையில் நல்ல வழியைக் காட்டி அவர்கள் மன நிம்மதி பெறும் அளவுக்கு நடக்கக் கூடிய திட்டத்தைத் தீட்டி அமல் நடத்துவார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல, கொள்முதல் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும், கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது நடைமுறையில் இது வரையில் இருந்து வந்த ஏற்பாடு என்றும், உணவுப் பிரச்னையை நன்றாக ஆராய்ந்து திடமான கொள்கையைச் சர்க்கார் அறிவிக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த சர்க்கார் இந்த நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள், சிறிய நிலச்சுவான்தார்கள், நாட்டு மக்கள் எல்லோரும் நிம்மதி பெறுகிற வகையில் நல்ல கொள்கையை வகுத்துத் தரும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது பற்றி கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது மாநில சர்க்காரினால் மட்டும் முடியாது, மத்திய சர்க்காருக்கும் இதிலே பங்கு உண்டு என்று தெளிவுபட எடுத்துக் காட்டி, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பிரச்னைகளை மூடி மறைக்காமல் தெளிவுபடுத்தியிருப்பதற்காக அமைச்சரவைக்கும் கவர்னர் அவர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் தமிழக சர்க்கார், திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், மத்திய சர்க்காரோடு அழுத்தம் திருத்தமாக வாதாடி, விலைவாசியைக் கட்டுப்படுத்த விரைவிலே நம் கொள்கையை மத்திய சர்க்காரிடம் எடுத்து உரைக்கவேண்டும், அதற்கான ஆக்கப் பணியை நம் சர்க்கார் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொண்டு கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

அதே போல கள்ளக் கடத்தலைத் தீர்க்க திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதைத் தான் கவர்னர் அவர்களும் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரைக்கும், இந்த சர்க்கார் பக்கம் இருக்கக் கூடிய மக்களும், இந்த சர்க்காரை ஆதரிக்கக் கூடியவர்களும், நடுத்தர மக்கள், ஏழை மக்கள், தொழிலாளர்கள் ஆதரித்ததன் வகையிலும், கூட்டணிக் கட்சித் தோழர்களும் ஆதரித்ததன் வகையிலும், இப்படிப்பட்ட நிலையில் இருப்பதால் கள்ளக்கடத்தலைக் கடுக்கும் நடவடிக்கைகளை கடுமையாக்குவோம், அதனுடைய விளைவுகளை கள்ளக் கடத்தலை ஏற்பவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று



கவர்னர் அவர்கள் கூறுகிறார்கள் என்றால் இந்த சர்க்கார் நாட்டு மக்களிடத்திலே, ஏழை மக்களிடத்திலே, அவர்களுடைய ஆதரவைப் பெற்ற காரணத்தினால் அவர்களிடம் தயவாக நடந்து கொள்ளும், பணக்காரர்கள் தயவை, பெரிய வியாபாரிகள் தயவை இந்த சர்க்கார் நாடாது, ஏழை மக்களுடைய வழியில் செல்லும் என்ற வகையில்தான் சொல்லியிருக்கிறார்கள். கள்ளக்கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் நானும் என் கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்போது எந்த பணக்காரர்களுக்கும், பெரிய வியாபாரிகளுக்கும் பயப்படப் போவதில்லை என்று தெரிந்திருந்தாலும், உறுதி நம்மிடத்திலே இருந்தாலும், கள்ளக் கடத்தலைச் செய்கிறவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும்; கடுமையான தண்டனை என்று சொல்லும்போது, ஜென்ம தண்டனையாவது விதிக்கவேண்டும். அப்படிப்பட்ட தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தை இயற்றினால் தான் உற்பத்தியாகும் பொருள்கள் பதுக்கி வைக்கப்படுவதைத் தடுக்கவும், வேறு அண்டை மாநிலங்களுக்கு கள்ளத் தனமாகக் கடத்தப்படுவதைத் தடுக்கவும் முடியும். அப்போது தான் உற்பத்தியாகும் பொருள்கள் பரவலாக எல்லா மக்களுக்கும் போய்ச் சேரும் வகையில் இருக்கும். ஆகையால் கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நிலவரி நீக்கத்தைப் பற்றி கனம் உறுப்பினர் நல்லசாமி அவர்க்ள் கூட குறிப்பிட்டார்கள். நிலவரி நீக்கத்திற்கு காங்கிரஸ் கட்சிதான் வழி வகுத்தது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருக்கும்போது இதே மன்றத்தில் பல தீர்மானங்களைக் கொடுத்து வாதாடியிருக்கிறோம். அப்போதெல்லாம் செய்யாதவர்கள் தேர்தல் காலத்தில் மக்கள் வாக்குகளை வாங்கவேண்டும் என்று சர்சார்ஜை மட்டும் எடுத்துவிட்டு, நில வரி நீக்கத்தைப் பற்றி வருகிற சர்க்கார் ஆராயும் என்று அப்போது இருந்த அமைச்சர்கள் சொன்னார்கள். அதைத் தான் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஆராய்ந்துகொண்டிருக்கிறது. நிலவரியைப் பொறுத்த வரையில் சாதாரண ஏழை மக்கள் மீது, சாதாரண விவசாய மக்கள் மீது இருக்கும் வரியை நீக்கவேண்டும் என்று கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருப்பது எங்கள் கட்சியாகும். அந்த வகையில் இப்போது ஆராய்ந்துகொண்டிருக்கிற குழு தன்னுடைய அறிக்கையை அமைச்சரவைக்குத் தந்த பிறகு, எந்த வகையில் நிலவரியை நீக்குவது என்று முடிவு எடுத்து, கண்டிப்பாக அதை ரத்து செய்யும் வகையில் எங்கள் சர்க்கார் இருக்கும்; நிச்சயமாக ஏழை விவசாயிகளுக்கு உதவி புரிவோம் என்று உறுதியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதே போல, சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றிக்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு 1967-68-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டில் இந்த சர்க்கார் முக்கியத்துவம்

கொடுக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் முன்பு இருந்த ஆட்சி அதிகமாக அக்கறை எடுத்துக்கொள்ளாத காரணத்தினால் இந்த நிலைமை இருக்கிறது. நம்முடைய சர்க்கார் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில், ஏழை விவசாயிகள் முன்னேறும் வகையில், உணவுப் பொருள்கள் உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்படும் வகையில் நடவடிக்கைகளை எடுக்கும் என்று கூறி, கவர்னர் அவர்களுடைய உரையைப் பாராட்டி, இந்த அளவுக்கு என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள துணைச் சபாநாயகர் அவர்கள் அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ப. மகாதேவன்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமானின் உரையின் மீது விவாதம் செய்வதிலே எனக்கும் ஒரு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கவர்னர் பெருமானின் உரையிலே பாராட்டுதலுக்குரிய பல அம்சங்கள் இல்லையென்றாலும்கூட, ஒரு காரணத்திற்காக இந்த உரையைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. கவர்னர் பதவியே தேவையில்லை, அது அவசியமில்லாதது, அர்த்தமற்றது என்று ஒரு காலத்தில் சொல்லி வந்தவர்கள் ஆளும் கட்சியில் அமர்ந்தபோது தாங்களாகவே மாற்றிக்கொண்ட அந்த மாற்றத்திற்காகவாவது எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர் பேசும்போது கிண்டலாகவும், கேலியாகவும் காங்கிரஸ்காரர்கள் மூன்று படி அரிசியைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று கூறினார்கள். நாங்கள் எந்தக் கிண்டலும், கேலியும் பேசக் கூடிய மரபில் உள்ளவர்கள் அல்ல. காங்கிரஸ் கட்சியின் நோக்கம் ஒரு மாதிரி எதிர்க்கட்சியாகப் பணி புரிந்து காட்டவேண்டும் என்பது தான். அந்த நோக்கத்தோடுதான் இந்தப் பணியில் இறங்கத் தீர்மானித்திருக்கிறோம். இதே மன்றத்தில் இன்றைய உணவு அமைச்சர் முன்பு ஒருநாள் இளைத்துப் போன இட்டிலியாரை அழைத்துவந்து காட்டிய ட்ரமாட்டிக் டாக்டிக்ஸ் எல்லாம் மக்கள் மனதில் இருக்கும் என்று எண்ணுகிறேன். தேர்தல் காலத்தில், மட்டுமல்ல, நான்கு வருஷங்களாக மக்களை நம்ப வைத்து, ரூபாய்க்கு ஐந்து படியில் ஆரம்பித்து, நாளாக நாளாக நான்கு படியாக ஆகி, முக்காலும் மூன்று படி கொடுப்போம் என்று சொல்லி, படிப்படியாக இறங்கி, ரூபாய்க்கு ஒரு படி கொடுப்போம் என்று சொன்னதை நம்பிய மக்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களாகிய நாங்களும் அதை நம்பினோம் என்றால், அது லாப நோக்கு. ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்பது யாரும் நம்ப முடியாத காரியம் என்றாலும், அமைச்சர்கள் மூன்று படி போடுவதாக இருந்தால் நாங்களும் சாப்பிடத்தான் செய்வோம்; அந்த





நோக்கத்துடன் எதிர்பார்க்கிறோம். நாட்டிலே நோட்டுகள் இரட்டிப்பு செய்துகொடுக்கிறோம் என்று சொல்வதை நாம் பார்க்கிறோம். முதலில் ரூ. 100-ஐ ரூ. 200-ஆக ஆக்கித்தரலாம். பிறகு ரூ. 1,000-ஐ ரூ. 2,000-ஆக இரட்டித்துத்தரலாம். பிறகு ரூ. 10,000-ஐ வாங்கிக்கொண்டு ஊரைவிட்டே கடந்து செல்லக்கூடிய நிலைமையையும் நாம் பார்த்திருக்கிறோம். மக்களிடையே நாங்கள் அமைச்சராவோம், அமைச்சரவை அமைப்போம் என்று சொல்லக்கூடிய பொறுப்பான கட்சித் தலைவர்கள் சொன்ன பொழுது அதை நம்புகிறோம். நம்பிக்கை தரக் கூடிய பேச்சு என்று கருதித்தான், அவசரப்படாதீர்கள், 6 மாதங்கள் அவகாசம் கொடுக்கலாம்' என்று சொல்லியிருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் 'காங்கிரஸ் தலைவர்களே 6 மாதம் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள், கட்சியிலுள்ளவர்கள் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்' என்று கூறியிருக்கிறார்கள். நாங்கள் உண்மையாக ஆத்திரப்படவில்லை; நினைவுப்படுத்தும் நோக்கத்தோடு தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர் அவர்கள், உரையில் அதைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை என்ற குறையை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிலவரியைப் பற்றிப் பேசும்பொழுது, கனம் திரு. ஆறுமுகம் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கையில் நிலவரியை ரத்து செய்வது என்பது இருந்ததில்லை என்று சொன்னார்கள். அண்ணல் காந்திஜி அவர்களின் காலத்திலேயே 1937-ல் கூடிய எங்கள் மகாநாட்டுத் தீர்மானங்களில் நிலவரியை ரத்து செய்யவேண்டும், ஏழை விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற நோக்கங்கள் இருந்திருக்கின்றன. கனம் சுதந்திரா கட்சி அங்கத்தினர்களும் அதைப்பற்றி சொன்னாலும் கூட, அவர்கள் எங்களோடு காங்கிரஸில் இருந்த காலத்தில், 1937-ம் ஆண்டு முதலிலிருந்தே அந்தக் கொள்கை இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 'ஏன் அந்தக் கொள்கையை நிறைவேற்றவில்லை 19 ஆண்டு காலமாக? என்று கேடகலாம். மன்னருக்கும் நிலத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் உள்ள தொடர்பு, அடையாளச் சின்னமாக நிலவரி இருந்தது. 'சாவரின் ரைட்' அடையாளச் சின்னமாக இருந்தது. நிலத்தை வைத்திருப்பவர்களுக்கு மற்றவர்களுக்கு எடுத்துக் காட்ட, அவர்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு அது ஒரு சின்னமாக இருந்த காரணத்தினால் மக்களிடையே கூட சிறிது பயம் இருந்தது. நில்வரி முழுவதையும் எடுத்துவிட்டால், அவர்களுடைய நிலைமை என்ன ஆகுமோ என்ற பயம் இருந்தது. அதைப்பற்றி நினைத்தோம். ஆனால், அதைப்பற்றி சிந்திக்க சிந்திக்க, அதனால் ஏற்படும் தீமைகளை விட நன்மைகள் அதிகமாக இருக்கின்றன என்ற காரணத்தினால், நாங்கள் ஆளும் கட்சியாக இருந்த காலத்திலேயே உடனே அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்று கருதி, இந்தப் பசலி ஆண்டிலிருந்து அது அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று முன்பிருந்த முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அவர்கள் வெறும் பேச்சுக்காகச்

சொல்லவில்லை, நடைமுறையில் கொண்டுவருவதற்காகத் தான் சொன்னார்கள். அந்த முறையில் பார்க்கும் பொழுது ஒரு நல்ல மாற்றத்தை, ஏழை விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்கக் கூடிய அந்த விரும்பத்தக்க அம்சங்கள் கவர்னர் பெருமான் உரையிலே இடம் பெறும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்; அந்த மாற்றம் வேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்; ஆனால் அதுபற்றி கவர்னர் பெருமான் உரையில் குறிப்பிடாதது மக்களுக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுக்கிறது.

கவர்னர் பெருமான் உரையிலே விலைவாசி உயர்வைப்பற்றி பெரும் பகுதி ஒதுக்கியிருந்தபோதிலும், அதில் மக்கள் நம்பிக்கைக்கு உகந்த அம்சம் எதுவுமில்லை என்பதைத் தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "நாடு எங்கணும் பற்பல பகுதிகளில் பரவியுள்ள வறட்சி காரணமாக, தானிய உற்பத்தி பெரிதும் குன்றிய ஒரு தேசீய பொருளாதார அமைப்பின் ஒரு பகுதியாக நாம் இயங்கி வருகிறோம். எனவே, பண்ட வழங்கல் நிலையில் ஏற்படும் நெருக்குதல் காரணமாய், விலைவாசிகளில் ஏற்படும் ஏற்றமும் நாட்டின் பற்பல பகுதிகளில் பற்பல வகையாய் எதிரொலிக்கும். உற்பத்தி சாதாரண நிலையிலிருந்தாலும், வழங்கல் முறையில் குறைபாடுகள் இருந்தால் அவை காரணமாகவும் பெருத்த இன்னல்கள் விளையும்" என்று கவர்னர் பெருமான் உரையில் கூறப்பட்டிருப்பது வானொலிப் பெட்டியில் கால அறிவிப்பு போல் தான் தோன்றுகிறது. அதைவிட சொல்லப் போனால் புயல் அறிவிப்புக்கு எச்சரிக்கை போல், அபாய அறிவிப்பு போல் தோன்றுகிறது. நாட்டினருக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியதாக இல்லை. அடுத்த வரியில் "உற்பத்தியாளர்களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும், சமுதாயத்தில் மிக எளிய நிலையில் உள்ள மக்களுக்கு, நியாய விலைகளில் நல்ல அரிசி கிடைக்கச் செய்யும் முறையிலும் சிறந்ததோர் உணவுக் கொள்கையை நாம் உருவாக்க வேண்டும்" என்ற பகுதியைப் பார்த்தால் நம்பிக்கை ஊட்டுவதாகத் தெரிகிறது. நாள்தோறும் வீட்டுப் பக்கத்தில் வந்து 'நல்ல காலம் பிறக்கப் போகிறது, நல்ல காலம் பிறக்கப் போகிறது' என்று அறிவிக்கும் முறையில் தான் அது இருப்பதாகத் தோன்றுகிறது. நல்ல முறையில் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாங்கள் கவர்னர் பெருமான் உரையில் ஒன்றை எதிர்பார்த்தோம். அது இல்லாமல் ஏமாற்றம் அடைந்தோம். அதாவது, புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி என்ற திட்டம் அப்பொழுது ஆளும் கட்சியாக இருந்த எங்கள் அமைச்சர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. அது 1967 ஜூனிலிருந்து நிச்சயமாக அமுலுக்கு வரும் என்ற செய்தியை எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது நிச்சயமாகச் செய்யவேண்டிய ஒன்று. நாட்டு மக்களுக்கு இலவசமாக கல்வி கொடுத்த பெருமை தமிழ் நாட்டுக்கு உண்டு. அதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். மற்ற மாநிலங்களும் அது குறித்து வியந்தன. அந்த முறை படிப் படியாக வளரவேண்டும் என்ற நிலையில், அன்று ஆளும் கட்சியாகிய எங்கள் கட்சி தங்களுடைய சோஷலிஸக் கொள்கையின் அடிப்படையிலே ஏற்றத் தாழ்வை போக்கவேண்டி, எல்லோருக்கும் கல்வி கற்பிக்கவேண்டும், ஏழை பணக்காரன், ஜாதிமத பேதம் இல்லாமல் என்று கருதி, புகுமுக வகுப்பிலும் இலவசக் கல்வி அளிக்கவேண்டும் என்று எங்களது ஒப்பற்ற தலைவர் திரு. காமராசர் அவர்கள் சொன்னதை கருத்தில் கொண்டு, அமைச்சர் அவையிலே அமைச்சர் எல்லோரும் சேர்ந்து தீர்மானித்து அவ்வாறு செய்யப்படவேண்டும் என்று முடிவு செய்யப் பட்ட காரியம். ஆனால் அதுபற்றி ஒன்றும் கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் இடம் பெறவில்லை. சிறப்பாக மாணவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், மாணவர்களின் படிப்பு சம்பந்தமாக பெருந்தொல்லைகளை அனுபவிக்கும் பெற்றோர்களுக்கு இது மிகுந்த நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். இதை 1967-ல் அவர்கள் எதிர்பார்த்தார்கள். அதுபற்றி கவர்னர் உரையில் குறிப்பிடாதது ஏமாற்றம் அளிக்கிறது என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இறுதியாக, மாண்புமிகு கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் தொழில் வளத் திட்டங்களைப்பற்றி அதிகம் காணோம். தொழில்களைப்பற்றிய நிலைமைகளைக் குறித்தும் எதுவும் சொல்லப்படவில்லை. பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அளிக்கக் கூடிய சலுகைகளைப் பற்றியும் ஒன்றும் காணோம். நெசவுத் தொழிலாளிகளைப்பற்றியும் ஒன்றும் காணோம். இப்படி பலதரப்பட்ட தொழிலாளர்கள் வாழ்வு வளம் பெறுவதற்கான ஒரு திட்டமும் இந்த உரையில் இடம் பெறவில்லை. சோஷலிஸம் என்று ஆளும் கட்சி சொல்லிக் கொண்டிருந்தும், விரும்பத்தக்க விதத்தில் ஒன்றும் கூறப்பட வில்லை. விஞ்ஞான சோஷலிஸம் என்று சொல்லுகிறார்கள். விஞ்ஞானத்தைப்பற்றியோ அல்லது சோஷலிஸத்தைப் பற்றியோ கவர்னர்பெருமான் உரையில் எதுவும் காணாமல் இருப்பதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, சில காரியங்களுக்காவது பாராட்டுவதற்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. என். சங்கரய்யா:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உறுப்பினர்களே, நண்பர்களே, நேற்றைய தினம் இந்த மாநிலத்தினுடைய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையைப் பற்றி இந்திய கம்யூனிஸ்டு கட்சி மார்க்ஸிஸ்டு குழுவின் சார்பாக முதல் முதலில் பேசுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய நான் என்னுடைய கட்சியின் சார்பாக இந்த உரையைப் பற்றிய பின்வரும் கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் தெரிவித்துக் கொள்ள நான் முன்வருகிறேன். 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலிலே மக்கள் அளித்த தீர்ப்பு கடந்த 20 ஆண்டு காலத்தில் இந்த மாநிலத்தில் ஆட்சி புரிந்த ஒரு ஆளும் கட்சியை மாற்றி, திராவிட முன்னேற்றக் கழக மந்திரிசபை ஏற்படுத்தியது கடந்த காலத்திலே காங்கிரஸ் ஆட்சியாளர்கள் செய்யத் தவறியது அல்லது செய்ததிலே

மக்களுக்கு விரோதமாக இருந்த கொள்கைகள், நடைமுறைகள் இவற்றின் விளைவுகள் தான் என்பதை இந்தப் பொதுத்தேர்தல் மீண்டும் உத்திரவாதம் செய்திருக்கிறது, நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. பொதுத் தேர்தலில் மக்கள் தங்களுடைய தீர்ப்பைத் தெளிவாக அளித்திருக்கிறார்கள். அரசாங்கத்தை மாற்றி மக்களுடைய பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய அத்தகைய கொள்கைகளை கையாளக் கூடிய ஆட்சி ஏற்பட வேண்டும் என்று நம்முடைய மாநில மக்கள் மிகத் தெளிவாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் மிகவும் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது இந்த மாநிலத்தில் அமைச்சர் பதவி ஏற்றிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபை எங்களது கட்சியோடு ஒரு தோழமைக் கட்சியாக செயல்படக்கூடிய ஒரு கட்சி ; நட்புறவோடு இந்த மந்திரி சபையையும், அதனுடைய ஆட்சியையும் நாங்கள் பார்க்கிறோம் என்பதை நான் முதன் முதலில் இந்தச் சட்ட சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேர்தலின் பொழுது இரண்டு கட்சிகளுக்கும் இடையிலே ஏற்பட்டிருந்த ஒத்துழைப்பு மேற்கொண்டும் நீடிக்கும். இந்த சட்டமன்றத்தின் வாழ்விலும் திராவிட முன்னேற்றக் கழக மந்திரிசபைக்கு நாங்கள் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை அளிப்போம். இன்று சட்டசபை மொழியிலே எதிர்க்கட்சிகளின் வரிசையில் நாங்கள் அமர்ந்திருந்தாலும், ஒரு சுயேச்சையான கட்சியாக செயல்பட்டாலும், ஆக்கபூர்வமான யோசனைகளைத் திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபைக்கு அளிப்போம். இந்தப் பொதுத் தேர்தலில் தமிழக மக்களுக்கு எந்தக் குறைந்த நிவாரணம் அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டதோ, எதை மக்கள் இந்தப் புதிய மந்திரிசபையினிடமிருந்து எதிர்பார்க்கிறார்களோ, அந்த நிவாரணம் மக்களுக்குக் கிடைப்பதற்காக எங்களுடைய ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் அளிப்போம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய கட்சி எதிர்புறத்தில் அமர்ந்திருந்தாலும், மந்திரி சபையை எதிர்க்கும் கட்சி அல்ல. சட்டபூர்வமான சம்பிரதாயப்படி இன்றைக்கு நாங்கள் இந்த எதிர் வரிசையில் அமர்ந்திருந்தாலும், தமிழ் நாட்டுமக்களுக்கு இந்தத் தேர்தலின்போது நாங்கள் இரண்டு கட்சிகளும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, கூட்டுறவு முறையிலே ஒத்துழைப்பு அளித்து, அவைகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் முயற்சிகளைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட மன்றத்திலே வரக்கூடிய பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட வரையில், ஒவ்வொரு பிரச்சினையையும், அது மக்களுக்கு சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதை உரைகல்லாக வைத்துக்கொண்டு செயல்படுவோம், என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முற் பகல் 10-30 இந்த கவர்னர் உரையிலே, மந்திரி சபைக்கு பிரச்சினைகளை ஆராய சற்று அவகாசம் தேவை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் மாநில அரசாங்கத்திற்கு அதிகப்படியான அதிகாரங்கள்





தேவை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு அம்சங்களையும் ஒப்புக் கொள்ளுகிறோம். மாநிலத்திலே புதிதாக ஏற்பட்டிருக்கிற மந்திரி சபைக்கு பிரச்சினைகளை ஆராய்ந்து அறிந்து கொள்ள அவகாசம் தேவைதான். அந்த அடிப்படையில் நான் பின் வரும் பிரச்சினைகளை இந்த மந்திரி சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கவர்னர் உரையிலே, வளங்கெழு அரசின், வெல்பேர் ஸ்டேட்டின், கொள்கைகளை நிறைவேற்றும் வகையிலும், அதற்கான நிர்வாக இயந்திரம் செவ்வனே இயங்குவதற்குத் தேவைப்படும் இன்றியமையாச் சீர்திருத்தங்களைச் செயல் படுத்தவும் இவ்வரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே போல, உணவுப் பிரச்சினையை சமாளிப்பது பற்றியும், நில வரியைப் படிப்படியாக போக்குவது, உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாகவும் உரையில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் தேவையான சீர்திருத்தங்கள் பற்றி வற்புறுத்தப் பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் நாங்கள் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த புதிய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் நாங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பைத் தருவோம் என்று தெரிவிக்கிறேன். அதே சமயத்தில், பின் வரும் கோரிக்கையையும் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். நான்காவது பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த வெற்றியைக் கொண்டாடும் போது, முதலாவதாக மக்கள் சொல்வது, "ஐயா, புதிய ஆட்சிக்கு ஆதரவு அளித்து, புதிய அரசாங்கம் ஏற்படுகிறது. அவர்களிடம், உணவுப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணவேண்டும் என்று நீங்கள் சட்டசபையில் தெரிவிக்க வேண்டும்" என்பதுதான் அவர்களுடைய தலையாய விருப்பமாக இருக்கிறது. இந்த மந்திரி சபை சொல்லக் கூடிய கொள்கைப்படி கொள்முதல் நடத்தப்போவதைப் பாராட்டி ஆதரிக்கிறேன். நகர சபைகள் இருக்கும் இடங்களிலும், மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கும் இடங்களிலும் உள்ள மக்களுக்கு உணவுப் பங்கீடு செய்வதை நம்முடைய இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நகர சபை, மேஜர் பஞ்சாயத்துக்கள் ஏரியாக்களில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 12 அவுன்ஸ் வீதம் கொடுக்க வேண்டும் என்றால், அதற்கு 12 லட்சம் டன் அரிசி மாநிலத்தில் கொள்முதல் செய்யப்பட வேண்டும். சுமார் ஒரு கோடிப்பேர் வரைக்கும் இந்தத் திட்டத்தின் கீழே கொண்டு வரப்பட்டால், ஓரளவு நியாயமான முறையில் அரிசியும், உணவுத்தானியங்களும் கொடுக்க வசதியாக இருக்கும். சிலர் கூறுகிறார்கள், கண்ட்ரோல்களையே உடனடியாக எடுத்துவிட்டால் நன்மையாக இருக்கும் என்று. நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்த கண்ட்ரோல்கள் இல்லை ; அன்றைக்கு இருந்த அரசாங்கம் கொள்முதல் தேவையில்லை என்று சொல்லி வந்தது ; பிறகு, உணவு தானியங்கள் இல்லாததால், சென்னையிலும் இன்னும் மற்ற இடங்களிலும் விலைவாசி ஏற்றத்தால் நெருக்கடி

[திரு. என். சங்கரய்யா] [1967, மார்ச் 18

நிலைமை ஏற்பட்டதால், ஏதோ தயக்கத்தோடு கொள்முதலை நடத்தியது. இன்றைக்கு சம்பா அறுவடையாகி, தானியங்கள் கிடைக்கின்றன. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் அரசாங்கம், அந்த தானியங்களைச் சேகரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் மிகப் பயங்கரமான உணவு நெருக்கடி ஏற்படும் என்று எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவிக்கிறேன். அந்த நிலையில் சிறுநிலச் சொந்தக்காரர்கள் எந்த விதமான வற்புறுத்தலுக்கும் உள்ளாகாமல் இருக்க, 3 ஏக்கர் நஞ்சையோ, அதற்குத்தக்கவாறு புஞ்சையோ வைத்திருப்பவர்களுக்கு கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். மூன்று முதல் ஐந்து ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு, ஏதாவது லெவி முறையில் கொடுக்க வேண்டும் என்று வகுத்து ஐந்து ஏக்கருக்கு மேல் நஞ்சை வைத்திருப்பவர்களிடம், அவர்களுடைய சொந்தத் தேவைக்கும் விவசாயத்திற்கும் போக பாக்கி இருக்கும் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸை, உபரி தானியங்களை கொள்முதல் செய்யவேண்டிய பொறுப்பை செவ்வனே நிறைவேற்ற முடியும் என்று அமைச்சரவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதே போல, மற்றொரு முக்கியமான பிரச்சினை விவசாயத் தொழிலாளிகள். உதாரணமாகப் பார்த்தால், தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாத நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய உணவு உற்பத்தித் திட்டத்திலேயே, இப்படி வேலையில்லாமல் இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் வகையில் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் ஆக்க பூர்வமான வகையில் செயல்பட்டு, உணவுப் பிரச்சினையையும் தீர்க்க இந்த மேன் பவரை, மனித சக்தியை உபயோகிக்கும் செயலில் ஈடுபடவேண்டும்.

அதே போல, குத்தகைக்காரர்கள் நடைமுறையில் நிலையான வார உரிமை, ஃபிக்ஸிடி ஆப் டென்யூர், பெறுவதற்கு அவசர உணர்வோடு அந்த பிரச்சினையைக் கவனிக்க வேண்டும் என்று அமைச்சரவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதே போலத் தான் தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்களுக்கு மனைக் கட்டுகள் சொந்தமாக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் கைவசமுள்ள தரிசு நிலங்களை, அவற்றின் கணக்குகளை எடுத்துப் பார்த்து, அவற்றில் சாகுபடிக்கு லாயக்கானவற்றை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கினால் உற்பத்தியைப் பெருக்க உதவியாக இருக்கும். குறிப்பாக, அரசாங்கத் தரிசுகளை ஏராளமாக ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். பெரும் நிலச் சொந்தக்காரர்களும், நிலம் உள்ளவர்களும், அப்படிப்பட்ட நிலங்களை சர்க்கார் விவசாயத் தொழிலாளர்களுக்கு அளித்தால், மாநிலத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதோடு மட்டுமின்றி, உணவு உற்பத்திக்கும் ஆர்வம் ஏற்படும் என்பதனை அமைச்சரவைக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.



1967, மார்ச் 18] [திரு. என். சங்கரய்யா]

அடுத்து, கவர்னர் உரையில் தொழில் துறையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிபற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை. உதாரணமாக, கோயம்புத்தூரில் பல மில்கள் மூடப் பட்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப் பட்ட மில்களைத் திறக்க, அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க, அதை ஒரு அவசரப் பிரச்சினையாக எடுத்து, திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் நாட்டிலே இப்பொழுது என்ஜினியரிங் தொழிலில் மூலப் பொருள் கிடைக்காத நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதைத் தீர்க்கவும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்கும் வாழ்வு அளிக்க வேண்டும். கவர்னர் உரையில் விவசாய உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதே சமயத்தில் தொழில் வளர்ச்சியடைந்திருக்கும் இங்கே தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவும், அவர்களுடைய உழைப்பையும் உற்பத்தியையும் பெருக்குவதற்கும், ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்வில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஸ்டாக் தேங்கி இருப்பதால் லட்சக்கணக்கான குடும்பங்கள், அல்லலுற்று இருக்கிறார்கள். அவர்கள் அல்லல் படும்போதெல்லாம், அவர்களுக்கு உறுதுணையாக நின்று பணியாற்றி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும். அப்படிக் கைத்தறிக்காரர்களுக்கு என்று உழைக்கும் பாரம்பரியம் நமக்கு உண்டு. அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நண்பர்களே, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக முதல் அமைச்சர் கனம் அண்ணாத்துரையைத் தலைவராகக் கொண்ட இந்த அமைச்சரவை உணவுப் பண்டங்கள் மீது விதித்து இருக்கும் விற்பனை வரியை குறைத்தோ அல்லது நீக்குவதன் மூலமாகவோ நடவடிக்கை எடுத்தால் விலைவாசியைத் தடுத்து நிறுத்துவதற்கு ஓரளவு உதவியாக இருக்கும். அந்த நிலையையும் இன்றைக்கு அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல திராவிட முன்னேற்றக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் தமிழக மாநில அரசுக்குப் போதுமான நிதி வருவாயை அதிகப்படுத்திக்கொள்ள பஸ் போக்குவரத்தைப் படிப்படியாக மாநில அரசே மேற்கொள்ளும் என்கிற கொள்கையை குறிப்பிட்டிருந்தார்கள். அதையும் பரிசீலனை செய்து, அதன் மூலம் அதிகப்படியான வருமானத்தைப் பெறுவதற்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1967, மார்ச் 18

அடுத்து, இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கக் கூடியது அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களில் குடியிருக்கக்கூடியவர்களை பல்வேறு உத்தரவுகளின் மூலமாக வெளியேற்றி வருவதுதான். முனிசிபாலிட்டிகள், மேஜர் பஞ்சாயத்துக்கள் ஆகிய இடங்களில் உள்ள சர்க்கார் நிலங்களில் இருந்து திடீரென்று இப்படிப் பலர் வெளியேற்றப்படுவார்களானால், அவர்கள் எங்கே போவார்கள்? அந்தப் பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை நல்ல முறையில் பரிசீலனை செய்து இதற்கு நல்லதொரு பரிகாரம் காணவேண்டும். அதற்கிடையில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வருகிற எந்தக் குடிமகனும் அந்த நிலத்தில் இருந்து வெளியேற்றப்படக்கூடாது என்கிற அவசர உத்தரவையாவது பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் யார் யார் மீது வழக்குகள் தொடரப்பட்டனவோ அவற்றை எல்லாம் இந்த அரசாங்கம் வாபஸ் பெற்றிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். மேலும் அந்தப் போராட்டத்திலே பலர் சுடப்பட்டிருக்கிறார்கள். பலர் மரணம் அடைந்திருக்கிறார்கள். 1942-ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில் கூட இத்தனைபேர்கள் தமிழ் நாட்டில் சுடப்படவில்லை. ஆயினும் இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்திலே ஏராளமான பேர்கள் சுடப்பட்டு உயிர் இழந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு எந்த எந்த வகையில் நஷ்ட ஈடு கொடுக்கலாம் என்பதைப் பற்றியும் இந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான் இந்த நிர்வாகத்தில் அரசாங்கம் போலீஸ் இலாக்காவுக்கு ஒரு உத்தரவை அளிக்கவேண்டும். சந்தேக கேஸ்கள் என்பதாகப் போட்டு பல பேர்களை இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் போலீஸ் ஸ்டேஷனிலேயே அடைத்து வைக்கின்ற கொடுமை நிறுத்தப்படவேண்டும். வழக்குகளைப் பதிவு செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு பதிவு செய்யக் கூடாது. ஆகவே சந்தேக கேஸ்கள் என்பதாக பல பேர்களைப் பிடித்து போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கிற நிலைமையை நிறுத்த இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் மூலம் ஸ்தல நிர்வாகத்தை நடத்த அரசாங்கம் முன் வருவதை வரவேற்கிறேன். மக்களின் பிரதிநிதிகள் அந்த அந்த மாவட்டங்களின் நிர்வாக சம்பந்தப்பட்ட பற்பல பிரச்சினைகளிலும் கலந்துகொண்டு பங்கு பெறும்படியான வாய்ப்பை மாவட்ட ஆட்சியாளர்கள் ஏற்படுத்தித்தரவேண்டும் என்பதையும் இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

நண்பர்களே, இறுதியாக நிர்வாகத்துறையில் தமிழ் மொழியை எல்லாக் கட்டங்களிலும் பங்குகொள்ளச் செய்கிறபோது— மாவட்ட அளவிலும் சரி, மேல் நிலையிலும் சரி தமிழிலேயே



1967, மார்ச் 18] [திரு. என். சங்கரய்யா]

அனுப்பப்படுகிற கடிதங்கள் சரியான முறையில் பரிசீலனை செய்யப்பட்டு அதன்பேரில் சரியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்கிற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் இந்த அமைச்சரவை என்று கேட்டுக்கொள்கிறேன். வேறு விஷயங்களைப் பற்றி என் கட்சியில் இருந்து பேசக்கூடியவர்கள் பின்னால் குறிப்பிடுவார்கள் என்று தெரிவித்துக்கொண்டு இத்துடன் நான் முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மதிப்பிற்குரிய துணைப்பேரவைத்தலைவர்**: உறுப்பினர்கள் பேசும் போது, 'நண்பர்களே' என்பதாக நேர்முகமாக அழைக்காமல், தெரிவிக்கின்ற கருத்துக்களை பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ஆ. துரையரசன்**: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் உரை நிகழ்த்தி, அதன் மீது பேசுகின்ற வாய்ப்பை எங்களுக்கு அளித்தமைக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நடந்து முடிந்த நான்காவது பொதுத் தேர்தல் எவ்வளவு அமைதியுடனும், கண்ணியத்துடனும், நல்ல கட்டுப்பாட்டுடனும், கடமை உணர்ச்சியுடனும் கட்டிக்காக்கப்பட்டு நடைபெற்றது என்பதை கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தமிழகத்தில் இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் கட்சியை அகற்றுவதற்குக் காரணமாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், குறிப்பாகக் கூட்டணித் தோழர்கள், அவற்றின் வெற்றிக்கு அரும்பாடுபட்ட லட்சக்கணக்கான வாக்காளப் பெருமக்கள், அருமை கழக ஊழியர்கள், மாணவ சமுதாயம், தாய்மார்கள் அத்தனைபேர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே ஆளும் தரப்பில் இருந்து பேசிய பல நண்பர்கள் தேர்தலுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் அளித்த வாக்குறுதிகள் இந்த அவையில் நிறைவேற்றப்படுமா? என்ற ஐயத்தை எழுப்பினார்கள். கராச்சியில் காங்கிரஸ் கட்சியினரால் போடப்பட்ட தீர்மானம் காற்றில் விடப்பட்டது போல அல்லாமல் காஞ்சீபுரத்துத் தீர்மானங்கள் அத்தனையும் நிச்சயமாக கழக ஆட்சியில் படிப்படியாக நிறைவேற்றப் படும் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

நமது அமைச்சரவையை இந்த நேரத்தில் வேண்டிக்கொள்வது 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருப்பதை உடனடியாக 'தமிழ் நாடு' என்று மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதேயாகும். இப்போது நமது தமிழ்நாட்டிலே ரேடியோ நிலையங்கள் ஆகாசவாணி' என்று ஒலிபரப்புகின்றன. அதைமாற்றி

[திரு. ஆ. துரையரசன்] [1967, மார்ச் 18

'வானொலி' என்று அறிவிப்பதற்கு மத்திய அரசுக்கு நம் அரசு ஆலோசனை சொல்லும், சொல்ல வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நிலவரி நீக்கம் சம்பந்தமாக ஐயப்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும், காரைக்குடியில் போடப்பட்ட தீர்மானம் காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்திருந்தால் நிச்சயமாக நிறைவேற்றப்பட்டிருக்கும் என்பதாகவும் எதிர்தரப்பில் இருந்து சொன்னார்கள். பதவிக்கு வந்திருந்தால் காரைக்குடியில் போட்ட தீர்மானத்தையும் காங்கிரஸ் கட்சியினர் காற்றில் பறக்கவிட்டிருப்பார்கள் என்பதை நாட்டுமக்கள் தெளிவாகத் தெரிந்துகொள்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இந்த அவையில் பணியாற்றிவந்த காலத்தில் இந்தச் சபையில் கொண்டுவந்த தீர்மானங்கள், பேசிய பேச்சுக்கள், எடுத்து வைத்த கருத்துக்கள் அனைத்தும் படிப்படியாக கழக ஆட்சியில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் நடந்து முடிந்து 15 நாட்களாகின்றன. இம்மாதம் 6-ஆம் தேதி தான் புதிய அமைச்சரவை பொறுப்பேற்றிருக்கிறது. 7-ம் தேதியே, ரூபாய்க்கு 3 படி அரிசி எங்கே? என்று கேட்டால் மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன் "இருபதாண்டு ஆட்சியில் நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்களால் ஏற்படுத்தப்பட்ட சீரழிவை படிப்படியாகத்தான் போக்க முடியும், நிச்சயமாக இந்த அமைச்சரவை படிப்படியாக தங்களுடைய வாக்கை நிறைவேற்றியே தீருவார்கள்" என்று தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக நிலவரி சம்பந்தமாக—அதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற ஒரு அதிகாரியைக் கொண்ட குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகு—அதைப் பரிசீலனை செய்து நிலவரியை எடுப்பதோடு ஏழை மக்களுக்கு இந்த அரசு வாழ்வளிக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை. மற்றும் கள்ளமார்க்கெட், பதுக்கல் சம்பந்தமாக இந்த அரசின் கொள்கை விளக்கப்பட்டிருக்கிறது. இப்போதே அதனால் ஏற்பட்டிருக்கிற பலனைப் பார்க்கிறோம், பத்திரிகை வாயிலாக. பதுக்கல்காரர்கள் மெள்ள மெள்ள தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்கிற நிலைமை நிச்சயமாக தமிழகத்தில் உருவாகும் என்று நினைக்கிறோம். நண்பர் திரு. ஆறுமுகம் எடுத்துச் சொன்னதுபோல பதுக்கல்காரர்களுக்கு ஆயுள் தண்டனை அளிக்கக்கூடிய வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. ஏற்கனவே இந்த மன்றத்தில் கள்ள நோட்டு அடிக்கின்றவர்களை சுட்டுக்கொல்ல வேண்டும் என்று குறிப்பிட்ட போது ஜனநாயகத்தில் அப்படிச் செய்ய முடியாது என்பதாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். என்னைக் கேட்டால் பதுக்கல்காரர்கள், கள்ள நோட்டு அடிக்கிறவர்கள் ஆகியோர் அத்தகைய தண்டனைக்கு உள்ளாக்கப்படுகிற நிலைமை கூடப் பொருந்தும். கள்ளநோட்டுப் புழக்கம் நாட்டில் ஏராளமாக இருப்பதாக ஒற்றர்களின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒருசில இடங்களில் முன்பு ஆளும் கட்சியில்



1967, மார்ச் 18] [திரு. ஆ. துரையரசன்]

இருந்தவர்களின் தலையீடு காரணமாக பிடிக்கப்பட்ட கேஸ்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக காரைக்குடியில் மகாநாடு நடைபெற்ற நேரத்தில் கூட உயர்ந்த நிலையில் உள்ள மனிதர் இரவோடு இரவாகக் கைதுசெய்யப்பட்டு விடியற்காலைக்குள் விடுதலை செய்யப்பட்டதையும் பார்த்தோம். காரைக்குடி மகாநாட்டுக்குப் பிறகு இரண்டு ரூபாய் நோட்டுக்கள் செல்லத்தக்கதல்ல என்பதான நிலைமை உருவாயிற்று. இன்னும் ஏராளமான கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் இவ்விஷயத்தில் தீவிரமாகக் கவனம் செலுத்தி, கள்ள நோட்டு அடிக்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பிடித்துக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலமாக ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறேன். கடந்த இருபது ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி ஆண்டு வந்தது. புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி போன்ற வறண்ட பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க 1946-ஆம் ஆண்டிலேயே சிலட்டூரில் நடந்த மகாநாட்டில் காவேரித் தண்ணீரைக் கொண்டுவர நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக அறிவித்தார்கள்.

இந்த நாட்டை இதுவரை ஆண்டுவந்த காங்கிரஸ் கட்சியினர் இதைப்பற்றியெல்லாம் தொடர்ந்து இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டும் கேளாக் காதினராகத்தான் இருந்தார்கள். என்னுடைய வட்டாரத்தைப்பற்றி மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய வட்டாரத்தைப்பற்றி பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவர்கள் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பொதுவாக அவர்கள் தமிழகத்திற்குச் சொந்தமென்றிருந்தாலும்கூட நான் குறிப்பிட்ட இந்த இடங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்த இரண்டு மூன்று இடங்கள் அந்தமான் தீவுகளைப் போல் காட்சியளிக்கின்ற பரிதாபமான நிலை இருக்கிறது. காலத்தே மழை பெய்யவில்லையென்றால் அந்த இடங்களிலே உள்ளவர்கள் அங்கேயிருந்து தஞ்சை வடபகுதிக்குச் சென்று வாழ்க்கை நடத்தக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, விரைவிலே காவிரித் தண்ணீரைக் கொண்டுவரக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். என்னுடைய பகுதி நீண்ட நெடுங்காலமாக ஜமீன்தார்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகவே இருந்திருக்கிறது. ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு நூற்றுக்கணக்கான ஏரிகள் மராமத்துச் செய்யப்படவில்லை. அதைப்பற்றி நான் கடந்த ஐந்தாண்டுக் காலமாக இந்த மன்றத்திலே எடுத்துச்சொல்லியபொழுது நிதி நிலை வசதியில்லை, நிதி நிலை வசதியில்லை என்றுதான் சுட்டிக்காட்டினார்களே ஒழிய வேறு ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. நூற்றுக்கணக்கான ஏரிகள் மராமத்துச் செய்யப்படாமலேயே

இருக்கின்றன. அப்படி மராமத்துச் செய்வதற்கு, அதைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக ஒரு குழு ஒன்று ஏற்படுத்தி, அந்தக் குழு அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கின்ற அறிக்கையை வைத்துக் கொண்டு ஒரு நல்ல நிலைமையை உருவாக்கினால், ஏரிகள் எல்லாம் மராமத்துச் செய்யப்பட்டு, உணவு உற்பத்தி பின்தங்கிய நிலையிலிருப்பதைப் போக்குவதற்கு உதவியாக இருக்கக்கூடிய நிலைமை உருவாகும். மக்கள் இதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், அறந்தாங்கி பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளாகப் பிரகடனம் செய்தால் அங்குள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். இதைப்பற்றி பாராளுமன்றத்திலே, தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற, சென்ற முறையும் இருந்த திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்போல அந்தப் பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகள் எனப் பிரகடனம் செய்தால் அந்த வட்டாரத்து மக்களுக்கு அரசாங்கமே நல்ல முறையிலே உதவிகளையெல்லாம் செய்யக்கூடிய ஒரு நல்ல நிலைமை ஏற்படும். அறந்தாங்கிப் பகுதியிலே, நீண்ட நெடுங்காலமாக நான் சொல்லி வருகிறேன், ஒரு தொழில் நுட்பக் கல்வி நிலையமும், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. பி. வேலுசாமி:** மதிப்பிற்குரிய மன்றத் துணைத் தலைவரவர்களே, இருபது ஆண்டு காலமாக இருந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சி போய் தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சர்க்கார் அமைந்து உள்ளது. மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்துகின்ற காலத்து உணவுப் பிரச்னை சம்பந்தமாகப் பல விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக 20 ஆண்டுக் காலத்திலே காங்கிரஸ் கட்சி கொண்டுவந்த நிலச் சீர்திருத்தம் விவசாயிகளை ஊக்கப்படுத்தியது என்ற முறையிலே சொன்னார்கள். பல ஜில்லாக்களிலே நிலச் சீர்திருத்தம் செய்தும், நிலமில்லாத விவசாயிகளுக்குப் பூமி கிடைக்கவில்லை. ஏதோ சில ஜில்லாக்களிலே, சில ஆயிரம் ஏக்கர்களுக்கு உள்ளாகவேதான் இருக்குமென்று கருதுகிறேன், கொடுத்திருக்கிறார்கள். நிலமில்லாத விவசாயிகளுக்கு வாஸ்தவமாக நிலம் கிடைத்து இருக்கிறதா என்று பார்த்தால் அது சந்தேகம்தான். நிலச் சீர்திருத்தம் வருவதற்கு முன்பாக, ஒரு சில மாதங்களுக்கு முன்பாக நாமினலாக ஏதோ ஒரு கிரயம் செய்து கொடுக்கப்பட்டு அதற்குக் கடன் வாங்கியிருக்கிறவர்களிடத்திலே இன்றைக்கும் கடனை வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வட்டி கொடுக்கக் கூட





முடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலையில் அவர்கள் எப்படி விவசாயத்தை நல்லமுறையில் செய்யமுடியும்? பல இடங்களிலே விவசாயிகள் கையிலே பணம் இல்லாமல், விவசாயம் செய்யக்கூட சந்தர்ப்பம் இல்லாமல் நொடித்துப் போயிருக்கிறார்கள். அவர்களால் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியாது. ஆகவே எங்கெல்லாம் அந்தமாதிரி கிரயம் செய்து கடன் வாங்கியிருக்கிறார்களோ அதையெல்லாம் ரத்து செய்துவிட்டால்தான் அவர்கள் ஊக்கத்துடன் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவியாக இருக்கும். அதிகமாக உணவு உற்பத்தி செய்வதற்கு மானியம் அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. பெரிய அளவில் நிலம் வைத்திருக்கிறவர்கள், சௌகரியமாக விவசாயம் செய்யக்கூடியவர்கள் ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் தான் அதிகமாக விளைச்சல் உண்டாக்கி மானியத்தைப் பெறுகிறார்களே ஒழிய சாதாரண விவசாயிகள் யாரும் மானியம் பெறவில்லை. சிறிய விவசாயிகளிடத்திலே மிரட்டி பெரிய நிலச்சுவான்தார்களிடத்திலே நயவும் தாட்சண்யமும் காட்டி வசூல் செய்வதாகத் தெரிகிறது. அதையும் மாற்ற வேண்டும். கூட்டுறவு சம்பந்தப்பட்ட மட்டில், உர விநியோகம் கூட்டுறவு முறையில் விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் லாரி லாரியாக உரம் வெளியிலே விநியோகம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரண்டொரு விஷயங்கள் கூடச் சொல்லலாம். ஆறு மாதங்களுக்கு முன்பு பிரமுகர் ஒருவர், அவர் சிறை சென்றுவந்த தியாகி, ஒரு முக்கியமானவரிடம் சென்று சலுகை வேண்டுமென்று கேட்டாராம். அதற்கு அவர் உங்கள் ஊரில் கூட்டுறவு சொசைடி இருக்கிறதா என்று கேட்டாராம். அதற்கு அவர் இல்லையென்று சொன்னவுடன், அப்படியென்றால் யாராவது ஐந்து பேர்களை வைத்து அங்கே ஒரு கூட்டுறவு சொசைடி ஆரம்பித்து அதை வைத்துக்கொண்டு நீங்கள் பிழைக்கலாமே என்று சொன்னாராம். அப்படிப்பட்ட முறையில் கூட்டுறவு என்று சொன்னால் ஏதோ ஒரு சிலர் கையில் சுயநலத்திற்காகத்தான் இருந்துவருகிறது. இந்த நிலையைப் போக்கவேண்டும். ஒரு சில வசதி படைத்தவர்கள் தங்களுடைய குடும்ப சொத்தாக பொதுச் சொத்தை மாற்றிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றியமைக்கவேண்டும், இல்லையென்றால் உரமோ இன்னும் மற்ற வசதிகளோ காண முடியாத நிலைதான் ஏற்படும்.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில் கவர்னர் உரையிலே ஒன்றும் சொல்லப்படாதது குறித்து வருத்தப்படுகிறேன். இந்த மாநிலத்திலே 20 லட்சம் தொழிலாளர்களுக்கு மேல் வசிக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை நெருக்கடியான நிலையில் இருக்கிறது. கோயம்புத்தூரில் ஏற்கனவே 5 பஞ்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. இன்னும் ஒரு பஞ்சாலையும் சமீபத்திலே மூடப்பட்டுவிட்டது. ஆகவே, தொழிலாளர்களுக்கு அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க ஒரு புதிய நிலைமையை உருவாக்கவேண்டும். அவர்கள் எல்லாம் இந்த சர்க்காரிலே ஒரு புதிய நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். புதிய சர்க்கார் வந்திருக்கிறது, வந்திருக்கிற சர்க்கார் நிச்சயமாக நம்முடைய நலன்களிலே அக்கறை எடுத்துக்கொண்டு

காரியமாற்றுவார்கள் என்ற நல்ல நம்பிக்கையில் அந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் சீக்கிரமாக, உடனடியாக அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்து அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தி முறையில் சில புதிய விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ரேஷனில் கொடுக்கப்படும் அரிசியானது ஏற்கனவே இரண்டு முறை வேக வைக்கப்பட்டு, ரைஸ் மில்லிலே இரண்டு சமையல் ஏற்கனவே ஆகி மூன்றாவது சமையலாக வீட்டிலே நடக்கிறது. அந்த அரிசிக்குப் புதிய புதிய கலர்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அரிசியைச் சாப்பிடுகின்றவர்களுக்குப் புதிய புதிய வியாதிகள் வரக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. அதையும் உடனடியாகத் தீர்ப்பது சிறப்பாக இருக்கும். போராமையின் காரணமாக அரிசி மில்காரர்கள் நிறைய தண்ணீரைத் தெளித்து மூட்டையாகக் கட்டி வைத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட சமூக விரோதமான காரியத்திலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அரிசியிலே கல்லைக் கலப்பதும் சர்வ சாதாரணமாகி விட்டது. புரொக்யூர்மென்ட் செய்யப்படும்போது பெரிய இடங்களில் எல்லாம் நெல்லோடு 'பாலை'யையும் சேர்த்து அளந்து விடுகிறார்கள். போராமையின் காரணமாக இவ்வாறு செய்கிறார்கள். இதைத் தடுப்பதற்கும் வழி செய்வது சிறப்பாக இருக்கும். அரிசி மில்காரர்கள் செய்யும் கொடுமையை உடனடியாகத் தடுக்க வேண்டும். நிலச்சீர்திருத்தம் என்ற பெயரால் சாதாரண விவசாயிகள் பெற்றிருக்கின்ற கொடுமைகளிலிருந்து அவர்களுக்கு விடுதலையளிக்கும் காரியத்திலே புதிய சர்க்கார் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளிகள் புதிய சர்க்காரிடம் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தங்களுக்கு எல்லாவிதமான நலன்களும் ஏற்படும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். ஓராண்டு காலமாக ஐந்து மில்கள் மூடப்பட்டு 20,000 தொழிலாளிகளுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையில் உடனடியாக அரசாங்கம் தலையிட்டு அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைக் கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. வி. எம். அண்ணாமலை: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, முதல் முதலிலே சட்ட மன்றத்திற்கு வந்தவன் என்ற முறையில் என்னுடைய பணிவு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றையதினம் கவர்னர் அவர்கள் ஆற்றிய சிறப்புரையை வரவேற்கின்ற வகையிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டினுடைய ஏழை விவசாய மக்களுடைய துயரைப் போக்கவும், விலைவாசி ஏற்றத்தைக் குறைக்கவும் தமிழக அரசு எத்தகைய சீரான திட்டங்களை மேற்கொள்ள இருக்கிறது





என்பதை கவர்னர் அவர்கள் இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கவர்னர் அவர்களுடைய உரையைப் பாராட்டிப் பேசுகின்ற எங்களுடைய கட்சி உறுப்பினர்களுக்கு மறுப்புத் தெரிவிக்கின்ற வகையில் காங்கிரஸ் சார்புடைய கனம் உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள் பேசும்போது, 'விவசாயிகளைப் பற்றியும், ஏழைகளைப் பற்றியும் மிகைப்படுத்திப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்' என்றும் 'விவசாயிகளுக்கு விதிக்கப்பட்ட நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்று முன்னைய அரசு திட்டமிட்டு இருந்தது; அதை நிறைவு செய்கின்ற வகையில் கவர்னர் பெருமான் அவர்கள் உரை காணப்படவில்லை என்பதற்காக வருந்துகிறேன்' என்றும் சொன்னார்கள். உண்மையிலேயே, இந்த நாட்டை 20 ஆண்டு காலமாக ஆண்டு வந்த காங்கிரஸ் அரசு, கட்சியின் ஆதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்கும் அந்தக் கட்சியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமே ஆட்சி செய்ததோ என்று கருதத்தக்க அளவுக்கு ஆட்சி செய்ததின் காரணமாகத்தான் இந்த நாட்டின் ஏழை நடுத்தர மக்கள் எல்லாம் ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கும் வகையில், ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்ற சீரிய நெறியில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதனுடன் தோளோடு தோள் உரசி நின்ற தோழமைக் கட்சிகளுக்கும் மகத்தான வாக்குகளைத் தந்து அரசை நிறுவுவதற்கான நல்ல வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். அந்த வாய்ப்பினைத் தந்த பெருமக்களுக்கெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்திலே என் மனம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில் ஒன்றை நான் கூற ஆசைப்படுகிறேன்.

நம்மை நீண்ட நெடும் காலமாக ஆண்டு வந்த காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இந்த நாட்டு மக்களுக்கு அள்ளித் தந்த வாக்குறுதிகள் ஏராளம், ஏராளம்; எண்ணற்றவை; ஏட்டில் அடங்க முடியாத அளவுக்குத் தந்தார்கள். ஆனால், அவற்றை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள். இந்த நாட்டிலே இருந்த வாக்காளப் பெருமக்கள், குடிமக்கள் அத்தனை பேரும் அந்த வாக்குறுதிகளிலே நம்பிக்கை இழந்த நிலையில் இந்த நாட்டிலே ஒரு புதிய அரசை, புதிய திருப்பத்தை, ஏழைகளுடைய அரசை, நிறுவ வேண்டுமென்ற உணர்வோடு நடைபெற்ற தேர்தலில் முடிவு கூறியிருக்கிறார்கள். நாகரிகத்தின்பாற்பட்டு மதிப்புக்குரிய கவர்னர் அவர்கள், அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றது என்று குறிப்பிட்டிருந்தாலும் எத்தனை இடுக்கண்களை திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களும், தோழமைக் கட்சி வேட்பாளர்களும், தங்கள் தங்கள் உயிர்களுக்கு ஜவாப்தாரி, பொறுப்பு அற்ற நிலையில் அகப்பட்டுத் தவித்ததை இந்த நாடு அறியும்; நல்ல மனம் இருந்தால் நீங்களும் அறிவீர்கள்.

உண்மையான ஒன்றை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மதிப்புக்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வருத்தம் கொள்ளக் கூடாது. என்னைப் போன்ற பல பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; இந்த மன்றத்திற்கு ஐந்து ஆண்டு காலத்திற்கு முன்பே நான்

வருவதற்கு வாய்ப்பைப் பெற்றிருந்தும் அந்த வாய்ப்பு ஆளும் கட்சியால் பறிக்கப்பட்டவன், அது குறித்துக் கவலைப்படவில்லை. ஜனநாயகம், சட்டம், அரசியல், நீதி, அமைதி என்பதெல்லாம் இந்த நாட்டை ஆண்டு வந்த காங்கிரஸ் கட்சிக்கு அப்பாற்பட்ட தன்மையில், அந்தக் கட்டுப்பாடு, நீதி, அமைதி, ஒழுங்கு ஆகியவற்றையெல்லாம் எதிர்க்கட்சிகள் மட்டுமே கடைப்பிடித்து ஒழுக வேண்டுமென்ற முறையில், காங்கிரஸ் கட்சி அத்தனையையும் மீறிய தன்மையில், சட்ட வரம்புகளை மீறிய தன்மையில், கட்டுப்பாடுகளை மீறிய தன்மையில், தர்மத்தை மீறி, அறத்தை மீறி எத்தனையோ காரியங்களைச் செய்துதான் 1962 தேர்தலானாலும் சரி, அதற்கு முந்தி 1957-ம் ஆண்டு தேர்தலானாலும் சரி, அவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இப்போது நடைபெற்ற 1967-ம் ஆண்டுத் தேர்தலிலும் எத்தனையோ இடுக்கண்களைத் தாண்டித்தான் மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று ஏழைப் பங்காளர்களாகிய எங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இந்த நாட்டு ஏழை மக்களின் இருண்டுபோன வாழ்வுக்கு விளக்கேற்றி வைக்கும் முதற்குடிமகன் அறிஞர் அண்ணா அவர்கள்தான்; அவர்கள் தலைமையில் பணியாற்றும் தொண்டர்கள் சட்ட மன்றத்திற்குச் சென்றால்தான் இருண்டு போன மக்களுக்கு நல்வாழ்வு அமையும் என்ற நம்பிக்கையோடு பெருவாரியான வாக்குகளைத் தந்து இந்த மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நல்ல எண்ணங் கொண்ட மக்களைப் பாராட்டுகிறேன்.

இந்த நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் விவசாயிகள். விவசாயிகள் வளம் பெற்றால்தான் எல்லோருடைய வாழ்விலும் ஒளி வீசும். விவசாயிகளுடைய வாழ்க்கை வளம் பெற்றால்தான் இந்த நாட்டினுடைய ஏழை பாட்டாளி மக்கள், நடுத்தர மக்கள் அத்தனை பேருடைய நல்வாழ்வையும் பேண முடியும். விவசாயத் துறையில் முன்பிருந்த அரசுக்கு அழுத்தந்திருத்தமான பற்றும் நம்பிக்கையும் இருந்திருந்தால் விவசாயத் தொழில் விஞ்ஞான முறையில் எந்த அளவுக்கு மேலோங்கியிருக்க வேண்டும், அதற்கான நல்லதொரு வாய்ப்பு உருவாகியிருக்க வேண்டுமென்பதை எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

நான் சென்ற ஜூன் மாதத்தில் காஞ்சிபுரத்தில் உள்ள விவசாயப் பண்ணையில் நான்கு மூட்டை கிச்சலி சம்பா விதை நெல் வாங்கினேன். என்னைப்பற்றி நான் சொல்லிக் கொள்வதால் அது நல்லதொரு உபமானத்தை எடுத்துக் காட்டும் என்ற முறையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான்கு மூட்டை விதை நெல் வாங்கினேன். வாங்கி முதல் நான்கு மூட்டை விதை நெல்லையிட்டு அவற்றை எடுத்து நாற்று நட்டு அதற்கு வேண்டியதைச் செய்தேன். பாதி கதிர் முன்னே வந்துவிட்டது, பாதி பயிராக இருந்தது. எனக்கு விஷயம் புரியவில்லை. ஓடோடிச் சென்றேன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம். 'ஐயா! தரமான விதை; நல்ல பொறுக்கு நெல் விதை என்றெல்லாம் குறிப்பிட்டீர்களே! அதை நம்பி வாங்கிய எனக்கு இந்த கதி ஏற்பட்டிருக்கிறதே! இதைப்



பாருங்கள்' என்று சொன்னேன். 'சல்பேட் போடுங்கள், பின் நன்கு மேலே ஓங்கி வளரும், கதிர் ஒன்றாகும்' என்றார்கள். அதையும் பார்த்தேன். எல்லாம் பழுத்து காய்ந்து போய், மடிந்து மண்ணோடு மண்ணாகப் போய்விட்டது. பிறகு எடுத்த கதிர்தான் அறுவடை செய்யும் நிலைக்கு வந்தது. தமிழகத்தில் பெய்த பெரு மழை காரணமாகவும், அடித்த புயல் காரணமாகவும் அறுவடை நெல்லைப் பெற முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டு விட்டேன். நல்ல தரமான விதைகள் கொடுக்கப்பட்டிருந்தால், உரிய காலத்தில் அதை வைத்துப் பயிரிட்டிருந்தால் புயல் அடித்திருந்த போதிலும் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்காது. பொறுக்கு விதை நெல் என்று சொல்வதெல்லாம், அதைக் குறிப்பிட்ட சில விவசாயிகளிடம் விலை பேசி வாங்கிக் கொள்கிறார்கள். அதற்கு அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். பச்சை நெல்லை சரியான காய்ச்சல் இல்லாமல் கொட்டிப் போட்டு வைக்காதவர்களிடம் அதிக விலையில் வாங்குவது, தங்களுக்கு வேண்டியவர்களிடம் இருந்து அதைப் பெறுவது, அதற்காக அதிகாரிகளை உசுப்புவது என்ற நிலையில் சென்றகால சர்க்கார் இருந்தது. எதிர்காலத்தில் நடைபெற இருக்கிற தமிழக அரசானது தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின் கீழ் நன்கு நடக்க இருக்கிறது. ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட சட்டமன்ற, நிர்வாக அமைப்பு முறைகளில் மாசுபடும் அளவிற்கு இருபது ஆண்டுகளாக இங்கு இந்த மன்றத்தில் உருவாக்கப்பட்ட திட்டங்களை நல்லமுறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செயல்படுத்தவொட்டாமல் ஒரு கட்சிக்காரர்களின் ஆதிக்கமாக இருந்துவந்தது. அவர்களின் ஊடுருவல் பிரதிபலிக்கிற தன்மையைத்தான் எடுத்துக் காட்டியது. அந்த நிலை மாறவேண்டுமென்று இதே மன்றத்தில் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் 1957-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது நான் ஓர் பார்வையாளராக இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். போலீஸ் துறை மான்யத்தின் மீது அவர்கள் பேசினார்கள். அதாவது, 'அமைச்சர் பெருமக்களே உங்களை மதிக்கிறேன், உங்கள் ஆற்றலை மதிக்கிறேன், காவல் துறை என்ற துறை இருக்கிறதே அத்துறை கறை படியாது நியாயமாக இருக்க வேண்டும். அத்துறை நீதியின் உச்சியில் இருக்கவேண்டும். அத்துறை விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டிருப்பதாக இருக்க வேண்டும். விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்ட தன்மையில், கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தன்மையில், பற்றற்ற தன்மையில் குற்றம் புரிபவர்களைத் தண்டிக்கும் வகையிலும், இழப்பிற்கு ஆளாகக் கூடியவர்களுக்கு கை கொடுத்து காப்பாற்றும் தன்மையிலும் அத்துறையை ஆக்குங்கள்' என்று அன்று சொன்னார்கள். இன்று ஆளுகிற பொறுப்பை எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சொன்ன வாக்குகளை நிறைவேற்றுவதில் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஈடாக தமிழக மண்ணிலே—ஏன்? இந்திய துணைக் கண்டத்திலேயே—ஒருவரும் இருக்க மாட்டார்கள் என்று நான் சொன்னால் அதை மிகைப்படுத்திக் கூறுவதாக யாரும் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அடக்க உணர்ச்சியும் எளிமையும்,

எளிய வாழ்க்கை நடத்தி காட்டும் எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிற இந்த அரசு நிச்சயமாக ஏழை எளியவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் இருளை நீக்கி அவர்களுக்கு நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கும், நல்ல வாய்ப்புக்களை ஏழை எளியவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் என்று இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கு சட்டமன்றத்தில் பேசப்படுகிற முறைகளில் முன்னுக்குப் பின் முரணாக ஏதாவது இருந்தாலும் பயிற்சி காரணமாக பிறகு திருத்திக் கொள்வோம் என்ற உணர்வோடு கொள்ளுதல் வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 'ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவதாக வாக்கு கொடுத்தார்கள், ஆனால் அப்படி போடுவதற்குரிய வாய்ப்பு பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஏன் சேர்க்கப்படவில்லை' என்ற ஒரு வினாவை எழுப்பிய அந்த அருமை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், எங்கள் தேர்தல் வெளியீட்டை, அறிக்கையை அருள்கூர்ந்து உங்களுக்கு ஓய்வு கிடைக்கும்போது அமைதியாக படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால் ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவோம் என்று நாங்கள் கூறவில்லை. ஏழை பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்காக நல்ல சீரிய திட்டங்களைச் சமைப்போம், வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடும் கோலத்தை மாற்றுவதற்குரிய திட்டத்தை உருவாக்கிக் கொடுப்போம், இல்லாமையைப் போக்கி பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்கிக் கொடுப்போம் என்றெல்லாம்தான் தேர்தல் நிர்மானத்தில் தெரிவித்திருக்கிறோமே தவிர ஆட்சிக்கு வந்தால் மூன்று படி அரிசியை ஒரு ரூபாய் நோட்டைப் பெற்றுக் கொண்டு கொடுப்போம் என்று கூறவில்லை. 1962-ல் கூறியிருக்கிறோம். அப்போதிருந்த ரூபாயின் மதிப்பை எண்ணிப் பார்க்க வேண்டும். ரூபாயின் மதிப்பைக் குறைத்த குற்றத்திற்கு உரியவர்கள் உங்கள் கட்சித் தலைவர்கள்தான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ரூபாயின் மதிப்பைக் குறைத்து விட்டார்கள். அதனால் பண்டங்களின் மதிப்பு உயர்ந்துவிட்டது. ரூபாயின் மதிப்பு உயர்ந்தால்தான் பண்டங்களின் விலை குறையும். அன்று சொன்னபடி பார்த்தால், இன்று ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதாக அமைந்துவிட்டால் 1962-ல் இருந்த ரூபாய் மதிப்புப்படி ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவது போலாகும். அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க, அதற்கான திட்டத்தை உருவாக்க நீங்களும் உறுதுணை புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பெருமைக்கு நீங்களும் நாங்களும் உரியவர்களாவோமென்றும் கூறிக் கொண்டு கவர்னர் பெருமானின் இந்த சீரிய உரையை வரவேற்கிறேன் என்று கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் விவாதத்தில் இருந்து வரும் கவர்னர் பெருமான் அவர்களின் உரைமீதுள்ள விவாதத்தில் கலந்து





கொண்டு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக கவர்னர் பெருமான் அவர்களின் உரை ஆரம்பத்தில் பழைய அங்கத்தினர்களையும், புதிய அங்கத்தினர்களையும் வரவேற்று எல்லோருக்கும் நல்வாழ்த்து கூறியுள்ளார்கள். அதற்காக புதிதாக வந்திருப்பவர்களும், பழையவர்களும் கலந்து கொண்டு எங்கள் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். நான்காவது பொதுத் தேர்தல் நல்லமுறையில் நடந்தது என்பதைப் பற்றி விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். கவர்னர் அவர்களின் உரையில் அது காணப்படுகிறது என்றாலும் மந்திரி சபையின் ஒரு திட்டம்தான், அவர்களின் நோக்கத்தைத்தான் அது எடுத்துக் கூறுகிறது என்பதுதான் அர்த்தம். பொதுத் தேர்தல் நல்ல முறையில் நடந்திருக்கிறது என்றால் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நேர்மையான முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பாராட்டக் கூடிய முறையில் அவ்விதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மிக மிக உண்மை. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் குறிப்பிட்டதைப் பார்க்கும்போது, ஏதோ எல்லாவிதமான அசம்பாவிதங்களும் நடைபெற்றன, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு தவிர்க்கப்பட்ட முறையில் சர்க்கார் ஆட்சியில் இருப்பவர்கள் நடந்து கொண்டார்கள் என்ற முறையில் பேசினார்கள். ஒன்றை மட்டும் மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். சர்க்கார் கட்சியில் இருக்கக் கூடியவர்கள் அது மாதிரியாக நடந்திருப்போமானால், அப்போது எதிர்க் கட்சியாக இருந்தவர்கள் தற்போது ஆளும் கட்சியாக மாறக்கூடிய வாய்ப்பே ஏற்பட்டிருக்க முடியாது. அந்த ஒன்றை மாத்திரம் உணர்ந்துகொண்டால், ஜனநாயகம் நல்ல முறையில் நடந்திருக்கிறது என்பது தெரியும். ஜனங்களுக்குப் பிடிக்காததைச் செய்தால் உண்மையிலேயே சர்க்காரை மாற்றக் கூடிய நிலை ஏற்படும் என்ற அர்த்தத்தில் செய்திருப்பதை வரவேற்கிறேன். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. அதே ரீதியில் மக்களுக்கு என்னென்ன கொள்கையில், என்னென்ன அடிப்படையில் நன்மை, பணி செய்கிறோம் என்பதையும், நாம் எந்த முறையில் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி தற்போது சட்ட சபைக்கு வந்திருக்கிறோம், ஆளக்கூடிய கட்சியில் இருக்கிறோம் என்பதையும் உற்று நோக்கும் காலத்தில், கனம் உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்று சொல்லவே இல்லை என்று சொன்னார்கள். தேர்தல் காலத்தில் எங்களைப் போன்றவர்கள் இரவு பகலாக கிராமங்களில் சுற்றிப் பார்க்கும்போது, கிராம மக்கள் அபிலாஷைகளைத் தெரிவித்தார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம் என்று சொன்னதை நன்கு மனதில் கொண்டார்கள். மூன்று படி கிடைத்தால் நல்லது என்றும் சிலர் கொண்டார்கள். விவசாயிகள், மூன்று படி போடுவது என்றால் நஷ்டம் அடைவோம் என்று அவர்கள் அறிவார்கள். அந்த விதத்தில் பார்க்கும்போது உண்மையிலேயே தேர்தல் காலத்தில் என்ன என்ன வாக்குறுதி கொடுத்தோமோ அதை நிறைவேற்றுகிற வகையில் கொள்கையை நிறைவேற்றுவதுதான் உண்மையான அரசுக்கு

அழகே தவிர, சொல்லுவது ஒன்று, செய்வது வேறு ஒன்று என்று இருக்கக் கூடாது. கவர்னர் அவர்களுடைய உரையி லேயும் எல்லாவித அம்சங்களையும் குறிப்பிட்டிருந்தால் அதை வர வேற்றிருப்போம், நன்றி செலுத்தியிருப்போம். ஆனால், மாறுபட்ட நிலையில் காங்கிரஸ் சர்க்கார் இருபது ஆண்டுகள் ஆண்டு கொண்டிருந்தபோது அவர்கள் என்ன திட்டங்களைக் கொண்டிருந் தார்களோ அதேதான், அதே வார்த்தைகள்தான் இதிலே குறிப் பாகக் கண்டிருக்கிறதே தவிர, நவீன முறையில் வேறு ஒன்றும் இதில் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிகிறது. இதைத்தான் பல அங்கத்தினர்களும் எடுத்துச் சொன்னார்கள். உதாரணமாகச் சொல்லுகிறேன், நிலவரியை எடுத்துக் கொள்வோம். கடந்த தேர்தலுக்கு முன் சர்சார்ஜை எடுத்து விடுகிறோம் என்று அது எடுக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்தில் நிலவரியை அடுத்த பசலியில் எடுக்கப் போகிறோம் என்றார்கள். நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அது பரிசீலனையில் இருந்துகொண்டு வந்திருக்கிறது. இன்றைக்கு புதிய சர்க்கார் அமைந்திருக்கும்போது அந்த முடிவைத் தெரிவிக்காததால் அதிக அளவுக்கு உள்ள விவசாயிகள், சிறு நிலம் வைத்திருக்கிறவர் களுக்கெல்லாம் ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். நில வரியைப் பொறுத்த வரையில் திட்ட வட்டமாகக் கொள்கையைக் குறிப்பிட்டிருந்தால் வரவேற்கக் கூடிய நிலையில் இருந்திருக்கும். அதை விட்டு சிறு நிலக்கிழார்களை நிலவரிச் சுமைப் பிடிப்பிலிருந்து விடுவிக்க படிப்படியாகத் திட்டம் வகுக்கப்படும் என்று வழ வழா என்று இருக்கிறதே தவிர, திட்டவட்டமான நிலை குறிப்பிடப்படவில்லை. இந்த மாதிரி நிலவரி மட்டுமல்லாமல், உணவுப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும், உணவுப் பிரச்னையைப் பொறுத்த வரையில் திட்டவட்டமான முறையில் இந்தக் கொள்கைகளைக் கையாளுகிறோம் என்ற நிலைமை யையும் எடுத்துச் சொல்லவில்லை. தற்போது நம் மராமத்து அமைச்சராக வீற்றிருக்கும் கனம் கருணாநிதி அவர்கள் கூட, 4—5—1967-ல் அவர்கள் எதிர்க்கட்சியில் அங்கத்தினராக வீற்றிருக்கும்போது, அவர்களே கவர்னர் உரையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். என்ன ? "உணவு நிலைமையைச் சமாளிப் பதற்கு சர்க்கார் உணவுப் பெருக்கத்திற்குத் திட்டங்கள் செய்ய வேண்டும். இந்த சர்க்கார் கையில்லாத ஊமையின் நிலையில்தான் இருக்கிறார்கள். தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து சுட்டிக்காட்டுவதற்கும் கையற்ற முறையில் இருந்துகொண்டிருந்தால் உணவுப் பற்றுக்குறையை எப்படிப் போக்க முடியும்" என்று அவர்கள் எடுத்துச் சொல்லி யிருப்பதை ஞாபகமூட்ட ஆசைப்படுகிறேன். அந்த நிலையில் . . .

திரு. எஸ். ஆறுமுகம்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், கனம் அங்கத்தினர் அவர்கள் சர்க்காரைப் பார்த்து கையாலாகாத சர்க்கார் என்று சொல்லுவது பார்லிமெண்டினுடைய . . .





மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் சொன்னதைத்தான் கனம் அங்கத்தினர் எடுத்துச் சொல்லுகிறார் களே தவிர, அவர்கள் "கையாலாகாத சர்க்கார்" என்று கூறவில்லை.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முனுசாமி கவுண்டர் அவர்கள், 'கையாலாகாத சர்க்கார்' என்று சொல்ல வில்லை. அவர் எழுதி வைத்துக்கொண்டிருப்பதைப் படிக்கும் போது அந்த மாதிரி தெரிந்ததே தவிர, "கையில்லா ஊமையர்" என்று சங்க இலக்கியத்தில் வருகிறது, அதைக் குறிப்பிட்டுக் கூறியிருந்ததைத்தான் கூறினார்கள். (ஆர்வாரம்.)

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் கூறியதை எடுத்துக் கூறுகிற நேரத்தில், அவர் கூறிய வார்த்தைகளை அப்படியே எடுத்துக் கூறுவது முறையே தவிர, அப்படியில்லாமல் எடுத்துக் கூறினால் மாறுபட்ட நிலையில் கருத்துக் கொள்ளக்கூடிய நிலைமை உண்டாகும். அப்படியே எடுத்துக் கூறுகிற நிலையை மட்டும் கனம் உறுப்பினர்கள் கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

V211, 31 N67

திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்: நான் எடுத்துக் கூறி யதைச் சரியாகத்தான் கூறினேன். "தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து சுட்டிக்காட்டுவ தற்கும் கையற்ற முறையில் இருந்துகொண்டிருந்தால்" என்ற குறிப்பே தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த நிலையில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தவர் தற்போது அமைச்சராக வந்திருப்பது நம் அதிர்ஷ்டம் தான். ஏனென்றால் அவர்கள் 1957-ல் சொன்னதை மனதில் கொண்டு நல்ல முறையில் பணியாற்றினால் நாங்களெல்லாம் வரவேற்போம், சந்தேகமே வேண்டாம். அந்த முறையில் திட்டங் களைக் கொண்டு வந்து நிறைவேற்றினால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாகிய நாங்களும் வரவேற்போம். ஏனென்றால் மக்களுக்கு நல்லது செய்யக் கூடிய நிலை ஏற்பட்டால் அதை எல்லோரும் விரும்புவார்களே தவிர மக்களுக்குப் பாதகம் செய்யவேண்டுமென்று சொல்லக் கூடியவர்கள் ஒருவரும் இல்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். எனக்கும் அதே மாதிரி எண்ணம்தான்.

N67.1.4

(மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, இந்த விலைவாசியைக் குறைக்கவேண்டும் என்றால் உணவு உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் என்பது சர்க்காருடைய நோக்கம். ஏற்கெனவே காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும்போது அவர்களும் அதையே பின்பற்றினார்கள், சொல்லி வந்தார்கள். கடந்த 20 ஆண்டு புள்ளிவிவரங்களை, பேச்சுக்களை, வரவு-செலவுத் திட்டங்களைப் பார்க்கும்போது, ஒவ்வொரு இடத் திலேயும் விலைவாசி குறைய உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகப் படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே தவிர

வேறு இல்லை. அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, விவசாயிகளுக்கு கூட்டுறவு முறையில் கடன் உதவி, கிணறுகள் வெட்டிக்கொடுப்பது, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் வசதிகளைச் செய்வது, ஏ.டி.டி. 27 விதைகளை உபயோகிப்பது, உரங்களைக் கொடுப்பது என்று கூறியிருப்பது எல்லாம் புதிதல்ல, ஆகவே, திருப்பித் திருப்பிச் சொல்லுவதாக இருக்கிறதே தவிர வரவேற்கக் கூடிய திட்டங்கள், கொள்கைகள் இல்லை என்று நன்கு எடுத்துக் காட்டுகிறது. புதிதாக வந்திருக்கிறவர்கள் நல்ல முறையில் மேலும் பரிசீலனை செய்து எந்தெந்த வழிகளில் நாம் செய்தால் இந்த விலைவாசியைக் குறைக்க முடியும், ஜனங்களுக்கு நன்மை பயக்கும் நிலை ஏற்படும்—ரூபாய்க்கு மூன்று படி போடுவது சாத்தியமா என்பது வேறு; தேர்தல் காலத்தில் ஓட்டு வாங்க பல வாக்குறுதிகளைக் கொடுத்திருப்போம், பல விஷயங்களைச் சொல்லியிருப்போம்—குறைந்த விலைக்கு பொருள்கள் மக்களுக்கு எந்த அளவுக்குக் கிடைக்கச் செய்ய முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். மக்களுக்கு ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்க முடியுமா என்றும் யோசித்துப் பார்க்க வேண்டும். அதோடு கூட உணவு உற்பத்தியைப் பெருக்கும்போது, நம் திட்டங்களில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் நன்கு ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும் என்பதைக் கூட கனம் அங்கத்தினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். பல விஷயங்களை நம் கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் சொல்லாமல் விட்டு விட்டது வருந்தத் தக்கதாக இருக்கிறது. ஏனென்றால், நம் தமிழ் நாடானது விவசாய நாடாக இருந்தாலும், இருபது ஆண்டுகளாக, முன்பு இருந்த காங்கிரஸ் சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாகத் தொழில்வளம் பெருகி வந்திருக்கிறது. புதிய அமைச்சரவை ஏற்பட்ட பிறகு தொழில் வளம் மேலும் ஏற்பட என்ன செய்ய இருக்கிறது என்று ஒரு வார்த்தை கூட இல்லை. ஏதோ சேலம் ஸ்டீல் ப்ளான்ட் ஒன்றை மாத்திரம்

முற்பகல் 11-30

குறிப்பிட்டிருப்பதிலே, அதைத்தான் முயற்சிக்கப் போகிறோம் என்றால் அந்த ஒன்று மட்டும் தமிழகத்திற்குப் போதுமா என்று பார்க்கவேண்டும். அதோடுகூட தொழிலாளர்களுக்குப் பல தொழில்களில் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து வருகிறது என்பதைப் பார்க்கும்பொழுது, தொழிலாளர்களுக்கு எந்த நிலையில் வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி, தொழிலாளர்களைப்பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை. தமிழகத்தில் பிற்போக்கான சமூகத்தினர் அதிகமாக இருக்கின்றனர், தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளில் எந்த நிலையில் கல்வி அளித்தோம், காங்கிரஸ் சர்க்கார் செய்து வந்த சாதனைகள் என்ன என்றெல்லாம் பார்க்கும்பொழுது, பிற்போக்கான சமூகத்தினர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்களுக்கும் வசதி இல்லாத மக்களுக்கு நல்ல நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு யோசனைகள் ஒன்றுமே இல்லை. காங்கிரஸ் சர்க்கார் மறுபடியும் ஆட்சிக்கு வருமானால், பி.யு.ஸி. வகுப்பிலும் இலவசக் கல்வி அளிப்போம்



என்பதைத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் தற்பொழுது புதிய அரசு அதைப்பற்றி எந்த விதமான வார்த்தையும் சொல்லவில்லை கவர்னர் பெருமான் அவர்கள் உரையில்; இது மிகவும் வருந்தத் தக்க விஷயம். நல்ல காரியங்கள் எது செய்வது என்றாலும், ஏழை மக்களுக்கு, குறிப்பிட்ட கல்வி, பொருளாதாரத் துறையில் பின்னடைந்திருக்கும் யாரையும் விடாமல், பொதுவாக தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய வகையில், தமிழ் நாட்டு முன்னேற்றத்திற்கு எந்தத் திட்டங்களை வகுத்தாலும் அவை நல்லது என்று எங்களுக்குப் படும்பொழுது அவைகளை ஆதரிப்போம் என்பதை திட்ட வட்டமாகச் சொல்லிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. அ. ப. சண்முகசுந்தரம் அவர்கள் உரையாற்றுவார்கள்.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** பெருமதிப்பிற்குரிய சட்டசபைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்கும் வகையிலே எனது கருத்துக்கள் சிலவற்றை நான் கூற விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் உரையிலே உணவு உற்பத்தி பெருக்கத்தைப்பற்றி குறிப்பிட்டும், அதற்காக விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பதைப்பற்றியும் அந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த கவர்னர் உரையைப் பார்க்கும்பொழுது உண்மையிலே இது விவசாயிகளுடைய அரசாங்கம் என்பது நன்கு விளங்கும். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்ற முறையிலே உரங்கள் விநியோகம் செய்யப்படவேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் கடந்த ஆட்சியில் கூட உரங்கள் விநியோகிப்பதைப் பற்றி தாங்களும் குறிப்பிட்டிருக்கிறோம், இது ஒன்றும் புதிது அல்ல என்று சொன்னார்கள். ஆனால் உணவு உற்பத்தி பெருக்கத்திற்கு ஏற்ற முறையிலே இந்த உர விநியோகம் சரியான முறையிலே அமையவில்லை, நல்ல முறையில் விநியோகிக்கப்படவில்லை என்று காங்கிரஸ் உறுப்பினர்களேகூட சென்ற சட்ட சபையில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த உர விநியோகத்தைப்பற்றி நாம் கூறும்பொழுது, எனக்கு முன்னால் பேசிய திரு. எம். எஸ். மணி அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஏ.டி.டி. 27 போன்ற புதிய ரக விதைகளுக்கு, புதிய ஹைபிரிட் விதைகளுக்கு உரம் மிகமிக அவசியம். உரம் நல்ல முறையில் போதிய அளவு கொடுக்கப்படாவிட்டால், சாதாரணமாக விதைகளின் மூலம் கிடைக்கும் உணவு உற்பத்திதான் இந்தப் புதிய ரக ஹைபிரிட் விதைகளிலிருந்தும் கிடைக்கும். நல்ல முறையில் உரங்களை நாம் கொடுத்தால், சாதாரண ரக விதைகளிலிருந்து கிடைக்கக்கூடிய விளைச்சலை விட இரண்டு மடங்கு அதிக விளைச்சல் புதிய ரக ஹைபிரிட் விதைகளிலிருந்து நமக்கு நிச்சயம் கிடைக்கும்.

[திரு. அ. ப. சண்முகசுந்தரம்] [1967, மார்ச் 18

அப்படி உரங்கள் கிடைக்காத நேரத்தில் புதிய ரக விதைகளுக்காக நடவு முதலான வகைகளில் அதிகம் செலவாகிறது, அதற்கு உரம் தக்க சமயத்தில் கிடைக்காவிட்டால், உணவு உற்பத்தி பாதிக்கப்படுவதோடுகூட, அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். அந்த முறையில் உரங்கள் தகுந்த சமயத்தில் கிடைப்பதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து நம்முடைய அரசாங்கம் நல்ல முறையில் கேட்டு வாங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம் ஆளியார் திட்டத்தின்கீழ் தண்ணீர் பாசனத்திற்காக நஞ்சைக்கு தீர்வை ரூ. 25, புஞ்சைக்கு தீர்வை ரூ. 15 என்று தண்ணீர் தீர்வை போடப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற அமராவதி திட்டத்தின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நஞ்சைக்கு ரூ. 15, புஞ்சைக்கு ரூ. 9 என்று தண்ணீர் தீர்வை விதிக்கப்படுகிறது. அமராவதி அணைக்கட்டின் கீழ் 25,000 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்கிறது. அதே நேரத்தில் பரம்பிக்குளம் ஆளியார் திட்டத்தின் கீழ் 2½ லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இரண்டரை லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாயக்கூடிய அவ்வளவு அதிக நிலங்கள் உள்ள பகுதிகளிலே தண்ணீர் தீர்வை அதிகமாக இருப்பதின் காரணத்தினால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த தண்ணீர் தீர்வையையும் குறைத்து அமராவதி அணைக்கட்டின் கீழுள்ள நிலங்களுக்கு விதிக்கப்படுவது போல் அதே தீர்வையைத் தான் விதிக்கவேண்டும்; அதற்கு வேண்டிய வழிவகைகளை இந்த அமைச்சரவை செய்ய வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பரம்பிக்குளம் ஆளியார் திட்டம் பகுதியிலே விவசாயிகள் நிலங்களை அபிவிருத்தி செய்வதற்காகக் கடன் வழங்குவதற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கப்பட்ட தொகையில் இப்பொழுது ஒரு கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ. 9 கோடி செலவழிக்கப்படவேண்டும். இந்தப் பணம் மிகவும் துரிதமான முறையில் செலவழிக்கப்பட்டால்தான் நீர்ப்பாசன வசதியால் நாம் எதிர்பார்த்த பலனை அடைய முடியும். சென்ற அரசாங்கத்தினிடம் இதுபற்றி விவசாயிகள் சங்கம் அடுத்து அடுத்து எடுத்துச் சொல்லியும் அதுபற்றி கவனிக்காமல் இருந்து விட்டார்கள். இப்பொழுது ஆட்சியில் அமர்ந்திருக்கும் நமது அரசாங்கம் இதை நல்ல முறையில் கவனித்து, விரைவிலே கடன் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்காக அந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவு நில அடமான பாங்கின் டைரக்டராக அந்தப் பகுதியிலே உள்ள எம்.எல்.ஏ. இடம் பெறவேண்டும் என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பூச்சி மருந்து விநியோகம் செய்வதிலே, கோவை மாவட்டத்தில் நிலக்கடலைக்கும், பருத்திக்கும் முதல் இடம் கொடுத்து, பாதி விலைக்கு பூச்சி மருந்து கொடுக்கிறார்கள்.



1967, மார்ச் 18] [திரு. அ. ப. சண்முகசுந்தரம்]

மற்றபடி சோளம், கம்பு போன்ற இதர தானியங்களுக்கு இந்த பூச்சி மருந்து பாதி விலையிலே கொடுக்கப்படுவதில்லை. நிலக்கடலைக்கும், பருத்திக்கும் கொடுப்பது போலவே, மற்ற தானியங்களுக்கும் அதே மாதிரி ஒரே சீராக பாதி விலையில் பூச்சி மருந்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நம்முடைய அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையிலே உணவு உற்பத்தி அதிகரிப்பதற்கான திட்டங்களை நல்ல முறையிலே இந்த அரசாங்கம் இயற்ற முன்வரும் என்று குறிப்பிட்டிருக்கும் கவர்னர் உரையை பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது அவர்கள் உரையாற்றுவார்கள்.

64985

* **ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின் மீது இந்திய தேசீய மைனாரிடி மக்களின் ஸ்தாபனமான முஸ்லிம் லீகின் பிரதிநிதியாகிய நான் மிக்க மகிழ்வோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் நம்முடைய நாட்டிற்கு இன்றியமையாத தேவையான விவசாயம் சம்பந்தமாக மிக அதிகமாக விளக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் பாராட்டத் தக்க ஒன்று என்று நான் கருதுகிறேன். அதே நேரத்தில் 20 ஆண்டு காலமாக இந்த நாட்டின் ஆட்சியை தங்கள் கையில் வைத்து ஆட்டிப் படைத்தவர்கள், ஏழை பங்காளிகள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டவர்கள் எந்த அளவுக்கு நம்முடைய கையில் ஆட்சி மாறுகிறபொழுது இந்த நாட்டிலே விவசாயத்திற்குரிய இந் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும்பொழுது, உண்மையிலே வெட்கமும் துக்கமும் ஏற்படுகிறது. விவசாயிகளின் நலனுக்காக, நம்முடைய நாட்டில் விவசாயத் துறைக்கு வேண்டிய பல்வேறு திட்டங்களின் பெயரால் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அவைகளெல்லாம் முறையாக செலவழிக்கப்பட்டவையா என்று பார்த்தால், இல்லை. அதனால் அடைந்திருக்கிற லாபம் எந்த அளவுக்கு என்று சீர்தூக்கிப் பார்க்கிறபொழுது, எந்த அளவுக்கு நாட்டில் விவசாயத் துறையில் உணவு உற்பத்திக்காக பொருள் பயன்பட வேண்டுமோ, அந்த அளவுக்குப் பயன்படவில்லை. சிறிய விவசாயிகளுக்கு பயன்தர வேண்டும் என்ற பெயரால் நீர்ப்பாசனத் துறையிலே மேடு தட்டிப் போன குளங்களை செப்பனிடுவதற்கும், தூர்ந்த நிலையில் உள்ள ஏரிகளை மராமத்து செய்வதற்கும் நம்முடைய திட்டங்களுக்கான பணங்கள் செலவழிக்கப்பட்டு இருக்கின்றனவா என்று பார்த்தால், அதுவும் இல்லை. இந்த நிலையில் தான் நீண்ட நெடுங்காலமாக விவசாயத் துறைக்கு பயன்படாத முறையிலே, விளைச்சலுக்கு உறுதுணையாக இல்லாத முறையிலே இருந்து வந்த ஒரு ஆட்சி இந்த நாட்டு மக்களால் மாற்றப்பட்டு, புதியதோர் ஆட்சி அறிஞர் அண்ணா அவர்களுடைய சகாப்தமாக தோன்றியிருக்

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1967 மார்ச் 18

கிறது. அப்படித் தோன்றியிருக்கிற சூழ்நிலையில் சென்ற ஆட்சி விவசாயத் துறையைப் பொறுத்த வரையிலே எதை எதை அவர்கள் செய்வதற்கு விட்டுவிட்டார்களோ, எந்த முறையை கையாண்ட காரணத்தினால் விவசாயத் துறை அபிவிருத்தி அடையவில்லையோ, அவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, சிந்தித்துப் பார்த்து, இந்த ஆட்சி சிறந்த முறையில் செயல்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இரண்டாவது தொழிலாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கும் தொழில் கைத்தறி நெசவுத் தொழில். அதைப் பொறுத்த வரையில் இன்றைய நிலையில் அறிஞர் அண்ணா அவர்களுடைய அமைச்சரவைக்கு அதிகமாக எடுத்துக் கூற வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், கைத்தறி சவுளியின் உற்பத்தியில் தேக்கம் ஏற்பட்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு நெருக்கடி ஏற்பட்ட காலத்தில், முதுகிலே துணி மூட்டைகளைத் தூக்கிச் சென்று நாட்டு மக்களைக் கூவி அழைத்து விற்று அதன் மூலம் கைத்தறி உற்பத்தியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தீர்த்தவர்கள் அறிஞர் அண்ணாவும், அவர்களுடைய அமைச்சரவையைச் சார்ந்த பெருமக்களும் என்று நினைக்கும்போது மகிழ்வு அடைகிறேன். இரண்டாவது தொழிலாக இருக்கும் கைத்தறி தொழில் சம்பந்தமாக கவர்னர் உரையில் குறிப்பிடப்படவில்லை. கைத்தறிக்கு, கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தீர்க்க வேண்டிய, நிவர்த்திக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையிலும் தனியார்த் துறையிலும் சிக்கி நிற்கும் மக்களுக்கு நல்லதொரு வகையில் அறிஞர் அண்ணாவும், அவருடைய அமைச்சரவையைச் சார்ந்திருக்கும் பெருமக்களும் பரிகாரம் தேடுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அது மட்டுமின்றி, நம் மாநிலத்தில் பூமிக்குள் மண்ணில் புதைந்து கிடக்கின்ற பொருள்களை வெட்டி எடுத்து, அதன் மூலம் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற பசிப்பிணியையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்கி, நாட்டுக்கும் மக்களுக்கும் தேவைப்படும் மூலதனங்களை எந்த எந்த வகைகளில் கொண்டு வரலாம் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். சென்றகால, நிகழ்கால சிந்தனைச் சந்திப்பில் நிற்கின்ற அறிஞர் அண்ணா அவர்களும், அவருடைய அமைச்சரவையைச் சார்ந்த பெருமக்களும் நல்ல முறையில் செயல்படுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு.

நம்முடைய நாட்டில் சென்ற காலத்தில் சுகாதாரத் துறைக்கும் பிற துறைக்கும் செலவு செய்யப்பட்ட பணங்களெல்லாம், அபிவிருத்திக்குப் பயன்படாது ஒரு கட்சியைப்பலப்படுத்தவே செலவழிக்கப்பட்டிருக்கிறது. பல குக்கிராமங்களிலும் மருத்துவ மனைகளே கிடையாது. அப்படி மருத்துவ மனைகள் இருந்தால், அங்கே பிணி என்ன என்று கண்டுபிடிக்க மருத்துவர்கள் இல்லை. சில மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இருந்தாலும், அங்குள்ள பிணிக்குக் கொடுக்க மருந்து இல்லை. மருத்துவர்கள் இல்லாத மருத்துவ



1967, மார்ச் [ஹாஜி ம. மு. பீர் முஹம்மது]

மனைகளும், மருந்து இல்லாத மருத்துவ மனைகளும் மலிந்திருக்கின்றன. இந்த மருத்துவத் துறையில் உள்ள கேடுகளைச் சீர் செய்ய சென்ற கால அமைச்சரவையால் ஏற்படுத்தப்பட்டவைகளையெல்லாம், எப்படி நீக்குவது என்பதுபற்றிய விளக்கம் இந்த உரையில் இடம் பெறவில்லை. இருப்பினும், அறிஞர் அண்ணாவின் சிந்தனையில் இவை இடம் பெற்று இருக்கின்றன. ஆகவே இவை ஓரளவு பரிகரிக்கப்படும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு.

நாட்டின் விடுதலைக்கு முன்பும், விடுதலை அடைந்த பின்னரும் இந்தச் சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில், சிறந்த எதிர்க் கட்சியாக பெருமையோடு பணியாற்றியது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் என்பதை அறிஞர் அண்ணாவும், அவர்களுடைய அமைச்சரவையில் இருப்பவர்களும் அறிவார்கள். அந்த பாரம்பரியத்தை பின்பற்றி, ஜனநாயக முறையில் நாட்டு மக்கள் விருப்பத்திற்கிணங்க, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்த அமைச்சரவைக்குச் சிறந்த முறையில் ஒத்துழைப்புத் தரும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வெறும் எதிர்க் கட்சியாக இல்லாமல், எதிரிக் கட்சியாகவும் இல்லாமல், அறிஞர் அண்ணாவிற்கும், அவருடைய அமைச்சரவையில் உள்ள பெருமக்களுக்கும் ஆதரவுக் கட்சியாக இருந்து, காலத்தின் கண்ணாடியாகப் பணி புரிந்து, குறைகளையும், நிறைகளையும் அறிஞர் அண்ணாவின் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, நாட்டு மக்களுக்கு நற்தொண்டு நாங்கள் செய்வோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

சென்ற 20 ஆண்டு காலமாக மைனாரிடி சமுதாயத்தைத் திட்டமிட்டு பிற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். அந்த உண்மையை புதிய அமைச்சரவையில் இருக்கின்ற, அறிஞர் அண்ணா அவர்களும், அவருடைய சகாக்களும் அறிவார்கள். மைனாரிடி சமுதாயத்தைச் சேர்ந்த நாங்கள் அரசியல் அராஜகத்தைத் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறோம் என்ற காரணத்தால் திட்டமிட்டு பிற்படுத்தப்பட்ட நிலையிலே பல்வேறு துறைகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். அவற்றைப் பரிசீலித்து, பிற்படுத்தப்பட்ட நிலைகளை நிவர்த்திக்க, மைனாரிட்டி, சமுதாய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய அறிஞர் அண்ணா அவர்களும், அவருடைய அமைச்சரவையைச் சார்ந்த பெருமக்களுக்கும் உறுதுணையாக இருப்பார்கள் என்று பூரணமாக நம்புகிறேன்.

"மதி" யையும், "நிதி" யையும், நல்லறக் கருத்துக்கள் செழித்துக் கொழிக்கின்ற "நாவலரை"யும், "மாதவ"த்தையும், முத்தான "சாமி" யையும் "சாதிக்" என்றால் உண்மை என்று பொருள். உண்மையைச் சாதிக்கும் "பாஷா" வையும் நித்தியமாகிய "சத்தியத்தையும்" துணையாகக் கொண்டிருக்கின்ற அறிஞர் அண்ணாவின் அமைச்சரவை இந்த நாட்டிற்கும், இந்த நாட்டு

மக்களுக்கும், 20 ஆண்டு காலமாக சாபக்கேடாக இருந்த காங்கிரஸ் ஆட்சியினால் ஏற்பட்ட இன்னல்களை நீக்கி, நன்மைகள் பல நல்க இறைவன் அருளைப் பிரார்த்தித்து அமர்கின்றேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கவர்னர் பெருமான் உரையில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் நிலையில் அவ்வளவுதான் எழுத முடியும். கஷ்டமான சூழ்நிலை. இந்திய சர்க்காருக்கும், ராச்சிய சர்க்காருக்கும் இருக்கும் பொறுப்புக்கள் உரிமைகள் பற்றி இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையில் நல்ல கவனம் செலுத்த வேண்டும் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பல பேர்களும் பேசியிருக்கிறார்கள். உர விநியோகம், விதை விநியோகம், அதையெல்லாம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நல்ல முறையில் செயலாக்க பாடுபட வேண்டும்.

கூட்டுறவுத் துறையைப்பற்றி, விசாரணை நடத்த கமிட்டி போட்டு, அதிலே இருக்கும் ஊழல்களைப் போக்குவதற்கு அமைச்சரவை முன்வந்திருப்பது ஒரு முக்கியமான விஷயம். இந்த நாட்டிலுள்ள கூட்டுறவுத் துறையைப்பற்றி 1958-லேயே ஒரு பில் தயாராகி, செலக்ட் கமிட்டிவரை போய், அதற்குப் பிறகு, பல காரணங்களால் கைவிடப்பட்டு, பழைய ஊழல்களுக்கே இடம் கொடுக்கும் நிலையில் அந்தப் பழைய சட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி விரிவாகப் பேசவேண்டிய அவசியம் இல்லை. அந்தச் சட்டத்தை நல்ல முறையில் திருத்தி அமைக்க நல்ல சட்டம் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

ஸோனல் கவுன்சில் பற்றி ஒரு பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் இப்பொழுது இருக்கக்கூடிய ராச்சிய சர்க்கார்களுக்குள்ள அதிகாரங்கள் குறைந்துவிட்டது. ஆகவே, இனி கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் நம் பேரில் வைத்திருக்கும் நம்பிக்கை அடிப்படையில் அந்த அதிகாரங்களைப் பெற்று செயல் ஆற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் டெல்லியில் நன்றாக வாதாடி, ஸோனல் கவுன்சிலுக்கு அதிகப்படியான அதிகாரத்தைப் பெற்று காரியங்களை நடத்த வேண்டும். முக்கியமாக ஆந்திராவில் பல ஜீவ நதிகள் இருக்கின்றன. அவற்றின் தண்ணீரை காவிரியோடு இணைத்து தேசம் பூராவும் ஒன்று என்பதை, காங்கிரஸ் சர்க்கார் வாயளவில் செய்ததை, நம்முடைய இந்தச் சர்க்கார் செயலளவில் செய்து காட்டி, அப்படிப்பட்ட பெரிய காரியம் இந்த திராவிட முன்னேற்ற கழக சகாப்தத்தில் சாதிக்க வேண்டும், அதற்காகப் பாடுபட வேண்டும், அதற்காக முதல் அமைச்சர் பிரயாசைப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஸோனல் கவுன்சில் வைத்திருப்பதன் அர்த்தம் சரியாகப் புரியும், அதனால் நன்மை கிடைக்கும் என்று தெரிவிக்கிறேன். ஆகவே, தெற்கு இராஜ்யங்கள்—மூன்று, நான்கு —ஒற்றுமையாக வேலை செய்தால் உணவுப் பிரச்சினையில் உள்ள



கஷ்டங்களை கணிசமான முறையில் நிவர்த்தி செய்து கொள்ளலாம். இப்போது முக்கியமாக உணவுப் பிரச்னையைப்பற்றி ஒன்றை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய ராஜ்யம் ஒரு சர்ப்ளஸ் ஸ்டேட். உண்மையில் இது இன்றைக்கு சர்ப்ளஸ் ஸ்டேட்டாக இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி—உங்கள் பதிலில் தெளிவுபடுத்திவிட வேண்டுமென்று விரும்புகிறேன். தேர்தல் காலத்தில் நாம் மக்களுக்கு என்ன வாக்குறுதி அளித்தோம் என்பதை மறந்துவிடுவதற்கில்லை. காரணம் இந்தப் பொதுத் தேர்தலை தேர்தல் என்று சொல்வதற்கில்லை. தேர்தல் நடந்தது என்று சொல்வதைக் காட்டிலும் சைக்ளோன் நடந்தது நடந்தது என்று சொல்வதைக் காட்டிலும் சைக்ளோன் நடந்தது நம்பிக்கை வைத்து தங்கள் மேலான வாக்குகளை அளித்திருக்கிறார்கள். காங்கிரஸ் சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றாலும் முக்கியமாக உணவுப் பிரச்சினை, விலைவாசிப் பிரச்னை இவற்றைக் கருத்தில் கொண்டு மக்கள் அவர்களுக்கு எதிரிடையாகத் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். ஆகவே இன்றைய தினம் உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஏனோ தானோ என்று பழைய காங்கிரஸ் சர்க்கார் பின்பற்றிய கொள்கையையே பின்பற்ற முற்பட்டால் அது உங்களுக்கும் சரி, உங்களுக்குத் துணையாக இருந்த எங்களுக்கும் சரி மக்கள் மத்தியில் ஒரு மரியாதையை உண்டு பண்ணாது. ஆகவே இப்பிரச்னையில் தயங்காது நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். டீகண்ட்ரோல் செய்துவிட வேண்டும். வேண்டுமானால், இரண்டு மூன்று மாதம் அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். டீகண்ட்ரோல் செய்து, ப்ரீ மூவ்மெண்டுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். பார்டர்களை கண்காணித்துக்கொண்டு ஜில்லாக்கள்தோறுமாவது ப்ரீ மூவ்மெண்டு ஏற்படுத்தியாக வேண்டும். அப்போதுதான் உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையிலுமாவது விலைவாசி இறங்கக்கூடும். மற்ற பொருள்களைப் பொருள்களின் விலைவாசியைப்பற்றிச் சொல்வதற்கு இது சரியான இடமில்லை என்று நினைக்கிறேன். இந்திய சர்க்கார் என்று கூடச் சொல்லமாட்டேன்—அங்குள்ள காங்கிரஸ் சர்க்காரின் தவறான கொள்கைகளின் விளைவாகத்தான் இன்று தேசம் பூராவிலும் விலைவாசிகளின் கொடுமை அதிகரித்துவிட்டது. அதை இப்போது சவிஸ்தாரமாகப் பேசுவதில் பிரயோசனமில்லை. சென்டரில் பெரிய மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். இப்போது நான் சொல்வது நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் உணவுப் பிரச்சினை சம்பந்தப்பட்ட வரையிலாவது இந்த அரசு பழைய போக்கிலேயே போகாமல் புதிய போக்கை துணிவாக, தைரியமாக மேற்கொள்ள வேண்டும். நமது அண்டை ராஜ்யமான மைசூர் ஒரு டெபிசிட் ஸ்டேட். அங்கே கூட பார்மலாக ரேஷன் இருக்கிறதே தவிர, இங்குள்ள கொடுமை அங்கே கிடையாது. ஆகவே, நம்முடைய கொடுமையை அகற்ற தைரியமாக இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கிவிட வேண்டும். முக்கியமாக கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர்கள்கூடச் சொல்கிறார்கள். மூன்று ஏக்கரா, அதற்கு உட்பட்டுள்ள சிறு நிலச்சுவாந்தார்களுக்கு விலக்கு அளித்துவிட்டு

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1967 மார்ச் 18

அதற்கு மேற்பட்டவர்களிடம் இருந்து லெவி முறையில் சர்ப்ளஸ் ஸ்டாக்கை வாங்கிக்கொள்ளலாம். இதைத்தான் நீங்களும் செய்வதாகச் சொல்லிக்கொண்டிருந்தீர்கள். ஆகவே, தயவுசெய்து கொள்முதல் கொள்கையில் மூன்று ஏக்கரா, அதற்கு உட்பட்டவர்களுக்கு விலக்கு அளிக்க ஜில்லாக் கலெக்டர்களுக்கு உத்தரவிட வேண்டும். நாம் இந்த விஷயத்தில் ஜில்லாக் கலெக்டர்களிடம் யோசனை கேட்டுக்கொண்டிருந்து பிரயோசனம் இல்லை. நாமேதான் நல்ல முடிவுக்கு வந்து, இவற்றை நிறைவேற்ற அவர்களுக்கு உத்தரவிட வேண்டும். அதில் ஒன்றும் குடி மூழ்கிவிடப் போவதில்லை. இந்திய சர்க்காரின் தவறான கொள்கைகளினால்தான் உணவுக் கட்டுப்பாடே வந்தது. விலைவாசி தாறுமாறாக ஏறிக் கொண்டே போயிற்று. தங்கள் தவறை மறைக்க ராஜ்யங்கள் உணவுப் பொருளை கொள்முதல் செய்து விநியோகிக்க வேண்டும் என்று ராஜ்யங்களுக்கு அவர்கள் ஆலோசனை கூறினார்கள். அதனால் விலைவாசி குறைந்துவிடும் என்பதாக ஊகமாகத்தான் நினைத்துக்கொண்டு தலையிட்டார்கள். அவர்கள் பேச்சை இங்கே இருந்த காங்கிரஸ் சர்க்காரும் கேட்டுத்தான் இந்த நிலைக்கு வந்தது. விலைவாசி ஏற்றத்திற்கு ஜனத்தொகை பெருக்கம்தான் காரணம் என்பது போலி சால்ஜாப்பு. விலையைக் கட்டுப்படுத்த சூப்பர் மார்க்கெட் ஒன்றும் பயன்படாது. இவற்றை எல்லாம் நாளாவட்டத்தில் இந்தச் சர்க்கார் நீக்கிவிட வேண்டும்.

உணவுப் பிரச்சினையைப் போலவே நமது ராஜ்யத்தில் மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பது கைத்தறி நெசவாளர் பிரச்சினை. உணவுப் பிரச்சினைக்கு அடுத்தபடியாக இதைச் சொல்லலாம். கைத்தறி நெசவாளர்களைப்பற்றி கவர்னர் உரையில் ஒன்றும் காணப்படவில்லை என்றாலும் உங்கள் கவனத்தில் இல்லை என்று சொல்லமாட்டேன். கூட்டுறவுத் துறை சம்பந்தமாகப் பரிசீலிக்க எப்படி ஒரு கமிஷனை அவ்விலாக்கா அமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்களோ, அது போல கைத்தறியாளர்களுடைய பிரச்சினையையும் தீர்க்க ஒரு அதிகாரியைப்போட்டு பரிசீலனை செய்து ஒரு ரிப்போர்ட் தயார் செய்யவேண்டும். அதன் பேரில் நாம் எடுத்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் ஓரளவு அவர்களுக்கு நிவாரணம் அளிக்க உதவியாக இருக்கும். அதற்கும் இந்த மந்திரிசபை ஒரு முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க வேண்டும்.

அதுபோலவே, பீடித் தொழிலாளர்களுடைய நிலைமையையும் நாம் கவனிக்க வேண்டும். பீடித் தொழில் என்றால் லேசாகக் கருதிவிட வேண்டாம். பெரிய லட்சாதிபதிகள் எல்லாம் அத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சக்ரவர்த்திகள்கூட ஈடுபடுகிறார்கள். வடாற்காடு ஜில்லாவில் பீடித் தொழிலாளர்களுக்கு நல்ல கூலி இருக்கிறது என்று சொன்னாலும் இப்போதுள்ள பஞ்ச நிலைக்குக் காணாது. ஆயிரம் பீடிக்கு 2½ ரூபாய் கொடுக்கிறார்கள். அதே நோக்கில் திருநெல்வேலி ஜில்லாவில் இன்றைய தினம் இருபதாயிரம் முப்பதாயிரம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.



1967, மார்ச் 18] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

இருந்தும் இன்றையதினம் அந்த மாவட்டத்தில் ஆயிரம் பீடிக்கு ஒரு ரூபாய்தான் கூலி கொடுக்கப்படுகிறது. அதே சமயம் சில பண்டில்களைக் கமிஷன் என்ற முறையில் எண்ணாமலும் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். இன்றைய தினம் சம்பளம் 15 ரூபாய் என்றால் பஞ்சப்படி 60 ரூபாய் என்று மற்ற துறைகளில் எல்லாம் இருக்கிற நிலைமையில் பீடித் தொழிலாளர்கள் மட்டும் அன்று இருந்த நிலைமையிலேயே இருக்கிறார்கள். ஆகவே பீடித் தொழிலாளர்களுடைய நிலைமையை உயர்த்துகின்ற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு, கூலி உயர்வதற்கு ஆவன செய்யவேண்டும்.

அதற்கடுத்தபடியாக, நிலவரி ரத்து. தேர்தல் சமயத்தில் நிலவரியை எடுத்துவிடுகிறோம் என்று அவர்கள் சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். போனவர்கள் பெரிய மனிதர்கள். நிலவரி எடுப்பதைப்பற்றி நாமும்தான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். மாட்டைக் காட்டி, மணடையைக் காட்டுகிற மாதிரி நாம் இன்றைய தினம் நிலவரி ரத்து என்பதாகச் சொல்லி, அந்த சர்சார்ஜ், இந்த சர்சார்ஜ் என்று இருப்பதை மட்டும் எடுப்பதில் பயன் இல்லை. இந்த நாட்டில் உள்ள மக்கள் நம்மிடம் அமோகமாக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். உலக சரித்திரத்திலேயே 25 பேர்களை நிறுத்தி 25 பேர்களும் வெற்றிபெற்றது என்பது இல்லை என்று சொல்லும் அளவுக்குப் புகழ் பெற்றிருக்கிறீர்கள். அந்த மாதிரி மக்களிடத்தில் நம்பிக்கையைப் பெற்ற நீங்களும், உங்களுக்குப் பின்னால் இருக்கிற சுதந்திராக் கட்சியும் நல்ல முறையில் நாட்டில் நடமாட வேண்டும். சொன்னபடி நாம் நடந்துகொள்ளவில்லை என்றால்—காங்கிரஸ் கட்சிக்கே இந்த கதி ஏற்பட்டது என்றால் நம் கதி என்னாகும் என்பதைக் கவனிக்கவேண்டும். ஆகவே, நல்ல முறையில், சீரிய முறையில் செய்து, இந்த மந்திரி சபை ஒரு பிரமாதமான மந்திரி சபை, இந்தியாவிலேயே இது தான் முதன்மையான மந்திரி சபை என்ற சிறப்பு ஏற்படக்கூடிய முறையில் ஒரு நல்ல பெயரை மக்களுக்கும், உங்களுக்கும் எங்களுக்கும் வாங்கித் தர வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

நண்பகல் 12.00

* திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் சட்ட மன்றத் தலைவரவர்களே, இந்த கவர்னர் உரையை வரவேற்று அதன்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையிலே முதற் பக்கத்திலே முதல் பாராவிலே 'பழைய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுக்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த பாராவிலே தேர்தலைப்பற்றிச் சொல்லும் போது, '. . . அமைதியாகவும் விரும்பத்தகாத எவ்வித நிகழ்ச்சிகளின்றியும் நடைபெற்றது நாம் சிறப்பாகப் பாராட்ட வேண்டிய தொன்றாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் சிறப்பாக பாராட்ட வேண்டிய காரணம்

என்ன ? சென்ற முறை வந்து, இந்த முறையும் வந்திருக்கக்கூடியவர்களில் நானும் ஒருவன், பாதுகாக்கப்பட்ட பழையவர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கவேண்டுமென்ற காரணத்தால்தான், அவர்கள் இதைச் சுட்டிக்காட்டுவதற்காக எங்களையெல்லாம் கலந்து பேசாமலே நிலைமைகளை புரிந்துகொண்டு அவ்வாறு சொல்லியிருப்பதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உரையிலே முழுக்க முழுக்க விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு முதலிடம் கொடுத்ததெல்லாம் என்ன ஆயிற்று என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கும், தொழிலுக்கும் பல கோடி ரூபாய்கள் செலவிட்டும் அது ஏழைகள் யாருக்கும் பயன் படவில்லையென்ற கருத்தை காலஞ்சென்ற நேரு பிரான் முதல் இன்றைய கவர்னர் அவர்கள் வரையில் நினைவுபடுத்திக்கொண்டு, அதை மக்களுக்கு அறிவுறுத்திக்கொண்டும் இருக்கிறார்கள். அந்த முறையிலேதான் இதைக் கூறியிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகவே நீடித்து நெருக்கடியான வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 30—4—1966-லே ஒரு பெரும் புயல்; 3—11—1966-லே ஒரு கொடிய புயல். இந்தப் புயல்களாலே பாதிக்கப்பட்ட பெரும் பகுதி தென் ஆற்காடு மாவட்டத்தை பொறுத்த அளவிலே திண்டிவனம், செஞ்சி தாலுகாக்கள் ஆகும். நூற்றுக் கணக்கான ஏரிகள் உடைபட்டன; வீடூர் அணை உடைபட்டது. பஞ்சாயத்து ரோடுகள், பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன; பஞ்சாயத்துப் பள்ளிகளும், அரசாங்கப் பள்ளிகளும் பள்ளிகளா, வேறு என்னவா என்று சொல்லத்தக்க அளவில் இடம் மாறிவிட்டன; பயிர்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்டன. எனது வானூர் தொகுதியிலே மூன்று பெரிய ஆபத்துக்கள் வந்து மக்களை பெரிய அவதிக்குள்ளாக்கிவிட்டன. அவைகளில் ஒன்று, நூற்றுக்கணக்கான ஏரிகள் உடைந்து விவசாயம் பாதிக்கப்பட்டு சாவி போகமாக ஆகிவிட்டது சில கிராமங்களில். இரண்டு, வீடூர் நீர்த்தேக்கம் உடைந்து பல கிராமங்களையே அடித்துக்கொண்டுபோய் கடலிலே சேர்த்து விட்டது. மூன்று, உடைந்த ஏரிகள் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள கழுவெளி பரப்பிலே நீர்த்தேக்கத்தை உண்டு பண்ணி ஒரு மாதமாக நீர் தேங்கிய காரணத்தால் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்கள் எல்லாம் பாழாகிவிட்டன. பெரும்புயல் இரண்டு வந்துவிட்ட காரணத்தாலே திண்டிவனம் தாலுகாவை, முன்பு இங்கே திண்டிவனம் தொகுதி எம்.எல்.ஏ.-வாக இருந்தவர் திரு. எ. தங்கவேலு என்பவர் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார். அதற்கு அப்போதிருந்த அமைச்சர் திரு. கக்கன் பாதிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டாலும், அதைப் பஞ்சப் பிரதேசமாக பிரகடனப் படுத்த முடியாது என்று அழகாகச் சொல்லிவிட்டார்கள்,





அங்கேயுள்ளவர்களுக்கு ஒரு வசதியும் கிடையாது, மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, நம்முடைய காலத்திலேயாகிலும் அதைச் செய்யவேண்டுமென்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பொதுமக்களின் வேதனை வெந்து தணலாகிக் கொண்டிருக்கிற இடம் அது. அணைக்கட்டுகள் உடைந்து கழுவெளி ஓரங்களில் உள்ள 20 கிராமங்கள் வரையில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் பாதுகாக்கின்ற அளவில், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கின்ற அளவிலே அதைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்து அந்தப் பகுதியிலே வாழுகின்ற மக்களுக்கு நல்ல வாய்ப்பும் வசதியும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடிய ஒரு முக்கியமான திட்டம் கிருஷ்ணா—கோதாவரி நீர்த்தேக்கத் திட்டம். அதை 1952-லே அறிமுகப் படுத்தப்பட்டு, பிறகு அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களால் அது வற்புறுத்தப் பட்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைவிடப்பட்டு 1962-லேயிருந்து 1966 வரை இந்த மன்றத்திலேயும் என்னால் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் குறிப்பாக வட ஆற்காடு, செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு வந்தால் ஒழிய விவசாயத்தைப் பெருமளவில் பெருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இந்த மூன்று மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்கள். அதனால்தான் அந்தக் காலத்திலேயே உணர்ந்து கூறியிருக்கிறார்கள். வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டுமென்று. இப்படிப் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு கைவிடப்பட்டன. இந்தத் திட்டத்தை ஆந்திர மாநிலத்தோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி அதன் மூலம் எவ்வளவு துரிதமாக காரியங்கள் செய்ய முடியுமோ, அவற்றையெல்லாம் பூர்த்தி செய்யவேண்டுமென்பதையும் நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

நடுத்தர நீர்ப்பாசனத்தைப்பற்றிக் குறிப்பிடக் காணோம். சிறிய நீர்ப்பாசனத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறிய நீர்ப் பாசனத்தில் குறிப்பாக எங்கள் பகுதியிலே உள்ள ஏரிகள் எல்லாம் தூர் எடுக்காமல் அப்படியே கிடக்கின்றன. புயலினாலே இன்னும் மோசமான நிலைமையிலே இருக்கின்றன. ஆகவே பி.டபிள்யூ.டி. ஏரிகளாக இருந்தாலும் சரி, மைனர் இரிகேஷன் ஏரிகளாக இருந்தாலும் சரி, ஃபுட் புரடக்ஷன் ஏரிகளாக இருந்தாலும் சரி, ஊற்று குட்டைகளாக இருந்தாலும், வாங்கிகளாக இருந்தாலும் சரி தூர் எடுப்பதற்கு இந்த ஆண்டிலேயே வழிவகை செய்யவேண்டும். புதிய கிணறுகள் வெட்டுவதற்கு கடன் கொடுக்கப்படுகிறது. பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் வசதி செய்துதர வேண்டும். அந்தக் கடன்கள் தேவைப்படுகிறவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்க்க வேண்டும். வசதி உள்ளவர்களுக்குத்தான் கிடைக்கிறதே தவிர அந்தக் கடன்கள் எல்லாம் வசதியில்லாதவர்களுக்குக் கிடைப்பதில்லை. நீண்ட

[திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்] [1967 மார்ச் 18

நெடுங்காலமாக இதைப் பற்றிச் சொல்லிவந்திருக்கிறோம். சொல்லிக்கொண்டு வருவதை நீடிக்க வேண்டாம் என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

மின்சாரத்தைப்பற்றிக் கடைசிப் பக்கத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே 1962-லேயிருந்து 10, 20 கிராமங்களுக்குத்தான் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பல காரணங்களைச் சொன்னார்கள். கம்பியில்லை என்கிறார்கள். கம்பி வந்த பிறகு கம்பம் இல்லை என்று சொல்கிறார்கள். இரண்டும் ஒன்று சேர்ந்து வராது என்கிறார்கள். அதற்குக் காரணம் கையிலே பணம் இல்லை என்கிறார்கள். இதையே மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் இனிமேல் என்ன சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை. விவசாயிகள் விரைவில் மின்சாரத்தைப் பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

உர விநியோகத்தைப்பற்றிச் சென்ற ஆண்டிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். தற்போதும் கவர்னர் உரையில் நைட்ரஜன் உர வகை பற்றியும், பாஸ்பர உர வகை பற்றியும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நைட்ரஜன் உரம் 1.35 லட்சம் கேட்டதற்கு 86,000 டன் மட்டுமே கிடைத்தது என்றும், பாஸ்பர உரம் 60,700 டன் கேட்டதற்கு 27,000 டன் அளவிற்கே கிடைத்தது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், இந்த உரங்களை எல்லாம் நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டுமென்று நினைப்பதோடு அரசாங்கமும் அந்தக் கருத்தைக் கொண்டிருப்பதனால், நம்முடைய நாட்டிலே உரத்தை உற்பத்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

உரத்தை விவசாயிகளுக்கு வழங்கும்போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நியாயமான விலையில் தேவைப்படுகிற நேரத்தில் விவசாயிகளுக்கு உரத்தை விநியோகிக்கிறார்களா என்று பார்த்தால் இது வரை கொடுக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இனியாவது வேண்டிய நேரத்தில் கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற கார்த்திகை, ஐப்பசி மாதங்களில் விவசாயிகள் எல்லாம் திண்டிவனம் தாலூகா ஆபீஸில் வந்து உரம் வேண்டுமென்று கேட்க, நெல் கொண்டு வந்தால்தான் உரம் கொடுப்போம் என்று அதிகாரிகள் சொன்னார்கள். 'எங்களிடம் மட்டும் நெல் கேட்கிறீர்களே, ஓப்பன் மார்க்கட்டில் 35 ரூபாய்க்கு விற்கப்படுகிற உரங்களை 75 ரூபாய்க்கு விற்கிறார்களே, அவர்கள் எல்லாம் எந்த நெல்லைக் கொடுத்துவிட்டு உரத்தை வாங்கிப் போனார்கள்' என்று கேட்டதற்கு அதிகாரிகள் தங்களுக்கு அதைப் பற்றித் தெரியாது என்றும், நெல் கொண்டுவந்தால்தான் உரம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு என்றும் கூறினார்கள். அதைப்பற்றி பிறகு கலெக்டர் அவர்களிடத்திலும், தாசில்தார் அலுவலகத்திலும்



1967, மார்ச் 18] [திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்]

முறையிட்ட பிறகு உர விநியோகத்திலே ஓரளவு மாற்றம் ஏற்பட்டது. உரம் தேவைப்படுகிற காலத்தில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

குறிப்பாக, கூட்டுறவு இலாகா இன்றையதினம் நாட்டிலே கொள்ளைக் கூட்டமாக இருக்கிறதே தவிர, விவசாயிகளுக்கு, மக்களுக்குத் தேவைப்படுவனவற்றை பெற்றுத் தரக்கூடிய இயக்கமாக இல்லை யென்பதைக்கூற விரும்புகிறேன். சட்ட அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவு இலாகாவைப் பற்றி மறு பரிசீலனை செய்து எவ்வளவு சீக்கிரத்தில் சீர்படுத்த வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் சீர்படுத்தினால் விவசாயிகள் பயன் பெறமுடியும்.

என்னுடைய பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் பல இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாக இருப்பவர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஆளே இல்லாத நிலைமையில் யார் யாருக்கோ கடன் கொடுத்ததாக எழுதி பணத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு கிராமத்தில் ஒன்றரை லட்சம் ரூபாய் பணம் விநியோகிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் அந்தக் கிராமத்தில் யாருக்கும் கடன் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் பல கணக்குகள் தாறுமாறான நிலையில் இருக்கின்றன. இந்தமாதிரித் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தண்டனை பெறும்படி செய்வதற்கான அளவுக்கு மாற்றங்கள் தேவை. ஆனால் தவறு செய்தவர்கள் தப்பிக்கவும், ஒன்றுமறியாதவர்கள் மீது அந்தக் குற்றங்கள் சுமத்தப்படவுமான நிலைமைகள் கூட இருக்கின்றன. யார் உண்மையான குற்றவாளி என்று அறிந்து தண்டிப்பதற்கும், மற்றவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் அளவிலும் மாற்றங்கள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அதற்கு எங்களாலான ஒத்துழைப்பைக் கொடுக்க எப்போதும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, விவசாயிகளுக்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அந்தக் கடன்கள் அந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. பல முறை அதைப் பற்றி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்குக் கல்வியமைச்சராக அமர்ந்திருப்பவர்களுக்கும் ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன். என்னுடைய வானூர் தொகுதியிலே, பாண்டிச்சேரியைச் சேர்ந்த அரவிந்த ஆசிரமத்தினர் அரசாங்க அதிகாரிகளைக் கொண்டு புறம்போக்கு நிலங்களை கைவசப்படுத்திக் கொண்டதோடு சர்க்காரிலிருந்து 8½ லட்சம் ரூபாய் இதுவரை கடனாகவும் வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில் ஒரு விவசாயி நிலத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று 200, 300 ரூபாய் கடன் கேட்டால் அந்த நிலத்தைப் பல அதிகாரிகள் வந்து பரிசோதனை செய்கிறார்கள். அதற்காகத்தான் பயன்பட்டனவா என்று பார்க்கிறார்கள். ஆனால் 8½ லட்சம் ரூபாய் கடன் பெற்ற அந்த ஆசிரமத்தினர் இதுவரை எவ்வளவு உற்பத்தி செய்தார்கள், எந்த அளவுக்கு உற்பத்தியான நெல்லை மக்களுக்கு விநியோகித்திருக்கிறார்கள்

என்பதை மட்டும் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். உணவு உற்பத்தி என்று சொல்லிக்கொண்டு இப்படி பல லட்சக் கணக்கான ரூபாயை பலதரப்பட்டவர்கள் எடுத்துக் கொண்ட காரணத்தால் தான் உண்மையான பலன் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை, மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற கருத்தை அமைச்சரவைக்குக் கூறி, இந்த வாய்ப்பையும், சந்தர்ப்பத்தையும் வழங்கிய சபா நாயகர் அவர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, உயர்திரு கவர்னர் அவர்களுடைய உரையைப் பொதுவாக நான் ஆதரிக்கிறேன். ஆதரிக்கக்கூடிய அதே நேரத்தில் அதிலே மக்களுக்குச் செய்ய வேண்டிய, என்னென்ன பிரச்சினைகளைப் பற்றி சேர்க்கப்படவில்லை என்பதை எனக்கு முன்பு பேசிய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் குறிப்பிட்டதைப் போல் நானும் ஒருசில பிரச்சினைகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த 20 ஆண்டுகளாக ஆட்சி பீடத்திலிருந்த காங்கிரஸ் ஆட்சி மக்கள் விரோதப் போக்கைக் கையாண்ட காரணத்தால் தான், இந்தத் தேர்தலில் மக்கள் அந்த ஆட்சியைத் தூக்கியெறிந்து விட்டு புதிய ஆட்சியைப் பீடத்தில் அமர்த்தக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் மக்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நம்முடைய பெருமதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்களும் கூட, இன்றைக்கு மக்கள் இருபதாண்டுக் காலமாக இருந்த ஆட்சியைத் தூக்கியெறியச் செய்ததன் காரணம் என்ன என்று பார்த்து, அவர்கள் வாழ்க்கைத் துறையில் செய்ய வேண்டியது என்ன என்ற முறையில், முதல் முதலாகச் செய்ய வேண்டியது என்ன என்று ஆராய்ந்து, உணவுப் பிரச்சினையில் முதல் முதலாகக் கவனம் செலுத்துவதாகக் கூறியிருக்கிறார்கள். அதை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும். இப்போது எங்கே ஒரு படி, எங்கே மூன்றுபடி என்று கேட்டுவிட்டால் போதாது. வெள்ளையன் ஆட்சி இருந்த காலத்திலே—அன்றைக்கு நானும் காங்கிரஸ்காரர் தான்—1931-ம் ஆண்டிலே கராச்சி திட்டத்தில் மகாத்மா காந்திஜியின் தலைமையின்கீழ் போட்ட திட்டங்கள் என்னென்ன ? அவற்றிலே ஒன்றாவது இந்த 26 ஆண்டுக் கால ஆட்சியிலே கடைப்பிடிக்கப்பட்டதா என்பதைச் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்தித்து இப்போது வந்திருக்கக்கூடிய சர்க்காருக்குப் போதுமான அளவுக்கு அவகாசம் கொடுத்து, அதற்கான ஆலோசனைகளையும் கொடுக்கவேண்டும். அந்த நிலைமையில் நாம் இருக்கிறோமே தவிர, அதை ஏன் செய்யவில்லை, இதை ஏன் செய்யவில்லை என்று கேள்வி கேட்கிற நிலைமை இப்போது இல்லை, பின்னால் இருக்கிறது.

ஆகவேதான் இன்றைக்கு என்னென்ன செய்யவேண்டும், என்னென்ன செய்யப் போகிறார்கள் என்பதைச் சொல்லக் கூடிய நிலையில், இன்று மக்கள் பிரதானமாக எதிர்பார்க்கக் கூடிய பிரச்னை உணவுப் பிரச்னை. உடனடியாக குறைந்த விலையில் உணவு கிடைக்க





வேண்டும், போதுமான அளவிற்கு உணவு கிடைக்கவேண்டும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த சர்க்கார் செய்வார்கள், செய்ய முடியும் என்றுதான் மக்கள் உண்மையில் நம்புகிறார்கள். அதேபோன்று வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கியாக வேண்டும். இன்று இருக்கக்கூடிய லஞ்ச ஊழல்களையும் போக்கியாகவேண்டும். இப்பிரச்சினைகள்பற்றித்தான் மக்கள் நினைத்துக் கொண்டு சர்க்காரை நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இன்று உணவு பெருகி இருக்கக்கூடிய நிலையில் அதிக விலை கொடுத்தால் எவ்வளவு மூட்டைகள் வேண்டுமானாலும் கிடைக்கக்கூடிய அளவிற்கு ஒரு நிலைதான் இருக்கிறது. பதுக்கல், கள்ளக்கடத்தல் போன்ற பிரச்சினைகளில் தீவிரமான, கடுமையான, தயவுதாட்சண்யம் இல்லாமல் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்றில்லாது நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். பாரத யுத்தத்தில் பயப்படக்கூடிய நிலையில் இருந்த அர்ஜுனனிடம் கிருஷ்ண பரமாத்மா சொன்னதன் பிறகு அவர் எந்த நிலையை எடுத்தாரோ அதே போன்று தயவு தாட்சண்யம் இல்லாமல் கண்டிப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு முன்னால் தீர்க்க வேண்டியிருக்கும் பல பிரச்னைகள் குறித்து எதிர்க் கட்சித் தலைவர்கள்கூட கலந்து ஆலோசித்து, முக்கியமாக உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஒரு முடிவுக்கு வருவதுதான் நலமாகும். இன்றையதினம் போதுமான உரம் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அதிக விலை கொடுத்தால் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. பத்திரிகைகளில் இன்று பார்க்கிறோம், 2,000 மூட்டை பதுக்கி வைத்திருந்ததை திடீரென்று கண்டு பிடிக்கக்கூடிய அளவிற்கு நிலை இருப்பதை, 2,000 மூட்டை என்றால் உரம் கிடைக்கவில்லை என்று சொல்லிவிட முடியாது. அந்த உரத்தைக்கூட இன்று எப்படியெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்று பார்க்கவேண்டும். விவசாயத்திற்கு உரம் கிடைப்பதில்லை. கள்ளச் சாராயம் காய்ச்ச உரம் கிடைக்கிறது. சல்பேட்டைக் கொண்டு போய் கள்ளச் சாராயம் காய்ச்சுவதனால் அதிக லாபம் கிடைக்கிறது என்ற அடிப்படையில் அப்படிச் செய்கிறார்கள். சல்பேட் தண்ணீரில் நெல்லை ஊற வைத்து எடை அதிகம் கொடுக்கக் கூடிய ஒரு நிலை இருப்பதால் அப்படிப்பட்ட மோசமான ஒரு வழியும் கையாளப்படுகிறது. உரத்தில் வெள்ளை உப்பைக் கலந்து விற்பனை செய்யும் நிலையும் இருக்கிறது. இன்று பாலில் தண்ணீர் கலந்தால் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. விஷமுள்ள உணவை உட்கொண்டு மயக்கம் அல்லது செத்தான் என்றால் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. அதேபோன்று உரத்தோடு உப்பைக் கலந்து விற்பனை செய்கிறான் என்றால் கோடிக் கணக்கான மக்களுக்கு உணவு தேவைப்படும்போது நிலத்தை கொலை செய்யக் கூடிய அளவிற்கு, மீண்டும் அந்த நிலத்தில் விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்படுத்துகிறவர்களுக்கு அவர்களை அப்படியே சுட்டுத் தள்ளினால்கூட ' அது பெரிய குற்ற

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967, மார்ச் 18

மாகாது. இப்படிச் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அடுத்தபடியாக நிலத்திற்கு உச்சவரம்பு கட்டியதாக சொல்லப்படுகிற சட்டம் இருக்கிறது. அதில் மிச்சம் ஒன்றும் கிடையாது. அத்தனை நிலத்தையும் அவரவர்களே சொந்தமாக்கிக் கொள்ளும் தன்மையில் மோசமான அளவிற்கு அச்சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தச் சட்டத்தை மாற்றியமைக்கக் கூடிய அளவிற்கு இன்றைய சர்க்கார் முன்னுக்கு வந்தாகவேண்டும். ஒரு மனிதனுக்கு என்னதான் வசதிகள் இருந்தாலும், தண்ணீரும் காற்றும் இல்லை என்றால் அவனால் உயிர்வாழ முடியாது. அதேபோன்று விவசாயிகளுக்கு என்னதான் வசதிகள் செய்து கொடுத்தாலும் தண்ணீர் வசதி இல்லை என்றால் விவசாயமே நடக்காது. தஞ்சை ஜில்லாவிற்கு அடுத்தபடியாக வட ஆற்காடு ஜில்லாவில்தான் நெல் உற்பத்தி அதிகம் என்று ஏற்கனவே இருந்த ஆட்சியின் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த ஜில்லாவில் தண்ணீர் வசதி கிடையாது. நீர்ப்பாசன வசதியும் கிடையாது. இருந்தாலும் கரென்ட் வசதியைக் கொண்டு பம்ப் செட்கள் வசதியை வைத்துக்கொண்டு கிணறுகள் வெட்டி, அதைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து வருகிறார்கள். அந்த ஜில்லாவில் வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு சட்டத்தைப் போட்டார்கள், பாலாறு பேசின் சட்டம் என்ற அந்தச் சட்டம், விவசாயத்தைக் கொலை செய்யக் கூடிய சட்டமாகும். விவசாயிகளையும் கொலை செய்யும் சட்டமாகும் அது. பெரிய விவசாயிகளுக்குச் சாதகமான சட்டமாகும் அது. இன்றைக்கும் அது இருந்து கொண்டிருக்கின்றது. அதை தூக்கி எறிந்தாகவேண்டும். ஆந்திராவில் இருக்கக்கூடிய கிருஷ்ணா, கோதாவரி தண்ணீரை, கடலில் சென்று கலந்து வீணாகப் போய்க் கொண்டிருப்பதை, பாலாற்றில் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டையும் தீவிரமாக எடுத்துக் கொள்ளவேண்டும். சென்ற இருபது ஆண்டு காலமாக எல்லா மாநிலங்களிலும், மத்திய ஆட்சியிலும் காங்கிரஸ் கட்சிதான் ஆண்டு வந்தது. ஆனால் தண்ணீர் கொடுப்பதில் தேசியம் கிடையாது. தண்ணீர் கொடுப்பதில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனோபாவம் இருந்ததே கிடையாது இதுவரைக்கும். ஆனால் ஒன்றைக்கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்று கேரளாவில் இருக்கக்கூடிய முதல் அமைச்சர் திரு. நம்பூதிரிபாட் ஆட்சிபீடத்தில் இருந்தபோதுதான் அங்குள்ள தண்ணீரை நம் தமிழ்நாட்டிற்குக்கொண்டு வருவதற்குள்ள நிலைமை ஏற்பட்டது. அதுகுறித்து திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்தச் சபையிலேயே பேசியிருக்கிறார்கள். அதேபோன்று கடலில் வீணாகப் போகக்கூடிய தண்ணீரை இங்கு கொண்டுவருவதற்குள்ள அளவிற்கு மத்திய சர்க்காரோடு போராடிப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும். அதேபோன்று பம்ப் செட்ஸ் வாங்குவதற்கு அல்லது கிணறுகள் வெட்டுவதற்குக் கடன் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறதே, அப்படிப் பணமாகக் கொடுப்பது தவறு என்பது என் அபிப்பிராயம். சர்க்காரே பம்ப் செட்டாகவோ அல்லது மோட்டாராகவோ கொடுத்து உதவி செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதேபோல்



1967, மார்ச் 18] [திரு. வி. கே. கோதண்டராமன்]

100, 200 ஏக்கரில் நல்ல பாங்கான இடத்தில் பெரிய கிணறுகளை வெட்டி, அதில் பம்ப் செட்ஸ் போட்டு 200 ஏக்கர்கள் பாயக்கூடிய வாய்ப்பு வசதிகள் செய்துகொடுத்து, வரிப் பணத்தைப் போல் போட்டு வசூல் செய்ததற்குப் பிறகு அவர்களிடம் ஒப்படைக்கும் அளவிற்கு ஒரு திட்டம் இருந்தால் நலமாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம். ஸ்டேட் ட்ரேடிங் முறையில் உணவு விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்பது ரொம்பவும் நல்லது. மதிப்பிற்குரிய ஆதிமூலம் அவர்கள் கூறியதுபோல் தனி வியாபாரிகளிடம் விட்டால், அவர்கள் தங்கள் லாபத்தைப் பெருக்கிக் கொள்ளும் அடிப்படையில் விட்டோம் என்று சொன்னால் பழைய குருடி கதவைத் திறடி என்று சொல்வதுபோல் பழைய சர்க்கார் இருந்த வழி போனால் நிலைமை மோசமாகப் போய் விடும். சிறிய நீர்ப்பாசன வசதிகளை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்கான வசதிகள் இருக்கின்றன என்பது என் அபிப்பிராயம். குடியாத்தம் தாலுகாவில் மோர்தானா டாம் கட்டும் வகையில் வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு திட்டம் போட்டிருந்தான். 1954-ல் நடைபெற்ற உபதேர்தலின்போது, திரு. காமராஜ் அவர்கள் அங்கு போட்டியிட்டபோது என்ஜினியரிங் இலாகாவைக் கொண்டு அப்போதே கட்டி முடிக்கிறமாதிரி ஒரு நாடகம் கூட நடத்திக் கடைசியாக பாலாறு பேசின் ரூல்ஸ்படி தாம் கட்ட முடியாது என்று அது கைவிடப்பட்டது. ஆகவே பாலாறு பேசின் சட்டத்தை தகர்க்கவேண்டும், மோர்தானா டாமைக் கட்டி முடிக்கவேண்டும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோன்று தீவிரச் சாகுபடி செய்வதிலும் தீவிர முயற்சி எடுத்தல் வேண்டும். விவசாயத்திற்கு உரம் மட்டுமல்ல, விதைகளும் தேவைப்படுகின்றன. இதுவரை அவற்றை மார்க்கெட்டிங் சொஸைட்டி மூலம் வாங்கிக் குறைந்த விலைக்கு விநியோகம் செய்யும் நிலை இருந்தது. நான் கேள்விப்படுகிறேன், ஒரு உத்தரவு போட்டு ரெகுலேட்டட் மார்க்கட் மூலம் அல்லாமல் செய்து தஞ்சை ஜில்லாவில் ஏழு ஆபீஸ்கள் மூடப்பட்டு நூற்றுக்கணக்கான பேர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆகவே, அது சம்பந்தமாகவும் தீவிரக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே 12-30 பிற் பகல்.
இந்த விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்னையிலே தீவிரக் கவனம் செலுத்தி உணவுப் பொருள்கள் விநியோகம் செய்வதிலே குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க உடனடியாக ஏற்பாடு செய்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இலாகா சம்பந்தப்பட்ட வரையிலே, இன்றைக்குப் பரிசிலனை செய்வதற்காக வேண்டி, நிலைமையைக் கண்டறிய குழு அமைக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருப்பது என்னைப் பொறுத்தவரையில் அது வரவேற்கக் கூடியதாக இல்லை. காரணம் என்ன என்றால், இன்றைக்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக் கூடிய ஜில்லா சென்ட்ரல் பாங்கிலும், ஜில்லா கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டியிலும், வேறு கூட்டுறவு சொஸைட்டிகளிலும் மிகப்பெரிய அளவுக்கு ஊழல்கள் மலிந்திருக்கின்றன என்பது

தான். அதற்குக் குழு அமைக்கப்படுகிறது என்று இந்த நோக்கில் சொல்லிவிட்டால், சென்ற காலத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்த போது நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டுவரப் போகிறோம், உச்ச வரம்பு கட்டப் போகிறோம் என்று சொல்லி . . .

**மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு சங்கங்களைப்பற்றிய சட்டத்திலும், அது பற்றிய விதி முறைகளிலும் நடைமுறைகளிலும் மாற்றம் செய்வதற்காகத்தான் குழு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தவறுகள் நடந்திருப்பதில், மிஸ்அப்ராப்ரியேஷன் கேஸஸ் பெண்டிங்காக இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். குழு அமைப்பதானது எந்த அளவுக்கு நடை முறைகளை மாற்றுவது என்பதுபற்றிப் பரிசீலனை செய்வதற்காகத்தான்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அதைத்தான் நான் சொல்லுகிறேன். குழு ஏற்படுத்துவதற்குப் பதில் உடனடியாக அதிகாரிகளைப் போட்டு எல்லா இடத்திலும் விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். குழு என்று அமைத்தால் மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் போகும். பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமாக, மினிமம் வேஜஸ் கமிட்டி என்று போட்டு 1½ வருஷங்கள் ஆகின்றன, ஒன்றும் செய்யவில்லை. அந்த மாதிரி போகக் கூடாது. விசேஷ அதிகாரிகளைப் போட்டுத் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் ஊழலைப் போக்கும் அளவுக்கு ஆரம்ப நடவடிக்கையாக இருக்க முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் வளர்ச்சியைப்பற்றி ஏற்கனவே எனக்கு முன் பல பேர்கள் கூறியிருக்கிறார்கள். பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. சர்க்காரே முடியுமானால் எடுத்து நடத்தக்கூடிய அளவுக்கு உடனடியாகத் தீவிர நடவடிக்கையில் இறங்கியாகவேண்டும். அதே மாதிரித்தான் கைத்தறி நெசவுத் தொழிலாளர் நிலைமை கூட இருக்கிறது. இன்ஸென்ட்டிவ் போனஸ் பல தொழில்களில் கொடுக்கிறார்கள். இதற்கு ஏற்கனவே கொடுத்துக்கொண்டு வந்த அந்த போனஸெல்லாம் கூட நிறுத்தப்பட்ட காரணத்தினால்தான் அந்தத் தொழிலே பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது மாத்திரமல்ல, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இல்லாதது மாத்திரமல்ல, குறிப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் உள்நாட்டிலும் உபயோகப்படுத்தும் அளவுக்குக்கூட தயாராகாத நிலை இருக்கிறது. இது குறித்து மத்திய சர்க்காரிடம் போராடியாக [illegible] வேண்டும்.

தொழிலாளர் நலன்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருக்கிற சட்டங்களின் அடிப்படையில் கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் போனஸ் 6 மாதம், 7 மாதம், 8 மாதம் என்று வாங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அதைக் கட்டுப்





படுத்தி, இந்த அளவுக்குத்தான் வாங்கமுடியும், அதற்கு மேல் கிடைக்காது என்ற மோசமான நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பது மாத்திரமல்ல, பஞ்சப் படியைக் கூடக் குறைக்கும் அளவுக்கு முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன, வேலையைவிட்டு நீக்கும் அளவுக்கு முயற்சிகள் இருந்துகொண்டு வருகின்றன என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இது போன்ற விஷயங்களிலே தொழிலாளிகளும் பாதிக்கப்படாத தன்மையில் பாதுகாப்பான சட்டங்களை அமல் நடத்தவேண்டும். குறிப்பாக, பீடித் தொழிலாளர்களுக்காக வேண்டி 1958-ம் ஆண்டில் சட்டத்தை நிறைவேற்றினாலும், ஊறுகாய்ப் பானையில் போட்ட மாதிரி அது ஊறிக்கொண்டு இருக்கிறது. இன்றைக்கு வந்திருக்கிற சர்க்கார் உடனடியாக அதை அமல் நடத்தவேண்டும் என்பது மாத்திரமல்ல, மினிமம் வேஜஸ் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதே, அதனுடைய ரிப்போர்ட்டை உடனடியாகக் கொண்டுவர கவனம் செலுத்தவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி அந்தந்தப் பிரச்னைகள் வரும்போது சொல்லிக் கொள்ளுகிறேன் என்று சொல்லிக் கடைசியாக ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆந்திராவிலிருந்து நம் தமிழ் நாட்டோடு சேர்ந்த பல பகுதிகள் இருக்கின்றன. அவைகள் சேர்ந்து 7-8 வருஷங்கள் ஆகின்றன. ரோடு வசதி கிடையாது, குடி தண்ணீர் வசதி கிடையாது, மற்ற எந்த வசதிகளும் கிடையாது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் இதைப் போல 40—50 கிராமங்கள் இருக்கின்றன. அந்த மக்கள் மிகப் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், ஆந்திராவிலிருந்து சேர்ந்திருக்கிற அந்தப் பகுதிகளுக்கு விசேஷச் சலுகையாக அதற்குப் பணம் ஒதுக்கப்பட்டு, ரோடு வசதி, குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. பெ. மலைச்சாமி:** பெருமதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் அன்புகெழுமிய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நேற்றைய நாள் நடந்த மேன்மைதங்கிய கவர்னர் உரைபற்றி நானும் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று எண்ணுவதற்கு முன்னாலே, என்னைப் போன்றவர்கள் இந்த மன்றத்திற்குப் புதியவர்கள், இந்த மன்றம் ஒரு மலர்த் தோட்டமானால், இந்த மலர்த் தோட்டத்திலே பாராளுமன்ற அனுபவம் பெற்ற பல மலர்கள் உண்டு, என்னைப் போன்றவர்கள் கட்டவிழாத அரும்பைப் போன்றவர்கள். மலர்கள் மத்தியில் அரும்புகள் போல எங்களையும் தயவு செய்து இணைத்துக்கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

[திரு. பெ. மலைச்சாமி] [1967, மார்ச் 18

கவர்னர் பெருமான் பேருரையில் முதலில் அவர்கள் குறிப்பிட்டபடி, உலகத்தின் கண்களையே இழுத்த தேர்தல் நமது தமிழகத்திலே நடைபெற்ற தேர்தல். ஃப்ரெஞ்சு நாட்டிலே ஏற்பட்ட புரட்சியில் படைக் கலன்களைக்கொண்டு மன்னனை வீழ்த்தினார்கள் என்று வரலாறு சொல்லும். ஆனால், இங்கே அமைதியான புரட்சியைத் தமிழக மக்கள் உருவாக்கியிருக்கிறார்கள். 20 ஆண்டுக்காலம் ஆட்சி நடத்திய காங்கிரஸ் தோற்று விட்டது என்று சொல்லுவதை விட, மக்களாட்சி காப்பாற்றப்பட்டு விட்டது என்று சொல்லவேண்டும். உலகத்திலே ஏற்பட்ட புரட்சிகள் ஆயுதங்களால் ஏற்பட்ட புரட்சிகள். " Battle taxes are replaced by ballot boxes " என்பதற்கேற்ப (போர்க்கருவிகள் வாக்குப் பெட்டிகளால் மாற்றப்பட்டுள்ளது). தமிழகத்தைப் பொறுத்த வரையில் வாக்குச் சாவடிகள் ஒரு அமைதியான புரட்சியை உருவாக்கி விட்டன. இதற்கு மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏக தலைவர் அவர்கள், பேறிஞர் அண்ணா அவர்கள், ஏழை மக்களின் இதயத்தைத் தன் கையிலே கொண்டு வாழ்கிறவர்கள். ஏழை மக்களின் கால்களைச் சுற்றி வளர்ந்தது திராவிட முன்னேற்றக் கழகம். நாங்கள் இங்கே ஏற்றிருப்பதைப் பதவியாக ஏற்றுக் கொள்ளவில்லை. இதைப் பெரிய பொறுப்பாக ஏற்றுக் கொள்கிறோம். காரணம், தமிழகத்தின் பண்பாட்டையும், தமிழகத்தின் இனிமையையும், தமிழகத்தின் நாகரிகத்தையும் கொண்டு விளங்கிவரும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி. நம் இல்லத்திலே எத்தனையோ மின் விளக்குகள் இருந்தாலும், வானத்தில் உள்ள வட்ட நிலாவின் ஒளி சாளரத்தின் வழியே வரும்போது அந்த நிலவொளியை ஒட்டியிருக்க விரும்புகிறோம். அந்த வகையில் பல அமைச்சரவை பதவி ஏற்றாலும் அண்ணா அவர்கள் வானத்திலே வருகிற வெண்ணிலாவைப் போன்றவர். மேலும் நான் முன்னே சொன்னதுபோலத் தமிழகத்தின் பண்பாட்டையும், தமிழகத்தின் நாகரீகத்தையும் ஒட்டி வளர்ந்தது திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். எனவே கவர்னர் பேருரையில் தேர்தலின்போது எந்த விதமான அசம்பாவிதமும் இல்லை என்று சொன்னார்கள். அசம்பாவிதங்கள் நடந்திருக்கும், ஆனால் அவற்றைத் தடுத்து நிறுத்தியவர்கள் எங்கள் தலைவர்தான். காரணம் மாற்றுக் கட்சிக்காரர்கள் அடித்தால் வாங்கிக்கொள்ளுங்கள், தலையைத் தாருங்கள் என்றால் தாருங்கள், தமிழனின் தன்மையை விட்டு ஓடிவிடாதீர்கள் என்று ஆணையிட்ட காரணத்தினால்தான் அசம்பாவிதங்கள் நடக்கவில்லை. எங்கள் தொகுதியில் போலீஸ் அமைச்சர் பவனி வந்த நேரத்தில் போலீஸ்காரர்கள் கொடுத்த தொல்லைகளை எங்களால் விவரித்துச் சொல்ல முடியாது. போலீஸ்காரர்கள் கொடுத்த தொல்லைகள் பல. தமிழின் முதல் எழுத்தை நாம் எண்ணிக்கொள்வோம். தமிழில் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்று பிரித்திருக்கிறார்கள் இலக்கண ஆசிரியர்கள். உயிர் எழுத்து இல்லாமல் மெய் எழுத்து இயங்காது. உயிர் எழுத்தில் முதலாக இருப்பது அகரம். அகரத்தை முதலாகக் கொண்ட பெயர் கொண்டவர் எங்களது பேரறிஞர் அண்ணா அவர்கள். எனவேதான் உயிர் எழுத்து இல்லாமல் மெய் எழுத்து



1967, மார்ச் 18] [திரு. பெ. மலைச்சாமி]

இயங்காது. பேறிஞர் அண்ணா அவர்களின் இயக்கம் இல்லாமல் தமிழகம் இயங்காது என்று நாட்டு மக்கள் அறிவித்துவிட்டார்கள். கொடுமைகள் நிகழ்ந்த நேரத்தில் முன்னேற்றக் கழகம் மக்களுக்குப் பணி செய்யக் கடமைகளை மேற்கொண்டிருக்கிறது.

கவர்னர் அவர்கள் உரையில் வேளாண்மைத் துறையைப் பற்றியும், உழவியல் நிலைமையைப்பற்றியும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உழவுத் தொழிலில் பண்பட்டவர்கள், நாங்கள் கலப்பை எப்படி இருக்கும், கொழு எப்படி இருக்கும், நுகம் எப்படி இருக்கும், தடி எப்படி இருக்கும், மாடுகள் எப்படி இருக்கும் என்று தெரியாதவர்கள் அல்ல. உழவுக்கும் கலப்பைக்கும் உள்ள தூரத்தையும், எந்த நெருக்கத்தில் எப்படிக் கட்டினால் மாடுகளுக்குத் தொல்லை வராது என்ற நிலைமைகளையும் நாங்கள் தெளிவாக அறிந்து கொண்டிருக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். பாராளுமன்ற முறையில் வேண்டுமானால் பக்குவம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நிலத்தைப் பண்படுத்துவதிலே நாங்கள் அதிகம் அறிந்தவர்களாக இருக்கிறோம். கவர்னர் அவர்கள் சொன்னார்கள், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே எத்தனை சிக்கல்கள் இருந்தாலும், இந்தப் புதிய அரசு உணவுச் சிக்கலை முதலில் எடுத்துக்கொள்ளும். 20 ஆண்டுக்காலமாக ஆட்சியை நடத்தி வந்த ஒரே கட்சி ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டினோம் என்று சொல்லிக்கொண்டு வந்தது. ரஷ்ய நாட்டில் ஸ்டாலின் தீட்டினான் ஐந்தாண்டுத் திட்டங்களை, நாங்களும் தீட்டினோம் என்றார்கள். உறவினர்கள் இறந்துபட்டால் கிராமப் பகுதி மக்கள் உடன் அழுதுகொண்டு செல்வார்கள். அப்பொழுது இறந்துபட்டவரின் உண்மையான உறவினர்கள்தான் உண்மையாக அழுதுகொண்டு செல்வார்கள். மற்றவர்கள் போலியாக அழுதுகொண்டு செல்வார்கள். "ஊரார் சிரிப்பாகண்டு ஒப்புக்கழுகு நண்டி, வாயை வந்து பொத்துங்கடி வகை கெட்ட பெண்டுகளா" என்பது போல, அவர்களுக்காகப் போடப்பட்ட திட்டம், உண்மைக்காகப் போடப்பட்ட திட்டமல்ல என்ற நிலையில் தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் அமைந்திருந்தன. ஐந்தாண்டுத் திட்டங்களில் பலன் இறுதியிலே உழவர்கள் கைக்குப் போகவில்லை. எனவேதான் நாட்டிலே உணவுச் சிக்கல்களும், உணர்வுச் சிக்கல்களும் ஏற்பட்டன. இந்த இரண்டு சிக்கல்களின் இடையே ஜனநாயகத்தைக் காப்பாற்றும் நிலை ஏற்பட்டது.

வேளாண்மைத் துறையிலே கவர்னர்பெருமான் அவர்கள் முதன் முதலாகக் கொள்முதல் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எங்களது முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், ஏழைகளைக் கெஞ்சிக் கேட்கவேண்டும், சற்று அதிகமாக வசதி உள்ளவர்களைக் கடிந்து கேட்கவேண்டும் என்று சொன்னார்கள். கடந்த காங்கிரஸ் ஆட்சியில் எனது தொகுதியில் நடந்த ஒரு கொடுமையான நிலைமையை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நத்தம் கோவில்பட்டி என்ற கிராமத்தில் கருப்பண்ண பிள்ளை என்ற ஒரு விவசாயி 1 ஏக்கர் 21 செண்டு நிலம் வைத்திருக்கிறார். 1 ஏக்கர் 21 செண்டு நிலத்திற்குத் தண்ணீர்ப் பாசன வசதி இல்லை. ஆற்றுக் கால் பாசனம் இல்லை, கால்வாய் பாசனம் இல்லை. கவலைத் தண்ணீர்

இறைத்துத்தான் நீர் பாய்ச்சிப் பயிர் செய்யவேண்டும். அந்த 1 ஏக்கர் 21 செண்டு நிலத்தில் கண்டுமுதல் செய்த 11 மூட்டை நெல்லை வீட்டுக்கு எடுத்துக்கொண்டுவந்தார். மகனுக்கு தை மாதம் திருமணம், ரூ. 600 கடன். இந்த நிலையில் உள்ள அந்த விவசாயி வண்டியில் 11 மூட்டை நெல்லை வீட்டிற்குக் கொண்டுவருகிறார். அரசாங்க அதிகாரிகள் அங்கே சென்றார்கள். வண்டியை நிறுத்தினார்கள், நெல் உங்களுக்குச் சொந்தம் இல்லையே, எங்களுக்குத்தான் சொந்தம் என்று அதட்டினார்கள், ஏழை விவசாயி தன் குடும்பம் உள்ள கடுமையான நிலையை விளக்கிச் சொல்லியும், அந்த அதிகாரிகள் கேட்கவில்லை. 11 மூட்டை நெல்லையும் தரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். விவசாயி கெஞ்சிச் சொன்னார் 3 மூட்டை நெல் தருகிறேன் எடுத்துக்கொள்ளுங்கள் என்று. இதை அதிகாரிகள் மறுத்த உடனே, தனது எட்டுக் குழந்தைகளையும் அழைத்து வந்து மனைவியையும் அழைத்து வந்து வண்டிக்கு முன்னாலே படுக்க வைத்து, தானும் படுத்து வண்டியை எங்கள் மீது ஏற்றிவிட்டு நெல்லை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்ன காலம் காங்கிரஸ் ஆட்சிக் காலம். இனிமேல் அந்த நிலைமைகள் ஏற்படாது என்று ஏழை விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். எனவே கொள்முதலைச் சீராக நடத்தவேண்டும் என்று அமைச்சர் அவை கூறிய கருத்துக்களை கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார், நான் அதை ஆதரிக்கிறேன்.

மேலும் விவசாயிகளுக்குப் பயன்படுகிற முறையிலே சிறிய நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்தால், உரம், விதைகள் இவற்றை விநியோகித்தல், அது போன்ற மற்ற வசதிகளை விவசாயிகளுக்குச் செய்துகொடுத்தல் அவசியம் என்ற முறையில், புதிய அரசு செம்மையாகச் செயல்படும். ஓவிய வல்லுநர் அழகான வானவில்லைத் தீட்டிக்காட்டவேண்டுமென்றால், ஒவ்வொரு வண்ணமும் பயன்படவேண்டும். பச்சை ஒரு வண்ணம், சிவப்பு ஒரு வண்ணம், இப்படி வண்ணங்கள் கிடைத்தால் மட்டும் போதாது, மறையாத, தரமான வண்ணங்களாக இருத்தல் அவசியம். காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் வண்ணங்கள் கிடைத்தன, ஆனால் முழுமையாகவும், செம்மையாகவும் கிடைக்கவில்லை. எனவே ஒரு விவசாயி உற்பத்தித் திறன் என்ற ஒரு வானவில்லைத் தீட்ட வேண்டுமானால், பாசன வசதி வண்ணம் வேண்டும், உரம், விதை போன்ற பல ரக வண்ணங்கள் வேண்டும். தேவையான வண்ணங்கள் யாவும் ஏழை விவசாயிகளுக்குச் சீராகக் கிடைத்தால்தான் இந்திய நாட்டிலே விவசாயி முன்னேறமுடியும். அமெரிக்கா போன்ற நாடுகளில் 100-க்கு 10, 12 பேர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழகத்தை, இந்தியாவைப் பொறுத்த அளவிலே, கிட்டத்தட்ட 75 விழுக்காடு உழவுத் தொழில் ஈடுபட்டிருக்கிறார்கள். அமெரிக்க நாட்டிலுள்ள விவசாயி உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருள் மூலம் அமெரிக்க நாட்டில் 22 பேர்களுக்கும் உணவு கொடுத்து, வெளிநாடுகளில் 3 பேர்களுக்கும் உணவு கிடைப்பதாகத் தெரியவருகிறது. அமெரிக்க நாட்டில் இருக்கிற அரசு புதிய விஞ்ஞான முறைகளில்





உழவுக்கு ஆக்கம் தருகிறது. புதிய முறைகள் நல்ல பயன்களைத் தருகின்றன. ஆனால் இந்திய அரசு இதற்கு முன்னாலே உழவின் பெருமையைப்பற்றி பேசினார்கள். ஆனால் உழவன் வாழ்க்கை பற்றிச் சிந்திக்கவில்லை. அதன் காரணமாகத்தான் உணவுச் சிக்கல் நாட்டில் தலை விரித்தாட ஆரம்பித்துவிட்டது.

கூட்டுறவு அமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் பெற்றவர்கள். உலகத்தில் மனிதன் எங்கே தொடங்கினான் என்று கேட்டால் இலேமூரியா கண்டத்தில் என்று சொல்கிறார்கள். ஊழல் எங்கே தொடங்கியது என்றால் கூட்டுறவு முறையில் தொடங்கியது என்று சொல்லலாம். இந்த நாட்டில் கூட்டுறவுத் துறையில் அவ்வளவு ஊழல்கள் மலிந்துவிட்டன. சட்ட அமைச்சர் அவர்கள் அனுபவம் உடையவர்கள். கூட்டுறவுத் துறையிலுள்ள நிலைமைகளைப்பற்றித் தெளிவாக அறிந்தவர்கள். விவசாயிகள் அதிகமாகத் தொடர்பு கொண்டிருப்பது கூட்டுறவு இயக்கம். கனம் உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதுபோல, சில தலைவர்களுக்காக அது பயன்படுகிறதே தவிர, தனிப்பட்ட உழவர் பெருமக்களுக்குக் கூட்டுறவு இயக்கம் பயன் தருவதில்லை. உர வகைகள் வழங்குவதிலே, வெளியில் யூரியா ஒரு படி ரூ. 2½-க்கு விற்கப்படுவதன் காரணமாக, மார்கெடிங் சொசைடி போன்ற இயக்கங்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியின் ஐக்கியமாக மாறிவிட்டது. அங்கு அரசியல் நுழைந்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பயன் தரக்கூடிய அளவுக்கு கூட்டுறவு இயக்கம் நடைபெறவில்லை. கூட்டுறவு இயக்கத்தின் தத்துவம் அனைத்தும் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கக் கூடிய வாய்ப்பும், வசதியும் இருக்கவேண்டும். அம்மாதிரி நன்மை பயக்கும் வகையில் நல்ல வசதிகளை இனிமேல் இந்த அரசு செய்து தரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவது மிகவும் இன்றியமையாதது. என்னுடைய தொகுதியைப் போன்ற வறட்சிப் பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு முன்னால் எனது தொகுதியில் பெரிய அருவி நீர்த் தேக்க திட்டம் காங்கிரஸ் ஆட்சியினால் போடப்பட்டு, தேர்தல் காலத்தில் கூட அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. தண்ணீரைச் சரியாகப் பாதுகாக்காமல் ஒழுகிக்கொண்டிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. புதிய அரசு சிறிய நீர்ப்பாசன வசதிகளை அதிகம் செய்து தருவதற்கு முன்வந்தாக வேண்டும். ஊராட்சி ஒன்றியப் போன்ற துறைகளில் 10 ஏக்கருக்கு மேல் பாசனவசதி தருகின்ற குளங்களைத்தான் வெட்டித்தருகிறார்கள். 10 ஏக்கருக்குக்கீழே இருக்கின்ற கண்மாய்களை வெட்டித் தருவதில்லை. இதிலே இன்னும் அதிகமான அக்கறை செலுத்தவேண்டும் என்று புதிய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, கவர்னர் அவர்களது பேருரையிலே உணவுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து, வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற புதிய ஆட்சி அதற்கு வேண்டிய வழிவகைகளை வகுத்தமைக்கு நான் பாராட்டி, விடை பெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

*. திரு. செ. பாலசுப்ரமணியன்: கனம் சபாநாயகர் அவர்களே, ஐயா, கவர்னர் பெருமானின் பேருரைமீது, நன்றி தெரிவித்து திரு. மணி அவர்கள் கொண்டுவந்துள்ள இத் தீர்மானத்தை எஸ். எஸ். பி.-யின் சார்பில் நாங்கள் முழு மனதோடு ஆதரிக்கிறோம் என்று தெரிவிக்கிறேன். ஆதரிக்கிறோம் என்று சொன்னால், ஏதோ கவர்னர் பெருமானின் பேருரை நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு இருக்கிறது, எங்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கிறது என்பது அல்ல பொருள். புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் சர்க்காரோடு ஒத்துழைத்து, மக்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்கிற எண்ணத்தில் சொல்லுகிறேன். இப்பொழுதுதான் அரசாங்கம் பதவி ஏற்று இருக்கிறது. கொஞ்சகாலம் ஆகவேண்டும். சென்ற 19 ஆண்டுக் காலமாக காங்கிரஸ் அரசு ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கும் சூழல்களைப் பார்த்துச் சிந்தித்து, அவற்றிற்குப் பரிகாரம் கண்டு பிடித்து, மக்கள் பிரச்னைகளைப் பரிசீலித்துத் தீர்வுகாண அவகாசம் கொடுக்கவேண்டும் என்பதில் நாங்கள் முழு ஆதரவு கொடுக்கிறோம். இந்த கவர்னர் உரை எங்களைப் பொறுத்த வரையில் திருப்தி அளிக்கவில்லை. குறிப்பாக மக்கள் ஓட்டுச் சீட்டின் மூலம் ஏற்படுத்திவிட்ட மாபெரும் புரட்சிக்குப் பிறகு, மக்கள் சர்க்கார் முழு பொறுப்பு ஏற்றிருக்கும் இந்த நிலையில், கவர்னர் பெருமான் உரை ஆற்றுகிறார் என்றால், அவர் தானாகவே நினைத்து, எழுதிப் படிக்கிறார் என்பதில்லை. அவர் உரை என்பது அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம்தான், இந்த அமைச்சரவையின் கொள்கைப் பிரகடனமாகத்தான் அமைகிறது. அந்த ரீதியில், இந்த உரையை நண்பர் கரூர் உறுப்பினர் திரு. டி. எம். நல்லசாமி சொன்னதுபோல, அன்றைக்குக் காங்கிரஸ் ஆட்சியில் அளித்த கவர்னர் உரைக்கும், இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கவர்னர் உரைக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் காண முடியவில்லை. உண்மைதான், பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள நாளாகும். ஆகவே அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன்.

பொதுவாக இந்த தேசத்திலே, மிகப் பெரிய பிரச்னை மக்களின் பிரச்னை உணவுப் பிரச்சினைதான். ஆனால் ஜீவாதாரப் பிரச்சினைகளை, அரசியல் கட்சிகள் பொதுவான பிரச்சினைகளாகக் கொண்டு வார்த்தை ஜாலங்கள் நடக்கின்றனவே தவிர, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று எந்தக் கட்சியும் சிந்தித்ததாகக் கிடையவே கிடையாது. உணவுப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், அந்தப் பிரச்சினையில் உற்பத்தி அதிகரிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டே வந்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சியும் சரி, மற்றக்கட்சிகளும் சரி உணவுப் பிரச்சினையில் உற்பத்தி பெருகவேண்டும் என்பதைப் பற்றி கொள்கையளவில், விளக்கமாகவும், பொதுவாகவும் பேசி வருகிறார்கள். ஆனால், உணவு உற்பத்தி அதிகரிக்க, விவசாயிகளுக்கு நிலம் சொந்தமாக்கப்பட்டதா என்பது ஒன்று. இரண்டாவதாக, உணவு உற்பத்தி அதிகமாக அதிகப்படுத்தினால்





லாபம் கிடைக்கும். சமூகத்தில் மற்றவர்களைப்போல, தானும் வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கமுடியும் என்கிற உத்தரவாதம் இருக்கிறதா என்று பார்ப்போமேயானால், நிச்சயமாக இல்லை. காங்கிரஸ் கட்சி தோற்றதற்குக் காரணம், காங்கிரஸ் கட்சியின் திட்டங்கள் பிரமாதமாக இருந்தாலும், செயல்படுவதில் கோளாறுகள் இருந்ததுதான் என்று நினைக்கிறேன்.

லாண்ட் சீலிங் ஆக்டை எடுத்துக்கொண்டு பார்த்தால், அந்த சட்டம் விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்டது. ஆனால், எனக்குத் தெரிந்தவரையில், தமிழ் நாட்டில், எந்தப் பெரிய விவசாயினுடைய நிலமும் பிடுங்கப்பட்டதாகக் கிடையவே கிடையாது. ஆகவே, இப்பொழுது இருக்கும் அரசாங்கம், ஏற்கனவே காங்கிரஸ் கட்சியினால் போடப்பட்ட சட்டங்களில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை ஆராய்வது ஒன்று; இரண்டாவதாக, அந்தச் சட்டங்களை அமுல்படுத்துவதில் என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்று ஆராய்ந்து அமல் நடத்துவது என்பவற்றில் கவனம் செலுத்தினால் நன்றாக இருக்கும். லாண்ட் சீலிங் ஆக்டிலிருந்து பெரிய பெரிய நிலப் பிரபுக்கள் தப்பிவிட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு ஆயிரக்கணக்கான ஏக்கர்தான் உபரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் உச்ச வரம்பு வைக்கப்பட்டது. அதன்படி அதிகமாகவே வந்திருக்கவேண்டும். ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லும்போது, முதல் நடவடிக்கையாக, நில உச்ச வரம்பை, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை மாற்றி, குறைந்த பட்சம், கனம் முதல் அமைச்சர் ஏதோ ஒரு பிரசங்கத்தில் சொன்னதுபோல, 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராக நிர்ணயிக்க நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். அது மட்டுமல்ல, லாண்ட் சீலிங் ஆக்டில் பற்பல விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேச்சல் தரைக்கு, தோப்புகளுக்கு, கரும்பு விவசாயத்திற்கு, இப்படியெல்லாம் விதிவிலக்குக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிவிலக்குகள் எந்தக் காரியத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்தக் காரியங்கள் நிறைவேற்றப்படாமல் வேறுவகையில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. தோப்புகள் என்று விலக்களிக்கப் பட்ட நிலங்களில் நெல் விவசாயம், கரும்புக்கு என்று விலக்கு அளித்த நிலத்தில், கம்பு, சோளம் பயிர் செய்யப்படுவது என்று இருக்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, சட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்துவதில், இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகிறேன்.

அடுத்தபடியாக, உர விநியோகம்பற்றிப் பொதுவாகச் சொன்னார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரம் அவசியமானது. விவசாயிக்கு வேண்டிய வசதிகளைச் சரிவரச் செய்துகொடுத்தால், தமிழ் நாட்டில் இருக்கும் விவசாயிகள் உலக விவசாயிகளைவிட பின்தங்கிவிட மாட்டார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. செ. பாலசுப்ரமணியம்] [1967, மார்ச் 18

கவர்னர் பெருமான் உரையில் உணவு கண்ட்ரோலைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. உணவு கண்ட்ரோல் சம்பந்தப்பட்ட வரையில், அதில் இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று ஸ்டாசுட்டரி ரேஷன், அதாவது சட்டப்பூர்வமானப் பங்கீட்டு முறை, அது பெரிய மாநகரங்களில் அமலாக்கப்பட்டு வருகிறது. சென்னை, கோவை, மதுரை போன்ற மாநகரங்களில் அந்த முறை அமலாக்கப்படுகிறது. மற்ற இடங்களில் நியாய விலைக் கடைகள் வைத்து உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. சென்னை நகரத்தில் இருக்கின்ற ரேஷன் முறை, கிராமப்புரங்களில் இல்லை. நிலம் இல்லாத ஒரு விவசாயி அல்லது சாதாரண மனிதன் அந்த வகையில் உணவுப் பொருள் அடைவதில்லை. அவனைப் பொறுத்தவரையில், பிரச்சினை கடினத்தன்மை உள்ளதாக இருக்கிறது. சென்னை நகரத்தைக் காட்டிலும் கிராமப்புரத்தில் கடினமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பற்றாக் குறையாக உள்ள கோயம்புத்தூர் ஜில்லாவில் உணவுப் பண்டங்கள் கடுமையாக இருக்கின்றன. தஞ்சாவூரில் இருப்பதை விட கடுமையாகத்தான் இருக்கிறது. உதாரணமாகச் சொல்லப் போனால், ஈரோட்டில் சிறிய படி அரிசி ரூ. 1-60-க்கு விற்கிறது. தேர்தலுக்குப் பிறகு பதுக்கல் செய்து வைத்திருந்தவர்கள், தங்கள் தங்கள் கையில் இருந்த தானியத்தை விற்கத் தலைப்பட்டார்கள். அவர்கள் நினைத்தார்கள், புதிய அரசாங்கம் வந்துவிடும், அவர்கள் மாறுதல் செய்யப் போகிறார்கள், கண்ட்ரோலை எடுத்துவிடுவார்கள் என்கிற நம்பிக்கையோடு பதுக்கிவைத்திருந்த தானியத்தை விற்றதன் காரணமாக விலை குறையத் தொடங்கியது. ஆனால், முதல் அமைச்சர் வெளியிட்ட முதல் அறிக்கையிலேயே, காங்கிரஸ் அரசாங்கத்தின் உணவுக் கொள்கையையே தாங்களும் பின்பற்றப் போவதாக அறிவித்தவுடன், முன்பு இருந்த விலையை விட அதிகமாகி விட்டது. ரேஷன் என்று கொண்டு வந்தால், அது ராச்சியம் முழுவதற்கும் ஸ்டாச்சுட்டரி ரேஷனைக் கொண்டுவரவேண்டும். விவசாயிகள், கிராம மக்கள் அவ்வளவு பேர்களுக்கும் கார்டுகள் கொடுத்து ரேஷன் கொண்டு வரவேண்டும். சென்னை நகரத்தில் மட்டும் ரேஷன் என்று வைத்து விட்டு, கிராமங்களில் மற்ற இடங்களில் அரிசி கிடைக்காத நிலையை உண்டாக்குவது சரியாகாது. ஒன்று உபரி தானியத்தை லெவி முறையில் வசூல் செய்து எல்லோருக்கும் விநியோகம் செய்ய வேண்டும் அல்லது ஜில்லாவிற்கு ஜில்லா இருக்கும் கண்ட்ரோலை எடுக்கவேண்டும். அப்படி இல்லாமல், இரண்டுங்கெட்டான் நிலையில் வைப்பது கேடுவிளைவிக்கும் என்பதை உணரவேண்டும். ஒரு பக்கத்தில் ரேஷன், கண்ட்ரோல், மறு பக்கத்தில் ஒன்றும் இல்லை என்பதால், மக்கள் தொல்லைக்கு ஆளாகிறார்கள். தஞ்சையில் ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு விற்கின்ற அதே நேரத்தில், ஈரோட்டில் ரூ-2க்கு விற்கின்ற நிலைக்கு நாட்டை ஆளாக்காதீர்கள்.

கவர்னர் பெருமான் உரையில் சென்டர்-ஸ்டேட் ரிலேஷன்ஷிப் என்பது பற்றிக் காணப்படுகிறது. ராச்சியங்களின் உரிமைகள் பற்றிச் சொல்லப்படுகிறது. அதைப் பொறுத்தமட்டில் கவர்னர்



1967, மார்ச் 18] [திரு. செ. பாலசுப்ரமணியம்]

பேருரையில் அது ஏன் சேர்க்கப்பட்டது என்று தெரியவில்லை. அரசியல் சட்டப்படி, இந்திய சர்க்காருடைய, மத்திய சர்க்காருடைய அதிகாரங்கள் சம்மந்தப்பட்டவை சில, இரண்டாவது ராச்சியங்களுடைய அதிகாரங்கள் சம்பந்தப்பட்டவை. அது ஸ்டேட் லிஸ்டில் இருப்பவை. இவை இரண்டும் போக மூன்றாவது, கங்கரண்ட் லிஸ்ட் என்பதில் இருக்கும் காரியங்களைப் பொறுத்தவரையில், இந்திய அரசும், ராச்சிய சர்க்காரும் சேர்ந்து ஒன்றாகச் செயல்படவேண்டும். மத்திய சர்க்காரும் காங்கிரஸ், மாநில சர்க்காரும் காங்கிரஸ் என்கிற அடிப்படையில் இருந்தபோது, அப்படி ஏகபோகமாக இருந்த போது, ராச்சிய சர்க்கார் அதிகாரங்களை மத்திய சர்க்காரே எடுத்துக் கொண்டு விட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் பிளானிங் கமிஷன் என்று வைத்துக்கொண்டு, இங்கே காவிரியில் பாலம் கட்ட வேண்டும் என்றால் கூட, அவர்களுக்குக் காவடி எடுக்கும் நிலையை உண்டாக்கிவிட்டிருந்தார்கள். ஆகவே, இந்த நிலையில் ராச்சிய சர்க்கார்களுக்கு அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்பட்ட ஸ்டேட் லிஸ்ட் சம்பந்தப்பட்டவரை, துணிவோடு செயலாற்றினால் போதும், கங்கரண்ட் லிஸ்ட் பொறுத்தவரையில் இரண்டு பேரும் சேர்ந்து செயல்படுவதைப்பற்றி பின்னால் பார்த்துக்கொள்ளலாம். முன்பு காங்கிரஸ் அரசாங்கம் தன் அதிகாரங்களை காங்கிரஸ் மத்திய அரசுக்கு விட்டுக் கொடுத்து விட்டது.

நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். தேர்தலுக்கு முன்பு இருந்த நிலைமாறி, தேர்தலுக்குப் பிறகு, பல்வேறு கட்சிகளுடைய அரசாங்கங்கள் ராச்சியங்களில் ஏற்பட்டிருக்கின்றன. பீகார், வங்காளம், ஒரிசா, தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் மாற்றுக் கட்சிகளின் அரசாங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய கனம் முதல் அமைச்சர் இந்த மாநிலங்களின் முதல் அமைச்சர்களைக் கூட்டி, மாநிலங்களின் அதிகாரங்களைப் பெறுவதற்கு என்னென்ன வழிவகைகள் என்பதை ஆராய, வழி காட்டினால் நன்றாக இருக்கும், அதனால் உருப்படியான பலனும் ஏற்படும்.

ஒன்றை மட்டும் மீண்டும் மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி ஒரு மாபெரும் ஸ்தாபனம்; மகாத்மா காந்தியால் கட்டி வளர்க்கப்பட்டது. இந்தத் தேசத்திற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த பெரிய ஸ்தாபனம். அப்படிப்பட்ட கட்சியே மக்களால் கைவிடப்பட்டிருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அதற்கான காரணம் என்ன என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள், மக்கள் பிரச்சினைகளைச் சிந்தித்துப்பார்க்காமல், சமூகத்தில் சிறுபான்மை பிற
யோரான ஒரு 5 சத விகிதம் மக்கள், ஐரோப்பிய நாகரிகத்தில் பகல் 1-00.
திளைத்து நிற்க, அதற்கான திட்டங்களைப் போட்டு, அவற்றைச் செயல்படுத்திவந்ததோடு, மக்களுடைய பிரச்சினைகளையும் கவனியாமல் இருந்து விட்டார்கள். ஆகவே அந்தத் தவறை நீங்களும் செய்யாமல், இன்றைய தினம் நாட்டின் அடித்தளத்தில்

[திரு. செ. பாலசுப்ரமணியம்] [1967, மார்ச் 18

இருக்கிற அத்தனை தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ்க்கை துறையில், பொருளாதாரத் துறையில் மேம்பாடு காண்பதற்கு நல்லபல திட்டங்களைப் போட்டு இந்தியாவில் உள்ள மற்றப் பகுதிகளுக்கு வழிகாட்டியாகத் திகழுங்கள். உங்களுடைய இத்தகைய சிரிய திட்டங்களுக்கு எங்கள் கட்சியின் முழு ஆதரவையும் தருவோம் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மு.ச. சிவசாமி: சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையில் நடந்து முடிந்த தேர்தல் மிக அமைதியாக நடைபெற்றது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதைக் கண்டு எனக்கு முன்னால்பேசிய காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தல் அமைதியாக நடைபெற்ற காரணத்தினால் தான் முன்பு எதிர்க் கட்சியாக இருந்தவர்கள் இன்றைக்கு மெஜாரிட்டி கட்சியாக ஆட்சிப் பொறுப்பில் வரமுடிந்தது என்று கூறினார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்பதற்கில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் காங்கிரஸ் வேட்பாளருக்கு வேலை செய்த தொண்டர்கள் என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட தொண்டர்களை அடித்து, வெட்டி, ஜீப் காரில் கொண்டுபோய் ஒரு காட்டில் போட்டிருக்கிறார்கள். அங்கே இருந்த போலீஸ்காரர்களும்--அடிப்பட்டவர்கள், வெட்டுப்பட்டவர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பாக இல்லாமல், அடித்தவர்கள் மீதும், வெட்டியவர்கள் மீதும் கேஸ் போடாமல் அடிபட்டவர்கள் வெட்டுப்பட்டவர்கள் மீதும் கேஸ் போட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகள் தொடர்ந்து இன்னமும் நடைபெற்று வருகிறது. ஆகவே பாரபட்சமற்ற காங்கிரஸ் நிர்வாகத்தினால் தான் தி.மு.க. வெற்றிபெற்றது என்று சொல்வதற்கில்லை. எங்களது வெற்றிக்கு முக்கிய காரணம் ஆளும் கட்சியினரிடம் ஏற்பட்ட வெறுப்புதான். அவர்களுடைய ஆட்சியில் பற்பல கஷ்டங்களுக்கு உள்ளான மக்கள் ஆட்சி மாற்றத்தினாலாவது நல்ல பலன் கிடைக்காதா என்று எண்ணிய காரணத்தினால்தான் எதிர்க்கட்சியாக இருந்த நாங்கள் ஆளும் கட்சியாக மாறமுடிந்தது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் திரு. மாதவன் பிள்ளை அவர்கள், கவர்னர் பதவியே கூடாது என்ற கொள்கை உடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்றைய தினம் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து, பாராட்ட முன் வந்திருக்கிறார்கள் என்று கூறினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை இன்றையதினம் வரை கவர்னர் பதவியையே விரும்பவில்லை. ஆனால், அரசியல் அமைப்புக்கு உட்பட்டு நாம் பார்லிமெண்டரி முறையில் ஆட்சி செலுத்த ஒப்புக்கொண்டிருக்கிற போது அரசியல் அமைப்புச் சட்டப்பிரகாரம்தான் செயல்படக் கடமைப்பட்டிருக்கிறோம். நாங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தை மத்திய சர்க்காரில் திருத்தச் செய்து, கவர்னர் பதவியே வேண்டாம் என்று முடிவு செய்கின்ற வரையில் நாம் கவர்னர் உரைக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1967, மார்ச் 18] [திரு. மு. ச. சிவசாமி]

கவர்னர் பெருமான் தம் உரையின் பெரும்பகுதியில் விவசாயப் பிரச்சினைகளைப் பற்றியே கூறியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சார்ந்து இருக்கிற ஆளும் கட்சியின் கவனத்திற்கு ஒரு சில பிரச்சினைகளைக் கொண்டுவர விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் இருக்கிற மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி ஆறுகளின் நீரில் இதுவரை நாம் ஏறக்குறைய பதினைந்து சதவிகிதம்தான் உபயோகப்படுத்திக் கொண்டு வருகிறோம். எஞ்சிய பகுதி தண்ணீரையும் உபயோகப்படுத்திக்கொள்ள—இன்னும் பல அணைக்கட்டு, கால்வாய்த் திட்டங்களைப்போட நாம் முன்வந்தாக வேண்டும். இன்றையதினம் நம்முடைய மாநிலத்தில் ஒரு கோடி, அறுபது லட்சம் ஏக்கராதான் நஞ்சை, புஞ்சை நிலங்களாக விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயம் செய்வதற்குரிய —ஏறக்குறைய 20 லட்சம் ஏக்கரா நிலங்கள் விவசாயம் செய்யப்படாமல் சர்க்கார் புறம்போக்கு நிலங்களாக இருக்கின்றன. இப்படி புறம்போக்கு நிலங்களாக இருக்கக்கூடியவற்றை நிலமில்லாத விவசாயிகளிடத்தில் கொடுத்து—ஐந்தாண்டுகள் சாகுபடி செய்ய வேண்டும், அதற்குப் பிறகு எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் அவை அவர்களுக்கே உரிமையாக்கப்படும் என்கிற முறையைக் கொண்டுவந்தால் இந்த 20 லட்சம் ஏக்கரா மூலமாக இன்னும் அதிக உணவுப் பொருளை எதிர்பார்க்கலாம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நான் அங்கம் வகிக்கின்ற தூத்துக்குடி தொகுதியில் தண்ணீர் இல்லாமல் இப்போது குளங்கள் வறண்டு கிடக்கின்றன. நான் இங்கே வந்த பிறகு பல தந்திகள் வந்தன. அவற்றை மராமத்து இலாக்கா அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுபோய், அவர் தொலைபேசி மூலமாக அங்குள்ள என்ஜினியர்களுக்குச் சொல்லி இப்போது தண்ணீர் விடுகிறார்கள் என்று நினைக்கிறேன். இப்படிச் சாதாரண நடைமுறையிலே அதிகாரிகள் எத்தனை முறை சென்று பார்த்தாலும் கேட்காது, பின்னர் அமைச்சரிடம் வந்து உத்தரவு பெறுவது, பின்னர் தண்ணீர் விடுவது என்றால் விவசாய உற்பத்தியை எப்படிப் பெருக்க முடியும்? திட்டவட்டமான முறைகளை ஏற்படுத்தி உற்பத்தியைப் பொறுத்தவரையில் அதைப் பாதிக்கும் வகையில் யார் நடந்து கொண்டாலும் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயிரத்து இருநூறு ஏக்கரா நஞ்சை நிலம் பொதியும், பயிருமாக அங்கே இருக்கிறது. எட்டு நாட்களாக குளங்களில் தண்ணீர் இல்லை என்றால், மாவட்ட கலெக்டரிடம் விவரத்தைக் கூறியும் பதினைந்தாம் தேதி வரையில் தண்ணீர் விடவில்லை என்றால் உணவுப் பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். குளத்திற்குத் தண்ணீர் இல்லை என்று கூறியவுடனேயே தண்ணீர் அனுப்புவதற்குரிய ஏற்பாட்டைச் செய்தால்தான் நாம் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

என்னுடைய தொகுதி கடற்கரைப் பகுதி. அது பயிர் செய்ய முடியாத மணற்பாங்கான பிரதேசம். வெளியில் இருந்து வரக்கூடிய அரிசியைக் கொண்டுதான் அந்தப் பகுதி மக்கள் வாழ்ந்தாக

[திரு. மு. ச. சிவசாமி] [1967, மார்ச் 18

வேண்டும். கடுமையான நடவடிக்கை மூலம் இப்போது வெளியில் இருந்து வந்த அரிசி தடைப்படுத்தப்பட்டுவிட்டது. டெல் பகுதியிலும் விளைச்சல் இல்லை. முன்பு ஒரு படி $1\frac{1}{2}$ ரூபாயாக இருந்தது இப்போது $2\frac{1}{2}$ ரூபாயாக ஆகிவிட்டது. அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை உணவு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு உடனடியாக அந்தப் பகுதி மக்களுக்கு அரிசி கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். குறைந்த பட்சம் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசி கொண்டு போகப்படுவதைத் தடுக்காது, நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் அரிசி எந்தப் பகுதியில் இருந்து எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் போகலாம் என்கிற ஏற்பாட்டையாவது செய்தால்தான் தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் இன்றைக்குள்ள அரிசிப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

அடுத்து, விவசாய பாங்கை எடுத்துக் கொண்டால் முன்பு எந்த நேரத்திலும் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று இருந்தது. ஆனால் 1965-ஆம் ஆண்டில் தீவிர விவசாயக் கடன் திட்டத்தின் அடிப்படையில் எல்லா விவசாயிகளும் பயிர்த்தொழில் செய்கின்ற நேரத்தில் மொத்தமாக மனுச் செய்துகொண்டு, கடன் பெற்று, அறுவடைக் காலத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தைச் செய்தார்கள். இதனால் கிராமத்தில் உள்ள விவசாயிகள் அத்தனைபேரும் மனுச் செய்துகொண்டு, அந்த மனுக்களை மொத்தமாகப் பரிசீலனை செய்து கடன் வழங்குவது என்கிறபோது—அறுவடை காலமே வந்துவிடுகிறது. இதனால் விவசாயிகளுக்குக் காலத்தில் பணம் கிடைக்காது—சாகுபடி வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே விவசாயக் கடன் வழங்குவதில் ஏற்படுத்தப்பட்ட புதிய திட்டத்தை உடனே ரத்து செய்ய உத்தரவிடவேண்டும். பழைய முறைப்படியே கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாய பாங்குகளுக்குக் கடன் வழங்குவதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்து வருகிற மத்திய பாங்க் அதிகாரிகள் மீது நடவடிக்கை உடனே எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாய பாங்குகள் இதர ஷெட்யூல் பாங்குகளைப் போல இயங்க உடனடியாகச் சட்டத் திருத்தத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பங்குத் தொகையைச் சீராக்கி, ஸ்டேட் பாங்க் மூலம் கடன்பெற வசதி செய்யவேண்டும். கூட்டுறவு மத்திய பாங்க் மூலமாக கடன் பெறுவதில் 50 சதவிகிதம் விவசாய பாங்குகளிடம் இருக்கும் வகையில் சட்டத்தை அமைக்க வேண்டும். உடனடியாக அதிகாரிகளையும், விவசாய பாங்க் தலைவர்களையும், எம்.எல்.ஏ.க்களையும் கொண்ட கமிட்டி ஏற்படுத்தி இன்றைக்குள்ள சீர்கேடுகளை ஆராய்ந்து செம்மைப்படுத்த ஆவன செய்ய வேண்டும். விவசாய மக்களுக்குத் தங்க நகைகளின் பேரில் கடன் வழங்கவும் வகை செய்ய வேண்டும். கடன் வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்த்து, எளிதான முறை ஏற்பட வேண்டும். நம்முடைய தென்னகத்திலே இருக்கிற நூற்பாலைத் தொழிலாளர்கள் பெரிய தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். 'லே ஆப்' என்ற



1967, மார்ச் 18] [திரு. மு. ச. சிவசாமி]

சாக்கை வைத்துக் கொண்டு பெரும்பகுதித் தொழிலாளர்களை வேலையிலிருந்து கழித்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. தூத்துக்குடி ஆர்.வி.மில்ஸ், ஸ்பின்னிங் மில்ஸ் இவற்றை எடுத்துக் கொண்டால் அதிகமான வேலைப் பளுவை தொழிலாளர்களின்மேல் சுமத்தி, தங்களுக்குச் சாதகமான முறையில் அவர்களுக்கு நிறையச் சம்பளம் கொடுக்காமல் மூன்றில் ஒரு பகுதியினரை வேலையிலிருந்து நீக்கிவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

தமிழகத்திலே இராமநாதபுரத்திலும், தூத்துக்குடியிலும்தான் சங்கு குளித்தல் இருக்கிறது. தூத்துக்குடியிலே சங்கு குளிக்கப்படுகிறது. அங்கே வருகின்ற சங்குகளையெல்லாம் சர்க்கார் நேரடியாக ஏலத்திற்கு விடாமல் எடுக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் தனிப்பட்டவர்கள் லட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏலம் எடுத்து சங்கு குளிப்பவர்களுக்குச் சங்கு ஒன்றுக்கு அவர்கள் 75 பைசா கூலி கொடுக்கிறார்கள். ஆனால் முந்தைய சர்க்கார் தூத்துக்குடியில் சங்கு குளிக்கிறவர்களுக்கு, ஒரு சங்குக்கு ஏறக்குறைய 42 பைசாதான் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் வருஷத்தில் மூன்று மாதம்கூட இருக்காது. அப்படிப்பட்ட தொழில் 50, 60 அடி ஆழத்திற்குத் தண்ணீரில் மூழ்கி தங்களுடைய உயிரைப் பணயம் வைத்துத் தொழிலைச் செய்கிறார்கள். அவர்களுக்குத் தனியார் கொடுப்பதைப் போல 75 பைசா கொடுத்தால்தான் அவர்களுடைய வாழ்க்கை வளம்பெறும், அதற்கான புதிய திட்டத்தை வருகின்ற வரவு செலவுத் திட்டத்திலே மீன்வள இலாகா அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்ததாக குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஒன்று இருக்கிறது. முந்தைய அரசாங்கத்தார் கங்காணி முறை (கேன்வாசிங் சிஸ்டம்) வைத்திருக்கிறார்கள். தெருவில் போய்க் கொண்டிருக்கின்றவர்களையெல்லாம் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்விட்டால் 10 ரூபாய், 20 ரூபாய் நன்கொடை கொடுக்கிறார்கள். நான் பார்த்திருக்கிறேன். என் வீட்டிற்கு எதிர் வீட்டில் உள்ள 75 வயது காளியப்ப நாடார் என்பவரை சாத்தூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் இரண்டாவது முறையாக கங்காணி முறையின் அடிப்படையில் ஆப்பரேஷன் செய்திருக்கிறார்கள், செப்டிக் ஆகி அவர் இறந்து விட்டார். அதே மாதிரி திருச்செந்தூரில் உள்ள நாலுமாவடி என்ற ஊரில் 16 வயது நிரம்பாத பையனை சாத்தூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் குடும்பக் கட்டுப்பாடு ஆப்பரேஷன் செய்யப்பட்டது. இப்படியெல்லாம் முந்தைய அரசாங்கம் செய்த தவறுகளை உடனடியாகக் கவனம் செலுத்தி, அப்படிப்பட்ட கொடுமைகள் நிகழாவண்ணம் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் உணவுப் பிரச்னையைப் பற்றியும் ஐந்தாண்டுத் திட்டப் பிரச்னைபற்றியும் உற்பத்திப் பிரச்னைபற்றியும் கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய அமைச்சரவை நிச்சயமாக நிறைவேற்றித் தருவார்கள். காங்கிரஸ் உறுப்பினர்கள் 3 படி அரிசி எங்கே எங்கே என்று கேட்கிறார்கள்.

[திரு. மு. ச. சிவசாமி] [1967, மார்ச் 18

ஆளும் கட்சியைப்பற்றி விமர்சிக்கின்ற நேரத்தில் தேர்தல் காலத்தில் அந்தக் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையை வைத்துக் கொண்டுதான் பேசவேண்டுமே தவிர யாரோ எங்கேயோ பேசியதை வைத்துச் சொல்ல முடியாது. இருபது ஆண்டுகளில் மூன்று படியாக இருந்த அரிசியை முக்கால் படியாக ஆக்கியவர்கள் இப்படிக் கேட்டால் என்ன பொருள்? மூன்று படி அரிசி கொடுப்போம் என்பது குறிக்கோளே தவிர, அது தேர்தல் அறிக்கையல்ல. தேர்தல் அறிக்கையில் விலைவாசியைக் குறைப்போம் என்று கூறியிருக்கிறோம். இருபது ஆண்டுகளாக ஆக்கப் பொறுத்தீர்கள், இரண்டு மாதங்கள் ஆறப் பொறுத்திருங்கள். அதற்குப்பின்னால் விலைவாசி உயர்ந்திருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* திரு. பி. ஜயராஜ்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் மீது எனது கட்சியினுடைய கொள்கைகளையும், திருத்தங்களின் மூலமாக இரண்டொரு கருத்துக்களையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையில் அவர்கள் ஆளுங் கட்சியினுடைய கொள்கைகளை பிரதிபலிக்கக்கூடிய முறையில்தான் உரை நிகழ்த்தினார்கள். அந்த உரையில் ஏழை எளியவர்கள், பாமர மக்கள் இவர்களுடைய உரிமைகள் எல்லாம் இடம் பெறவில்லை. கைத்தொழில், கல்வி போன்ற முக்கிய அம்சங்களும் அவர்களுடைய உரையில் இடம்பெறவில்லை. காரணம் என்ன? இந்த நாட்டு மக்களுக்குப் புதிய அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்று எதிர்பார்க்கிற நேரத்தில் ஏழை மக்களுடைய உரிமைகள் இடம் பெறவில்லை. இருபது ஆண்டுக் காலமாக இருக்கின்ற காங்கிரஸ் ஆட்சியை ஒரேயடியாக மாற்றியமைக்க வேண்டுமென்றுதான் மக்கள் வாக்களித்துவிட்டார்கள் என்று உற்சாகமாகச் சொன்னார்கள். இந்த நாட்டில் ஜனநாயகம் தழைக்க, என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டுமென்று மக்கள் நம்பினார்களோ அதையெல்லாம் செய்தார்கள். இருபது ஆண்டுகளில் மாற்றம் ஏற்படவில்லையா? கல்வி, மின்சாரம் போன்ற துறைகளில் எல்லாம் வளர்ச்சி ஏற்படவில்லையா? அப்படி வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாகத்தான் இதிலேயும் ஒரு புதியதை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் மக்களுக்கு தோன்றியது. புதியதொரு மாறுதலைச் செய்ய வேண்டும் என்றுதான் செய்தார்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்றப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். சாத்தூர் உறுப்பினர் அவர்கள் இரண்டு மாதங்கள் பொறுக்க வேண்டுமென்று சொன்னார்கள், நாங்கள் 6 மாதம் தவணை கொடுத்திருக்கிறோம். நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுகிறார்களா என்று. பார்க்க வேண்டும். நாங்களும் மக்களுக்கு ஆய்ந்து ஓய்ந்துதான் நாங்கள் சொன்னதை நிறைவேற்றினோம். அதேமாதிரி நீங்களும் ஆய்ந்து ஓய்ந்து கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும். அதைவிட்டுவிட்டு யாரோ எங்கோயோ சொன்னார்கள். கட்சியின் தேர்தல்



1967, மார்ச் 18] [திரு. பி. ஜயராஜ்]

பிரகடனத்தில் இருக்கிறதா என்றெல்லாம் கேட்பது முறையா என்று பொறுப்புள்ள அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம் என்று சொன்னார்களா இல்லையா? அதை நிறைவேற்ற வேண்டும். கொடுக்க முடியுமா முடியாதா என்பது வேறு விஷயம். நடைமுறையிலே எந்த எந்தத் திட்டங்களைத் தீட்டி பொதுமக்களுக்கு மூன்று படி, ஒரு படி என்றார்களே, அதை நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் உணவுப் பிரச்னை முக்கியமானது. பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பார்கள். அதைப்போல பசி வருகின்றபொழுது, ஏதாவது இடையூறு வருகின்றபொழுதுதான் மாற்ற வேண்டுமென்ற எண்ணம் வருகிறது. கொள்கை ரீதியாக நீங்கள் பல திட்டங்கள் செய்வீர்கள் என்ற முறையில் மக்கள் விரும்பவில்லை. அரிசி கிடைக்கவில்லை, மூன்று படி தருகிறேன் என்று சொல்கிறார்கள், நிறைவேற்றுவார்கள் என்ற எண்ணத்தில்தான் விரும்பியிருக்கிறார்கள். இதை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். நாங்களா சொன்னோம் என்று இப்பொழுது சொன்னால் அது முறையாகாது. கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதில் மத்திய சர்க்கார்தான் ஈடுபடவேண்டும். மூன்று படி, ஒரு படி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட முடியாது. கொடுக்க முடியும் என்று சொல்லியது அமைச்சர்களுக்கும், அந்தக் கட்சியில் உள்ளவர்களுக்கும் தெரியும். அவர்களும் உணவுப் பிரச்னையில் மத்திய அரசாங்கத்தை அணுக வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

நிலவரியை அறவே எடுத்து விடுவதாக காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தால் முறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அப்போதே 25 சதவிகித உபரி வரியை நீக்கிவிடுவதாகவும் சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நில வரியை நீக்கி விடுவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குத்தகைதாரர் சட்டத்தில் இருக்கும் பொத்தல்களை நீக்கும் வகையில் மாற்றுத் திட்டத்தைக் கொடுக்கப் போவதாகவும் கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் காணப்படுகிறது. தஞ்சை ஜில்லாவின் நிலப் பரப்பின் பெரும்பகுதி மடாலயங்களுக்கும், தேவாலயங்களுக்கும் சொந்தமாக இருக்கின்றன. மடாலயங்கள், தேவாலயங்கள் துறை பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் அமைச்சர் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அங்கு விவசாயிகளிடமிருந்து குத்தகை என்ற முறையில் எழுதி வாங்கிக் கொண்டு இரண்டு ஆண்டு காலமாக மழை பெய்யாத காரணத்தால் விளைச்சல், உற்பத்தி அதிகம் இல்லாத நிலையில் குத்தகைக்கு நெல் கொடுக்கவில்லையென்று கூறி அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்த விதமான வெளியேற்றமும் கூடாது என்பதற்காக ஒரு ஆர்டினன்ஸ் போட்டிருக்

[திரு. பி. ஜயராஜ்] [1967, மார்ச் 18

கிறார்கள். இந்த நிலையைக் கல்வியமைச்சர் அவர்கள் அறிவார்கள். முதலமைச்சர் அவர்களுடைய சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் என்ற நாடகங்களை நான் பார்த்திருக்கிறேன். அதிலே இந்தக் குறைபாடுகளைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வெறும் நாடகமாக இல்லாமல் நல்ல பலன் தரத்தக்க அளவுக்கு மக்களுக்கு வாக்களித்தது போல் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய அமைச்சர்களில் பெரும்பகுதியின் தஞ்சை மாவட்டத்தின் கிராமப் புறங்களைப் பற்றி அறியாதவர்களாக இருக்க முடியாது. ஏழைத் தொழிலாள மக்களுக்கு அன்றாடப் பிரச்சினைகளிலேயே பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நீக்குவதற்கு வழி செய்ய வேண்டும். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை விவசாயத் தொழிலாள மக்களுடைய குத்தகைதாரர் சட்டத்தை ஆய்ந்து பார்த்து பரிசீலனை செய்து திருத்தி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று கூறி, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்கள் நிலப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்த தொடர்பில் என்னுடைய இரண்டு நாடகங்களைப் பார்த்ததாகச் சொன்னார்கள். அந்த இரண்டு நாடகங்களிலும் நிலப் பிரச்சினை இல்லை. நிலப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிற நாடகம் 'சந்திரோதயம்' என்னும் நாடகம். அதனை நண்பர் காண்பதற்கேற்ற முறையில் மறுபடியும் நடிப்பதற்கில்லையே என்று வருந்தப்படுகிறேன். அவர்கள் பார்க்காத நாடகத்தைப் பற்றி இவ்வளவு அழகாக விமர்சனம் செய்ததற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

1. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

**(இ) கவர்னர் பேருரைக்கான நன்றியறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்தல்**

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இன்றைய கூட்டம் முடிவடைவதற்கு முன்பு சில அறிவிப்புகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதாக இருக்கிறது.

கவர்னர் அவர்களின் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் ( Amendments ) கொடுக்க விரும்புகிறவர்கள், அத்திருத்தங்களைச் சட்டப் பேரவைச் செயலாளரிடம் 20—3—1967 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்குள் கொடுக்க வேண்டும்.

**(உ) அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்**

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேறிய



1967 மார்ச் 18] [பேரவைத் தலைவர்]

தீர்மானத்திற்கிணங்க, இப் பேரவையின் அலுவல்கள் இப்போது நான் அறிவிக்கின்ற நிகழ்ச்சி வரிசைப்படி நடைபெறும் :

| | |
|---|---|
| 20—3—1967 திங்கட்கிழமை | (1) 1967-68-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையின் முன் வைப்பார்கள். (2) கவர்னர் பேருரைமீது விவாதம். |
| 21—3—1967 செவ்வாய்க் கிழமை | (1) 1966-67-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையை பேரவை முன் வைத்தல். (2) 1967-68-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மீது விவாதம். |
| 22—3—1967 புதன் கிழமை | விடுமுறை நாள். |
| 23—3—1967 வியாழக்கிழமை | (1) செலவினங்கள் கணக்கின்மீது வாக்கெடுப்பு. (2) நிதி ஒதுக்கு மசோதாவை அறிமுகம் செய்தல். |
| 24—3—1967 வெள்ளிக் கிழமை | விடுமுறை நாள். |
| 25—3—1967 சனிக் கிழமை | (1) 1966-67-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். (2) நிதி ஒதுக்கு மசோதாவை அறிமுகம் செய்தல். |
| 26—3—1967 ஞாயிற்றுக் கிழமை | விடுமுறை நாள். |
| 27—3—1967 திங்கட் கிழமை | (1) நிதி ஒதுக்கு மசோதாக்கள்— விவாதமும் நிறைவேற்றுதலும். (2) கவர்னர் பேருரை மீது விவாதம். |
| 28—3—1967 செவ்வாய்க்கிழமை<br>29—3—1967 புதன் கிழமை | கவர்னர் பேருரைமீது விவாதம் |

ஒவ்வொரு நாளும் சட்டப் பேரவை காலை 9 மணியிலிருந்து மாலை 1-30 மணி வரை நடைபெறும்.

இந்த நிகழ்ச்சி நிரல் அச்சடிக்கப்பட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படும்.

[பேரவைத் தலைவர்] [1967, மார்ச் 18

இப்போது இன்றைய கூட்டம் முடிவடைந்து மீண்டும் 20—3—1967 காலை 9 மணிக்கு பேரவை கூடும். வணக்கம்.

பிற் பகல் 1–28 பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

**A. Statutory Rules and Orders.**

*Nil*

**B. Reports, Notifications and other Papers.**

* 6. Governor's Address to the Members of the Legislature on 17th March 1967 (English and Tamil).

* Circulated to Members on 17-3-1967.



### APPENDIX I.

[*Vide* item 2 on page 48]

### Address by the Governor of Madras.

Hon'ble Members of the Legislature,

It is my pleasant privilege to welcome you all to this Joint Session of the new Legislature. To those Members of the old Legislature who have been re-elected. I offer my felicitations. To many others who have been newly elected, I specially extend my best wishes for active and fruitful service in the cause of the people of the State.

2. The Fourth General Election in our country on which the eyes of the entire world had been focussed is just over. I consider it specially significant that this general election should have gone off peacefully and without any untoward incident, particularly in our State. The keen interest which the people have evinced in exercising their franchise as evidenced by the heavy figures of voting, affords striking proof that democracy has struck deep roots in our country and that the people are now fully conscious that they are arbiters of their own destinies. The peaceful manner in which the people have voted a new Government to power and the smooth transfer of responsibility for conduct of affairs of the State from one political party to another, bear eloquent testimony to the political maturity of our people. The large body of public servants of all ranks who were connected with the conduct of elections in some capacity or other have, by and large, conducted themselves with a commendable sense of detachment and impartiality. My Government fully appreciate the contribution which a contended and politically neutral body of civil servants can make to the promotion of the welfare of the people of the State and will do all that lies in their power to uphold and cherish the traditions which have been evolved, while endeavouring at the same time to introduce those essential reforms which are needed to make the administrative machinery a more potent instrument for the achievement of the ends of a welfare State.

3. The Government have assumed office on the basis of policies and programmes calculated to remove the many genuine grievances of the people. These policies will now have to be worked out in detail with the help of experts in different departments of Government and got ready for implementation. The Government will obviously take a little time to take stock of the present situation and hammer out concrete programmes for fulfilling the hopes which have been roused. On the general problems which our country faces along with other under developed countries such as inadequate production, low level of savings and investment and glaring inequalities of wealth and income have been superimposed the special difficulties caused by the admittedly disappointing performance during the Third Plan period both on agricultural and industrial fronts in spite of massive outlays in financial terms. Unprecedented droughts for two consecutive years have aggravated

the situation. The shortfall in attainment of physical targets under vital sectors has accentuated the rise in prices, causing considerable hardship to the poorer sections of the society and people with fixed incomes. The Government are aware that within the framework of a Federal Constitution, in which the State Government have to function, the responsibility for the overall direction of economic policy rests with the Central Government and that, therefore, the State Government acting in isolation cannot make any measurable impact on the problem of rising prices. While it will be the endeavour of the State Government to keep in close touch with the Central Government and assist in the evolution and implementation of policies which are calculated to increase production, improve distribution and generally relieve the persistent pressure on prices, they also feel that the time has come when they should be clothed with more powers so as to enable them to translate the aspirations of the people into actualities. There is today a growing urge for federalism in practice.

4. My Government are also aware that in many fields such as food production and distribution active co-operation of the State Governments in the region termed as South Zone will prove fruitful. It would also explore in consultation with other States in the region possibilities of exploiting the natural resources of the region for the common good. As a first step towards promoting inter-State co-operation in such matters, my Government will take the initiative in activising the Zonal Councils which have been set up under the States' Reorganisation Act.

5. While, for the solution of the many problems which face our economy, patient preparatory work is needed, Government are aware that the solution of the food problem can brook no delay. Seasonal conditions have been generally good in the current year and it is expected that the actual production in 1966–67 would have registered considerable improvement over the preceding year and would at least have reached the level recorded in 1964–65, which was the best year of the Third Plan period. But we are functioning as part of a national economy which is facing serious shortfall in production of cereals due to widespread drought in many parts of the country. The pressures on supplies and consequent rise in prices are therefore bound to be communicated with varying degrees of intensity to the different parts of the country. Even with normal production, defective distribution can lead to serious difficulties. We have to evolve a food policy which will provide adequate incentives to the producers and assure supplies of wholesome rice to the poorer sections of the society at fair prices. But meanwhile, with the long-term crop already under harvest coming up for sale, the Government have recognised the urgent need for keeping up procurement of marketable surpluses and arrange for their orderly distribution in areas in respect of which they have assumed rationing commitments. The Government are, therefore, directing the district executive staff to proceed with procurement on the lines already chalked out, while actively exploring the desirability and feasibility of fresh lines of approach. The immediate objective is



that Government should have in their possession adequate quantities of foodgrains to see them through the lean months which lie ahead of us before another good monsoon and improved agricultural production programmes have their full impact in terms of increased production all round. My Government are fully aware that procurement at controlled prices does involve a measure of sacrifice particularly for the small farmers. Government would take steps to see that the bigger landholders do bear their due share of the burden involved in delivering the marketable surplus to the Governmental agency commensurate with their capacity for bearing such a burden. People who have a surplus have an obligation to the society. The Government will endeavour to instil this sense of social obligation so that the rich look upon their wealth as giving them an opportunity for serving the society and not indulge in ostentatious living. The Government will take every care to see that there is no discrimination in implementing the procurement programme and that the hardship to the smaller producer in particular is minimised to the utmost. The Government are also confident that by keeping up essential supplies to the vulnerable sections of the society such as industrial workers, landless agricultural labourers and people with fixed incomes, they can contain the rise in prices and in due course, bring about a significant reduction in costs all round which will in turn help to provide the agriculturists essential inputs at fair prices. We have to break the vicious spiral of rising prices and rising costs at some point and it is this Government's firm belief that a reduction in prices of foodgrains through increased production, improved distribution and other means can make a significant contribution to relieving the problem of rising prices, which has been plaguing the Indian economy in the last ten years. Here again, the problem of Central-State relationship assumes a new significance. Placed as they are today, the States with their limited resources find it extremely difficult to meet the needs of the people. Taking note of the widespread discontent among the people, the Centre should come forward in a big way to assist the States in implementing their policy of holding the prices, particularly of foodgrains.

6. The one relieving feature of the difficulties which we are facing on the food front is that they have helped to focus the attention of the administration and the people on the over-riding importance of augmenting agricultural production. There is widespread recognition that a greater emphasis on agricultural production in our earlier Plans would have helped to avert the serious situation we are facing today. Prudence demands that we should draw on our experience in the recent past and take steps now at least to bring about a perceptible improvement in agricultural production through concentration on quick-yielding schemes. The Government recognise that propagation of improved seeds, extension of facilities for irrigation and larger supplies of fertilisers in right quantities and in right time, hold the key to increased production. In this three-pronged programme, the State Government can to some extent on their own tackle successfully the problems relating to multiplication and distribution of improved seeds, including the

hight-yielding strains such as ADT-27 and CO-25. It also lies in their power to promote energetic measures for extension of facilities for irrigation through minor irrigation and lift irrigation programmes. Even in the interim Plan for 1967-68, which will be shortly coming up for consideration before the Legislature, the State Government have endeavoured to provide reasonably adequate resources for maintaining the tempo of these programmes. But improved seeds and irrigation facilities can produce the best results only if we can simultaneously also take steps to assure the farmers fertilisers to the full extent required. It is in this respect that we are almost wholly dependent on the Central Government. This Government cannot help pointing out that the Central Government's performance in this vital sphere has been disappointing and has caused considerable discontent among the farmers. Supplies of fertilisers even in the current year have been inadequate and halting with the result that against our indent for allotment of 1·35 lakhs tonnes of nitrogen, we have received an allotment of only a little over 86,000 tonnes. In respect of phosphatic fertilisers too, against our target of 60,700 tonnes the supplies received aggregate only to 27,000 tonnes. The initial conservatism of farmers in regard to use of fertilisers has been completely overcome. The farmer is keen to-day to adopt all modern and scientific methods of agriculture and it is for the administration to respond by arranging for all essential inputs. But our programmes such as those relating to high yielding varieties will be of no avail, if timely and adequate supplies of fertilisers are not forthcoming. If such supplies are assured, the State Government would on their part take effective steps to investigate and remove all defects in the distribution of fertilisers to the farmers and thus redress one of their long-standing grievances.

7. The State Government will, therefore, place prominently before the Central Government, the importance of production of fertilisers within the country and press them to make such essential adjustments as may be necessary in the fourth Plan under finalisation, in order to accord higher priority to production of fertilisers. The production of fertilisers in the country will involve a time-lag and in the meanwhile it is necessary to arrange for larger imports of fertilisers which should be looked upon as maintenance imports vital for realising the full production potential of our farmers.

8. While recognising the importance of supplies of essential inputs for modern and scientific agriculture, we should also not overlook the importance of the human factor. The farmers particularly those with small holdings should have adequate incentives for increased production. It is in this context that the policy of my Government in regard to land revenue assumes special significance. In response to pressure of public opinion as voiced in the legislature and outside, the surcharge on land revenue has already been abolished. This is not enough. The present Government feel that there should be a phased programme for relieving the small landholders from the rigours of land revenue. They will take concrete decisions in this regard in time for the next fasli.



9. Our programmes for augmenting agricultural production cannot succeed fully unless we pay attention also to the problems of cultivating tenants. The Government will undertake a review of existing legislation relating to tenancy so as to plug the loopholes and ensure fixity of tenure to cultivating tenants in actual practice.

10. Increased production also calls for streamlining of the present arrangements for provision of credit to the farmers. While the Government recognise that co-operatives are the best agency for canalising credit to the farmers, they also realise that there is considerable scope for improvement in the working of the co-operatives at all levels. In arranging for larger flow of funds through the co-operatives to meet the requirements of the farmers, we should also take care to ensure that the funds are properly utilised and reach the most deserving people. The small farmer feels, and not without reason, that the co-operative organisation is far removed from him and often subject to political pulls and pressures which work against him. The present state of affairs, which has kept a large number of small farmers out of the benefits of co-operative organisation, should not be allowed to persist. The Government, therefore, propose to set up a Committee to study the working of co-operative organisation in the State and formulate proposals for its reform and reorganisation on sound lines. Through such reforms the Government, in whom the people have expressed overwhelming confidence, will seek to mobilise the enthusiasm and energy of the farmers and secure their purposeful co-operation with the agricultural extension machinery in reaching the targets of agricultural production. The Government would also seek to associate the Panchayats and Panchayat Unions fully in this process of getting the farmers emotionally involved in the developmental programmes.

11. Agricultural production programmes should form the sheet-anchor of the Fourth Plan which is yet to be finalised. Hon'ble Members are aware of the difficulties and uncertainties which have so far held up the finalisation of the Fourth Plan, though the first year of the Fourth Plan is already over. The shape and size of the Fourth Plan will to a large extent depend on the prospects of foreign aid. The first year of the Fourth Plan has been largely devoted to keeping up the execution of programmes carried over from the Third Plan and concentrating on certain essential programmes of agricultural production. Even for the next year, we have at present prepared only an interim plan keeping in view our own limited resources and the Central assistance made available at this stage. The details of the interim plan will be presented to you along with the Interim Budget for 1967-68 at this sitting. The overriding principle on which the interim plan is based is that developmental programmes already under execution should not in any manner suffer. The Planning Commission has accorded tentative approval for the State's Fourth Plan with an outlay of Rs. 564 crores of which the Central assistance will be of the order of Rs. 250 crores. The Government will soon apply its mind to the Plan as tentatively finalised and see whether any, and if so,

what essential readjustments in priorities are necessary. It should be stressed that the rate of growth of the State's economy will not be determined solely by the outlays in the State Plan. Investments of the Central and private sectors in the State will be of even greater significance in promoting economic growth. The State Government would press its case for a fair share of the investments in the Central sector through the implementation of certain major industrial projects such as the Salem Steel Plant whose economic and technical feasibility is beyond all doubt.

12. In the light of the situation emerging after the Fourth General Elections, there is need to emphasise the federal character of our Constitution and restore States to the position originally visualised for them under the Constitution. The States can no longer be passive spectators in the process of formulation and implementation of the Plan but should play a more active part. The Planning Commission would itself seem to have recognised to some extent the need for giving the States a larger role in the Fourth Plan period. It has recently decided on certain proposals for transfer of schemes hitherto treated as Centrally Sponsored to the State sector. But there is need for carrying this process further and assigning a more dominant position to the States in sectors such as agricultural production, education and public health which under the Constitution fall within the ambit of the States. The present role of the Central Ministries concerned with these subjects will have to be reviewed and the tendency, which has become pronounced in recent years, of Central Ministries interfering in fields wholly within the competence of States through financial and other sanctions, kept in check. After all, the resources of the Centre form part of the national pool to be drawn on both by the Centre and States according to the relative priorities of their programmes. The use of Central loans and grants to promote the pet schemes of Central Ministries has only served to distort these priorities and has often led to a wasteful utilisation of the nation's scarce resources.

13. The main business of the Legislature at this sitting will be consideration of the Interim Budget for 1967-68 and the passing of a Vote on Account for covering anticipated expenditure during the first four months of the ensuing financial year. The keynote of the Interim Budget and the Interim Annual Plan embodied in it will be to maintain the tempo of progress in different sectors unimpaired, pending a detailed review of the draft Fourth Plan and the issues of policy connected therewith, by the Government. The results of the review and the final Plan as emerging from such a review will be fully reflected in the regular budget to be presented to the Legislature some time in June 1967.

14. While there may be genuine and honest difference of opinion on certain aspects of the Plan, there has always been and there should continue to be agreement among all enlightened sections of public opinion in the State on the lines on which the State's economy should be strengthened. There can be no difference of opinion whatever on the need for augmenting agricultural production or building up of power potential or expanding essential



social services like education, medical relief and public health. I would plead for the continuance of a spirit of understanding and co-operation among all sections in this House so as to facilitate the progress of the State in these fields. The Legislators who have preceded you have set high standards of debate and discussion and have earned special appreciation by virtue of the dignity and decorum with which they conducted the deliberations even in moments of stress and strain. We have already set an example to the rest of the country in maintaining high democratic traditions and we are called upon now to live up to them and further improve on them. In this House we find today on the treasury bench men who have just secured the popular mandate in abundant measure facing an opposition rich with experience in administration for a long number of years. I am sure that in these circumstances there would emerge purposeful co-operation between members of different political persuasion in the general task of promoting the welfare of the people. Democracy is but an exercise in pooling the abilities and capabilities of contending elements for the common cause. I am sure that through such united efforts you would make a lasting contribution to the progress of the State and assure a better life for our people, a life full of hope and happiness, peace and prosperity.

## இணைப்பு I.

( 48 ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க)

(கவர்னர் பேருரையின் தமிழாக்கம்)

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே,

புதிய சட்ட மன்றத்தின் இக் கூட்டு அவைக்கு உங்கள் அனைவரையும் பூரிப்போடு வரவேற்பதை ஒரு பெரும் பேறாகக் கருதுகின்றேன். மீண்டும் இம் முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பழைய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுக்கள். இந்த மாநில மக்களுக்குப் பயன்படும் வகையில், ஊக்கத்தோடும் ஆக்கத்தோடும் பணியாற்றும் வண்ணம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஏனைய பல உறுப்பினர்களுக்கும் சிறப்பாக எனது நல்வாழ்த்துக்கள் உரியவாகுக.

2. உலகம் முழுமையும் உள்ள எல்லோருடைய கண்களையும் கவர்ந்து நின்ற நம் நாட்டின் நான்காவது பொதுத் தேர்தல் இப்பொழுது முடிவடைந்துள்ளது. இத் தேர்தல் குறிப்பாக நமது மாநிலத்தில், அமைதியாகவும் விரும்பத்தகாத எவ்வித நிகழ்ச்சிகளின்றியும் நடைபெற்றது நாம் சிறப்பாகப் பாராட்ட வேண்டியதொன்றாகும். இத் தேர்தலில் மக்கள் அளித்துள்ள பெரும்பான்மையான வாக்குகள், தங்கள் வாக்குரிமையைச் செலுத்துவதில் அவர்களுக்குள்ள பேரார்வத்தைக் காட்டுவதுடன், நமது நாட்டில் குடியாட்சி வேரூன்றிவிட்டது என்பதையும், தங்கள் வருங்கால வாழ்வைத் தாங்களே வகுத்துக்கொள்ள முடியும் என்பதை மக்கள் முற்றிலும் உணர்ந்துள்ளார்கள் என்பதையும் புலப்படுத்துகின்றன. புதியதொரு அரசாங்கத்தை அமைதியான

முறையில் ஆட்சிபீடத்தில் அமர்த்தியிருப்பதும், நமது மாநிலத்தின் ஆட்சிப்பொறுப்பு, ஓர் அரசியல் கட்சியிடமிருந்து வேறோர் அரசியல் கட்சிக்கு மிக இணக்கமாக மாற்றப்பட்டிருப்பதும் நமது மக்கள் அரசியல் துறையில் எந்த அளவிற்கு முதிர்ச்சி பெற்றுள்ளனர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைவனவாகும். இத் தேர்தல்களை நடத்தித் தருவதில் ஏதேனும் ஒரு வகையில் ஈடுபட்டிருந்த பல்வேறு நிலைகளில் உள்ள எண்ணற்ற அரசாங்க ஊழியர்கள், பொதுவாகவே பாராட்டத் தக்க வகையில் சார்பின்றியும், பற்றுநீக்கியும் தங்கள் கடமைகளை ஆற்றியுள்ளனர். உளநிறைவும் அரசியல் கட்சிச் சார்புமற்ற அரசாங்க ஊழியர்கள், நமது மாநில மக்களின் நலனை மேலும் சிறக்கச் செய்வதில் பெரும் பங்கு வகிக்க முடியும் என்பதை எனது அரசாங்கம் முற்றிலும் உணர்ந்துள்ளது. மற்றும், நிர்வாகத் துறையில் உருவாகியுள்ள நன்மரபுகளைப் போற்றி வளர்க்கவும், அதே சமயத்தில் வளங்கெழு அரசின் (Welfare State) கொள்கைகளை நிறைவேற்றும் வகையில் நிர்வாக யந்திரம் செவ்வனே இயங்குவதற்குத் தேவைப்படுகிற இன்றியமையாச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தவும் இவ்வரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும்.

3. மக்களின் உண்மையான பல குறைகளை நீக்குவதற்கான கொள்கைகளையும், திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு இப் புதிய அரசாங்கம் ஆட்சியில் அமர்ந்துள்ளது. அரசாங்கத்தின் பற்பல துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களின் உதவியுடன் நீர ஆலோசித்தே இக் கொள்கைகளைச் செயலாக்க வேண்டியுள்ளது. எனவே, தற்போதைய நிலையை உள்ளவாறு உணர்ந்து, மக்கள் உள்ளங்களில் தோற்றுவிக்கப்பட்ட நம்பிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய திட்டவட்டமான வேலைத் திட்டங்களை வகுப்பதில் புதிய அரசாங்கத்துக்குச் சிறிது காலம் தேவைப்படும். குன்றிய உற்பத்தி, குறைந்த சேமிப்பு, தாழ்ந்த முதலீடு, செல்வ நிலையிலும் வருவாய் வளத்திலும் கண்கூடாகக் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் போன்ற, வளர்ச்சி குன்றிய நாடுகளில் பொதுவாகவே நிலவும் சிக்கல்களோடு, மூன்றாம் திட்டக் காலத்தில் வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் பெருந்தொகைகள் முதலீடு செய்யப்பட்டிருந்தும் நமது சாதனைகள் ஆறுதல் அளிக்கும் வகையிலே அமைந்திருக்கவில்லையென ஒப்புக்கொள்ள வேண்டிய சூழ்நிலை காரணமாய் ஏற்பட்ட இடையூறுகளும் சேர்ந்துவிட்டன. முன் என்றுமில்லாவண்ணம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் நீடித்த வறட்சியால் நிலைமை மேலும் சீர்கேடு அடைந்தது. முக்கியத்துறைகளில் நமது சாதனைகள் குறிக்கோள் அளவுக்குக் குறைந்ததால் விலைவாசிகள் மேலும் உயர்ந்தன. இதனால் சமுதாயத்தில், மிக எளிய நிலையில் உள்ளவர்களும், நிலையான வருவாய் உடையவர்களும் பெரிதும் இன்னலுற்றனர். "கூட்டு அரசியல் அமைப்பு முறை" (Federal Constitution) ஒன்றில் கூட்டாட்டு மாநில அரசாங்கம் இயங்க வேண்டிய நிலையில் உள்ளது. நாடு முழுவதற்கும் ஏற்றதொரு பொருளாதாரக் கொள்கையை





நெறிமுறைப் படுத்தும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது. எனவே, மாநில அரசாங்கம் தனித்த முறையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் விலைவாசிகள் ஏற்றச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் வகைகள் பெருமளவில் முன்னேற்றம் காணமுடியாத ஒரு நிலை இருப்பதையும் இவ்வரசாங்கம் உணர்ந்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதிலும் பண்டங்களின் வழங்கல் முறையை மேம்படுத்துவதிலும் விலைவாசிகள் மீது இடைவிடாமலுள்ள நெருக்குதலைப் பொதுவாகத் தளர்த்துவதற்கு ஏற்ற கொள்கைகளை உருவாக்கி, அவற்றை நிறைவேற்றுவதிலும் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு உதவி புரிவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். எனினும், மக்களின் விருப்பங்களை நடைமுறையில் நிறைவேற்றுவதற்குத் தனக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குவதற்கான ஏற்ற தருணம் வந்து விட்டது என்றும் மாநில அரசாங்கம் கருதுகிறது. கூட்டு ஆட்சி, நடைமுறையில் மலர வேண்டும் என்ற எண்ணம் இன்று எங்கும் மேலோங்கியுள்ளது.

4. மற்றும், உணவு உற்பத்தி, வழங்கல் போன்ற பல துறைகளிலே தென்மண்டலத்தில் அடங்கியுள்ள மாநில அரசாங்கங்கள் முழு ஒத்துழைப்புடன் செயலாற்றினால், அதனால், பெரும் பயன் விளையும் என்பதை எனது அரசாங்கம் உணர்ந்துள்ளது. இம் மண்டலத்தின் இயற்கை வளங்களைப் பொதுவான நன்மைக்குப் பயன்படுத்தும் வழிவகைகளைப்பற்றியும் ஏனைய மாநிலங்களோடு கலந்து முடிவு செய்யும். இத்தகைய பணிகளில் பிற மாநிலங்களின் ஒத்துழைப்பை மேலும் வளர்க்கும் முறையில் முதற்படியாக, எனது அரசாங்கம் "மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின்" கீழ் நிறுவப்பட்டுள்ள மண்டலக் குழுக்கள் (Zonal Councils) விறு விறுப்பாகப் பணியாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

5. நமது பொருளாதாரத்தை எதிர்நோக்கியுள்ள பல சிக்கல்களைத் தீர்ப்பதற்கான அடிப்படை வேலைகளைப் பொறுமையாக மேற்கொள்ள வேண்டியிருப்பினும், உணவுச் சிக்கலைத் தீர்க்கும் பணியை ஒருகணமும் தள்ளிப் போட முடியாது என்பதை அரசாங்கம் முற்றும் உணர்ந்துள்ளது. நடப்பு ஆண்டில் பருவநிலை பொதுவாகவே சாதகமாக உள்ளது. சென்ற ஆண்டைவிட, 1966–67-ல் உணவு உற்பத்தி பெரிதும் உயர்ந்திருக்க வேண்டுமென்றும், மூன்றாம் திட்டக் காலத்தில் உற்பத்தியில் சிறந்த ஆண்டான 1964-65-ம் ஆண்டின் உற்பத்தியளவிற்காவது உற்பத்தி எட்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், நாடு எங்கணும் பற்பல பகுதிகளில் பரவியுள்ள வறட்சி காரணமாக, தானிய உற்பத்தி பெரிதும் குன்றிய ஒரு தேசியப் பொருளாதார அமைப்பின் ஒரு பகுதியாக நாம் இயங்கி வருகிறோம். எனவே பண்ட வழங்கல் நிலையில் ஏற்படும் நெருக்குதல் காரணமாய், விலைவாசிகளில் ஏற்படும் ஏற்றமும் நாட்டின் பற்பல பகுதிகளில் பற்பல வகையாய் எதிரொலிக்கும். உற்பத்தி சாதாரண நிலையிலிருந்தாலும், வழங்கல் முறையில் குறைபாடுகள் இருந்தால் அவை

[1967, மார்ச் 18

காரணமாகவும் பொருத்த இன்னல்கள் விளையும். உற்பத்தியாளர்களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும், சமுதாயத்தில் மிக எளிய நிலையில் உள்ள மக்களுக்கு, நியாய விலைகளில் நல்ல அரிசி கிடைக்கச் செய்யும் முறையிலும் சிறந்ததோர் உணவுக் கொள்கையை நாம் உருவாக்க வேண்டும். ஆனால், இதற்கிடையில் இப்போது அறுவடையாகி வரும் சம்பா நெல் விற்பனைக்கு வருவதால், பங்கீட்டு முறையில் உணவுப்பொருள்களை வழங்க அரசாங்கம் மேற்கொண்ட பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில், உபரி நெல்லைக் கொள்முதல் செய்வதும் உடனடியான தேவை என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது. விரும்பத்தக்கதும் நடைமுறைக்கு ஏற்றதுமான புதுமுறைகளை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. அதுவரை, ஏற்கெனவே வகுத்துள்ள வழியில் கொள்முதல் செய்யுமாறு மாவட்ட நிர்வாகப் பணியாளர்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. மற்றுமொரு நல்ல பருவமழையாலும், உணவுப் பெருக்கத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் நிறைந்த பலனை அளிப்பதற்கு முன்பும் இடையே உள்ள தட்டுப்பாடான மாதங்களில் (lean months) அரசாங்கத்திடம் போதிய அளவில் உணவு தானியங்கள் இருப்பில் இருக்க வேண்டுமென்பதுதான் இதன் உடனடியான நோக்கமாகும். கட்டுப்பாட்டு விலைகளில் கொள்முதல் செய்வதால், குறிப்பாகச் சிறு குடியானவர்கள் ஓரளவிற்குத் தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை எனது அரசாங்கம் முற்றிலும் உணர்ந்துள்ளது. பெரும் நிலக்கிழார்கள் விற்பனை செய்ய வேண்டிய உபரி நெல்லை அரசாங்க நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் பொழுது, தங்களின் பங்கு அளவிற்கேற்ற சுமையினைத் தாங்கும் வண்ணம் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். உபரி தானியங்கள் வைத்திருப்பவர்கள் அதைச் சமுதாயத்திற்கு உதவக் கடமைப்பட்டவர்கள். பொது நலம் பேணித் தொண்டு செய்வதற்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாகவே செல்வார்கள். தங்களுக்குக் கிட்டிய செல்வத்தைக் கருத வேண்டுமேயல்லாது, ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்கல்ல என்னும் சமுதாய நெறி உணர்வை அவர்கள் உள்ளத்தில் பதிய வைக்க அரசாங்கம் முயலும். அரசாங்கம் ஒருதலைப்பக்கமாகக் கொள்முதல் திட்டத்தைச் செயல்படுத்தாது உரிய முறையிலே பணியை நிறைவேற்றும். குறிப்பாகச் சிறிய குடியானவர்களுக்கு இயன்ற வரையில் இடையூறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும். தொழிலாளர்கள், நிலமற்ற உழவுப் பணியாளர்கள், நிலைத்த வருவாய் பெறுவோர் போன்று சமுதாயத்தில் எளிதில் அல்லலுக்கு ஆளாகும் பிரிவினர்க்கு இன்றியமையாப் பொருள்களைத் தங்கு தடையின்றி வழங்கி வருவதன் மூலம் விலைவாசி ஏற்றத்தைத் தவிர்க்க முடியும் என்றும், நாளடைவில் எல்லாத் துறைகளிலும் விலைகளைப் பெருமளவுக்குக் குறைக்க முடியும் என்றும், இதனால் உழவர்களுக்கு இன்றியமையாத தேவைப்பொருள்கள் நியாயவிலைகளில் கிட்டுமென்றும் அரசாங்கம் உறுதியாக நம்புகிறது. விலைவாசி ஏற்றம், உற்பத்திச் செலவின உயர்வு என்கிற இந்த நச்சு வட்டத்தை நாம் எங்கேனும் ஓரிடத்தில் தகர்த்துத்தான்



1967, மார்ச் 18]

ஆகவேண்டும். கடந்த பத்தாண்டுகளாக இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து வருகிற இவ்விலைவாசி ஏற்றச் சிக்கலுக்கு, உணவு உற்பத்தியைப் பெருக்கியும் வழங்கல் முறையைச் செவ்வைப்படுத்தியும் ஏனைய வழிகளிலும், தீர்வு காணலாம் என்பது இந்த அரசாங்கத்தின் உறுதியான நம்பிக்கையாகும். மீண்டும் இங்கே மத்திய-மாநில அரசாங்கங்களின் உறவு புதிய வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. இன்றுள்ள சூழ்நிலையில், மாநில அரசாங்கங்கள் தங்களுக்குள்ள சொற்ப நிதி வளங்களைக் கொண்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வது மிகக் கடினமாயுள்ளது. எங்கணும் மக்களிடையே உள்ள கசப்பு உணர்ச்சியைக் கண்ணுற்று, விலைவாசி ஏற்றத்தை, குறிப்பாக உணவு தானிய விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கும் மாநில அரசாங்கங்களின் கொள்கையை நிறைவேற்ற மத்திய அரசாங்கம் அவைகளுக்கு உதவிபுரிய முன்வரவேண்டும்.

6. உணவுத் துறையில் நம்மை எதிர்த்து நிற்கும் இன்னல்கள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவையை நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் எடுத்துக்காட்டியுள்ளன என்பது தான் நமக்கு ஆறுதலளிக்கும் ஓர் அறிகுறியாகும். நமது முந்தைய திட்டங்களில் வேளாண்மை உற்பத்திக்கு மேலும் அதிக முக்கியத்துவம் அளித்திருந்தால், இன்று நம்மை எதிர் நோக்கியுள்ள கடும் உணவு நிலைமையைத் தவிர்த்திருக்கலாமென்ற கருத்து பரவலாகவே நிலவி நிற்கிறது. ஆனால், உண்மையில் நமக்குக் கிட்டிய அனுபவங்களின் படிப்பினையை யொட்டி விரைந்து பலன் தரும் திட்டங்களில் நாட்டம் செலுத்தி, இப்போதாவது நமது வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுவதே அறிவுடைமையாகும். தரமான வித்துக்களைப் பெருக்குதல், பாசன வசதிகளை விரிவுபடுத்துதல், உரவகைகளை உரிய காலத்தில் உரிய அளவுகளில் வழங்குதல் போன்ற செயல்களே, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குத் திறவுகோல் என்பதை அரசாங்கம் உணர்கிறது. இந்த மும்முனைத் திட்டத்தில் இப்போது அதிக விளைச்சல் தருகிற நெல் ரகங்களான ADT M-27, CO -25 என்பவை உட்பட, தரமான வித்துக்களைப் பெருக்கி வழங்குவதற்கான சிக்கல்களுக்கு ஓரளவிற்கு மாநில அரசாங்கமே வெற்றியோடு தீர்வுகாண முடியும். சிறுபாசனத் திட்டங்கள், இறைவைப் பாசனத் திட்டங்களின் வாயிலாகப் பாசன வசதிகளை விரிவுபடுத்துவதற்குச் சுறுசுறுப்பான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதும் மாநில அரசாங்கத்தின் கையிலிருக்கிறது. சட்டப் பேரவையின் ஆலோசனைக்கு விரைவில் வரக்கூடிய 1967-68-ம் ஆண்டின் இடைக்காலத் திட்டத்தில்கூட மாநில அரசாங்கம் இத்தகைய திட்ட வேலைகள் விறுவிறுப்பாய் நடப்பதற்கு வேண்டிய நிதி வசதிகளை வகை செய்து தர முயன்றுள்ளது. ஆனால், உழவர்களுக்குத் தேவைப்படும் முழு அளவிற்கு உரவகைகள் உறுதியாகக் கிடைக்க நாம் கூடவே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால்தான் தரமான வித்துக்கள், பாசன வசதிகள் மூலம் நமக்கு நல்ல பயன்கள் கிட்டும். இவ்வகையில்தான் நாம் மத்திய அரசாங்கத்தைப் பெரிதும்

சார்ந்திருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். முக்கியமான இத் துறையில் மத்திய அரசாங்கத்தின் செயல் ஏமாற்றமளிப்பதாயும், உழவர்களிடையே பெருமளவில் கசப்பை ஏற்படுத்தியுள்ளதென்பதையும் நாம் சுட்டிக்காட்டாமல் சும்மா இருப்பதற்கில்லை. நடப்பு ஆண்டில்கூட உரவகைகள் போதிய அளவிற்கு வழங்கப்படவில்லை. நைட்ராஜன் உர வகைகளை 1.35 லட்சம் டன் வழங்கும்படிக் கேட்டதற்குச் சுமார் 86,000 டன் மட்டுமே கிட்டியுள்ளது. பாஸ்பா உரவகையில் கூட, நமது குறிக்கோள் அளவு 60,700 டன் ஆக நிற்க, மொத்தம் 27,000 டன் அளவிற்கே நமக்குக் கிடைத்துள்ளது. உரவகைகளைப் பயன் படுத்துவதில் உழவர்களிடையே தொடக்கத்தில் காணப்பட்ட தயக்கம் இப்போது முற்றிலும் அகன்று விட்டது. இன்று உழவர்கள் வேளாண்மையில் புதிய விஞ்ஞான முறைகளைக் கையாள மிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இன்றியமையாத எல்லா உரவகைகளையும் அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால், உரிய காலத்தில் போதிய அளவிற்கு உரவகைகள் கிடைக்க வகை செய்யாவிட்டால், விளைச்சலைப் பெருக்கும் புதிய ரக விதைகளைப் பொறுத்த நமது திட்ட வேலைகளால் பயனில்லை. உரவகைகள் உறுதியாகக் கிடைத்தால், மாநில அரசாங்கம் தன்னைப் பொறுத்த வரையில், உழவர்களுக்கு உர வகைகள் வழங்கும் நிலையை ஆராய்ந்து எல்லாக் குறைபாடுகளையும் நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் திறம்பட மேற்கொண்டு, உழவர்களின் நீண்டநாளைய குறைகளில் ஒன்றைப் போக்க முடியும்.

7. எனவே, உரவகைகளை முற்றிலும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டிய தேவையை மத்திய அரசாங்கத்துக்கு முக்கியமாய் எடுத்துச் சொல்வதோடு, இப்போது முடிவு செய்யப்பட்டு வரும் நான்காம் திட்டத்தில் உர வகைகளின் உற்பத்திக்கு மேலும் முதன்மையிடம் அளிக்கும் வகையில் இன்றியமையாச் சரிக்கட்டல்களைத் திட்டத்தில் செய்யுமாறும் நமது மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தும். நம் நாட்டிலேயே உர வகைகளை முழுவதும் உற்பத்தி செய்யக் கொஞ்சகாலம் செல்லும். இதற்கிடையில் உர வகைகளை அதிக அளவில் இறக்குமதி செய்வதற்கு வகை செய்ய வேண்டும். நமது உழவர்கள் தங்கள் முழு ஆற்றலையும் உற்பத்தித் திறனில் ஈடுபடுத்துவதற்கு இந்த உர இறக்குமதிகள் இன்றியமையாதவையெனக் கருதப்பட வேண்டும்.

8. நவீன முறையிலும் விஞ்ஞான வகையிலும் வேளாண்மை செய்வதற்கு இன்றியமையாத, உர வகைகள் வழங்குதல் போன்ற பணிகள் அவசியமென்று உணரும்போது, இப்பணிகளின் பின்னணியிலே நிற்கும் மாந்தரை நாம் புறக்கணிப்பதற்கில்லை. உழவர்கள், குறிப்பாக சிறு நிலக்கிழார்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்றவகையில் அவர்களுக்குப் போதிய உற்சாகமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். இந்தச் சூழலில்தான் எனது அரசாங்கத்தின் நிலவரிக் கொள்கை தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகத் திகழ்கிறது. பொதுமக்களின் கருத்துக்கு இணங்க, சட்டப் பேரவையின்



அகத்தேயும் புறத்தேயும் தெரிவிக்கப்பட்ட மக்களின் கருத்து நெருக்குதலுக்குப் பணிந்து நில மேல்வரி (Land Revenue Surcharge) ஏற்கெனவே அகற்றப்பட்டுவிட்டது. ஆனால், இது மட்டும் போதாது. சிறு நிலக்கிழார்களை, நிலவரிச் சுமையின் பிடிப்பிலிருந்தும் விடுவிப்பதற்குப் படிப் படியான திட்டமொன்றும் வகுக்கப்பட வேண்டும். இது குறித்து அடுத்த பசலிக்குள் திட்டவட்டமான முடிவுகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

9. பயிரிடும் குத்தகைக்காரர்களின் இடர்பாடுகளில் நாம் நாட்டம் செலுத்தினாலொழிய வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய நமது திட்ட வேலைகள் முழு வெற்றியைத் தர மாட்டா, தற்போதைய நிலவாரச் சட்டத்தில் உள்ள பொத்தல்களை அடைத்து, பயிரிடும் குத்தகைக்காரர்கள், நடைமுறையில் நிலையான வார உரிமை ( Fixity of Tenure ) பெறுவதற்கு உறுதியான வகை செய்யும் பொருட்டு அரசாங்கம் அச் சட்டத்தை மறுபரிசிலனை செய்யும்.

10. உற்பத்தி பெருக வேண்டுமென்றால், உழவர்களுக்குக் கடன் வசதி அளிப்பதற்கான தற்போதுள்ள ஏற்பாடுகளைச் சீராக்க வேண்டும், நேர்மைப் படுத்த வேண்டும். உழவர்களுக்குக் கடன் வசதிகள் வழங்குவதற்குக் கூட்டுறவு நிறுவனங்களே சிறந்த கருவிகளாகும் என்பதை அரசாங்கம் உணர்ந்தாலும், எல்லா நிலைகளிலும் கூட்டுறவு நிறுவனங்களின் பணியை மேம்பாடுறச் செய்வதற்குப் போதிய வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அது அறிந்துள்ளது. உழவர்களின் கடன் தேவைகளைக் கூட்டுறவு நிறுவனங்களின் வாயிலாக நிறைவு செய்வதற்காக மேலும் அதிக நிதி வசதிக்கு ஏற்பாடு செய்கையில், இப்பணம் சரிவரப் பயன்படுத்தப் படுகிறதாவென்றும், சாலத் தகுதியுள்ளவர்களுக்குக் கிட்டுகிறதாவென்றும் நாம் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். சிறுநிலக்கிழார்கள் கூட்டுறவு நிறுவனத்திற்கும் தங்களுக்கும் மிகத் தொலைவு என்றும், அடிக்கடி தங்களுக்கு எதிராகச் செயல்படுகிற அரசியல் ஈர்ப்புச் சக்திகளுக்கு இந்த நிறுவனம் உட்பட்டதென்றும் கருதுகின்றனர். அவ்வாறு அவர்கள் கருதுவதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. பெரும் பாலான சிறு குடியானவர்களுக்குக் கூட்டுறவு நிறுவனத்தின் நன்மைகள் கிட்டா வகையில் உள்ள இன்றையச் சூழல் தொடர்ந்து நீடிக்கவிடக் கூடாது. எனவே, நமது மாநிலத்தில் கூட்டுறவு நிறுவனத்தின் வேலையை ஆராய்ந்து நல்ல முறைகளில் அதைச் சீர் திருத்தி அமைப்பதற்கான செயற் குறிப்புகளை வகுப்பதற்கான குழு ஒன்றை நிறுவ வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. பொதுமக்களின் நம்பிக்கையைப் பெருமளவில் பெற்றுள்ள இந்த அரசாங்கம் இத்தகைய சீர்திருத்தங்களின் வாயிலாக, வேளாண்மை உற்பத்தியின் உயர்ந்த குறிக்கோள்களை எய்துவதில், உழவர்களின் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஒன்று திரட்டி, வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களுடன் அவர்கள் பயனுறு முறையில் ஒத்துழைக்கும் வகையில் ஆவன செய்யும். வளர்ச்சித் திட்ட வேலைகளில் உழவர்கள் ஆர்வத்தோடு ஈடுபடும்

இந்தப் பணியில் முற்றிலும் ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்ற ஒன்றிப்புக்களும் கலந்துகொள்ளும் வண்ணம் அரசாங்கம் முயற்சியினை மேற்கொள்ளும்.

11. இன்னும் இறுதி செய்யப்படாமல் உள்ள நான்காம் திட்டத்தில் வேளாண்மை உற்பத்தித் திட்ட வேலைகளே அடிப்படையாக அமையும். நான்காம் திட்டத்தின் முதல் ஆண்டு ஏற்கெனவே முடிந்திருப்பினும், அத்திட்டத்தை முடிவு செய்வதற்கு இதுவரை இயலாமற் போனதற்குரிய இடையூறுகளையும் நிச்சயமற்ற சூழ்நிலைகளையும் குறித்து மாண்புறு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். நான்காம் திட்டத்தின் வடிவும் அளவும், அந்நிய நாடுகளின் உதவியைப் பெறக்கூடிய சாத்தியக்கூறுகளைப் பெருமளவுக்குப் பொறுத்துள்ளன. நான்காம் திட்டத்தின் முதல் ஆண்டில் பெரும்பாலும் மூன்றும் திட்டத்தில் நிறைவேற்றப் படாமல் நின்றுபோன திட்டங்களை நிறைவேற்றுவதிலும், வேளாண்மை உற்பத்தி குறித்த சில இன்றியமையாத திட்டப் பணிகளில் நாட்டம் செலுத்துவதிலுமே செலவழிக்கப்பட்டுள்ளது. வரையறைக்குட்பட்ட நமது சொந்த நிதி ஆதாரங்களையும், இந்த நிலையில் கிடைக்கக்கூடிய மத்திய உதவியின் அளவையும் கருத்திற் கொண்டு, அடுத்த ஆண்டிற்கான இடைக்காலத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். இடைக்காலத் திட்டத்தின் விவரங்கள் இக் கூட்டத் தொடரில் 1967–68-ம் ஆண்டுக்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்டத்துடன் உங்கள்முன் வைக்கப்படும். ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டு வரும் வளர்ச்சித் திட்ட வேலைகளுக்கு எவ்விதத்திலும் இடையூறு நேரக் கூடாது என்கிற ஒரே கொள்கையின் அடிப்படையில் இந்த இடைக்காலத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 564 கோடி ரூபாய் முதலீடு செய்ய வகை செய்கிற நமது மாநில நான்காம் திட்டத்திற்கு திட்டக் கமிஷன் தற்காலிகமாகத் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது. இதில் 250 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய உதவி கிட்டும். தற்காலிகமாக இறுதி செய்யப்பட்டுள்ள இத் திட்டத்தைக் குறித்து அரசாங்கம் விரைவில் ஆலோசித்துத் திட்ட வேலைகளுக்கு அளிக்கப்படும் முறைவைப்பில் (Priorities) இன்றியமையாத சரிக்கட்டல்கள் எவற்றையேனும் செய்ய வேண்டுமா? அப்படிச் செய்தால் எவற்றைச் செய்ய வேண்டும் என்பதைக் குறித்து முடிவு செய்யும். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி விதம் மாநிலத் திட்டத்தில் செய்துள்ள முதலீடுகளைக் கொண்டு மட்டுமே முடிவு செய்யப்படுவதில்லை என்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டும். பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில், மத்திய அரசாங்கத் துறையிலும், தனியார் துறைகளிலும் மாநிலத்தில் செய்யப்படுகிற முதலீடுகள் மேலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பொருளாதார முறையிலும் தொழில் நுட்ப வகையிலும் ஐயத்திற்கு இடமின்றி மேற்கொள்ளலாமென்று முடிவு செய்யப்பட்ட சேலம் உருக்காலை போன்ற பெரிய தொழில் திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றுவதன்மூலம் மத்திய அரசாங்கத் துறைகளில் இம் மாநிலத்திற்குரிய நியாயமான பங்கு முதலீடு செய்யப்பட வேண்டுமென்பதை மாநில அரசாங்கம் வற்புறுத்தும்.



12. நான்காவது பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு உருவாகியுள்ள நிலைமைக் கிணங்க, நமது அரசியல் அமைப்பின் கூட்டாட்சி இயல்பை வலியுறுத்திச் சொல்ல வேண்டிய அவசியமும், அரசியமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் நிலை எப்படியிருக்க வேண்டுமென்று முதலில் கருதப்பட்டதோ அந்த நிலையை அளிக்க வேண்டிய அவசியமும் இன்று தோன்றியுள்ளன. திட்டத்தைத் தீட்டுவதிலும், செயலாற்றுவதிலும் மாநிலங்கள் இனியும் செயலற்ற பார்வையாளர்களாக இல்லாமல், சுறுசுறுப்பான பங்குகொள்பவர்களாக மாறவேண்டும். நான்காம் திட்டக் காலத்தில் மாநிலங்களுக்கு மேலும் பெரும்பங்கு அளிக்க வேண்டிய அவசியத்தைத் திட்டக் கமிஷனே ஓரளவுக்கு ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதுவரையில் மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் திட்டங்கள் என்று கருதப்பட்டு வந்த சில திட்ட வேலைகளை மாநில அரசாங்கத்துறைக்கு மாற்றுவதற்கான சில செயற்குறிப்புகள் (Proposals) மீது அண்மையில் திட்டக் கமிஷன் முடிவு செய்திருக்கிறது. இந்த நடைமுறையை மேலும் விரிவுபடுத்தி அரசியல் அமைப்பில் மாநிலங்களின் பொறுப்புக்குட்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிற வேளாண்மை உற்பத்தி, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற எல்லாத் துறைகளிலும் மாநிலங்களுக்கு மேலும் முக்கிய பங்கு அளிப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. இந்தத் துறைகளுக்குச் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகங்களின் தற்போதைய பணியை மறு ஆய்வு செய்து, மாநிலங்களின் அதிகார வரம்பிற்குள் முற்றும் அடங்குகிற துறைகளில் மத்திய அமைச்சகங்கள் கடந்த சில ஆண்டுகளில் நிதி வரையறைகளையும் ஏனைய வரையறைகளையும் விதிப்பதன் வாயிலாக அதிகமாய்த் தலையிடத் தொடங்கியுள்ள இப் போக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஈட்டிய செல்வத்தின் திரட்சியே மத்திய அரசாங்கத்தின் நிதிவளம். எனவே, இந் நிதி வளத்தை மத்திய--மாநில அரசாங்கத் திட்டங்களின் முறைவைப்பிற்கிணங்க அதை பகிர்ந்து கொள்வதுதானே முறை? மத்திய அமைச்சகங்கள் தங்கள் 'செல்லத் திட்டங்களை' (Pet Schemes) வளர்ப்பதற்கு, மத்தியக் கடன்களையும், மானியங்களையும் பயன் படுத்துவதால் திட்ட முறைவைப்புகள் திரிக்கப்பட்டு நாட்டின் அரிய நிதி ஆதாரங்கள் பயனற்ற முறையிலே கையாளப்படுவதற்குத்தான் பெரிதும் வழிகோலியுள்ளது.

13. சட்டப் பேரவையின் இக் கூட்டத் தொடரில் 1967–68-ம் ஆண்டின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்ந்து, வருகிற நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு எதிர்பார்க்கப்படும் செலவினங்களுக்குக் கணக்கு வாக்களிப்பு (Vote on Account) வழங்க வகை செய்வதே அதன் முக்கிய அலுவலாகும். அரசாங்கம் நான்காம் திட்ட வரைவினை விரிவாக மறு ஆய்வு செய்து அது குறித்த கொள்கைகள் மீது முடிவு செய்கிற வரையில், பற்பல துறைகளின் வளர்ச்சி வேகம் தடைப்படாமலிருக்கும்படிப் பார்த்துக் கொள்வதுதான் இடைக்கால வரவு-செலவுத் திட்டம், அதில் அடங்கியுள்ள இடைக்கால ஆண்டுத் திட்டம்—

[1967, மார்ச் 18

இவற்றின் அடிப்படைக் கருத்தாகும். இம் மறு ஆய்வின் முடிவுகளும், அந்த ஆய்வின் காரணமாக உருவாக்கப்படும் இறுதித் திட்டமும் 1967 ஜூன் மாத வாக்கில் சட்டப் பேரவையின் முன் சமர்ப்பிக்கப்படவிருக்கும் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் முற்றிலும் எதிரொலிக்கும்.

14. திட்டத்தின் சில கூறுகளைப்பற்றி உண்மையான கருத்து வேறுபாடுகள் இருப்பினும், நமது மாநிலப் பொருளாதாரத்தை எந்த முறைகளில் உறுதிப்படுத்த வேண்டுமென்பது குறித்து தெளிவிய மக்கட் பிரிவினரிடையே உடன்பாடு நிலவி வந்துள்ளது. அத்தகைய உடன்பாடு தொடர்ந்து நீடிக்க வேண்டும். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் அவசியம் குறித்தோ நமது மின்சாரத் திறனை உயர்த்தும் தேவையைக் குறித்தோ, கல்வி, மருத்துவ வசதி, பொதுச் சுகாதாரம் போன்ற இன்றி யமையாச் சமூகப் பணிகளை விரிவுபடுத்துவதன் அவசியம் குறித்தோ கருத்து வேறுபாடு எதுவும் இருப்பதற்கில்லை. இத் துறைகளில் இந்த மாநிலத்தின் அரசியல் வாழ்வில் ஈடுபட்டுள்ள பற்பல பிரிவினரிடையே ஆக்கவகையில் ஒத்துழைப்பும் ஒத்த உணர்வும் நிலவ வேண்டுமென நான் வேண்டிக் கொள்ளுகிறேன். இதற்கு முன்பிருந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கள் வாதங்களிலும், சொல்லாடல்களிலும் உயரிய தரங்களை வகுத்துக் கொண்டு, நெருக்கடியான நேரங்களிலும் கண்ணியமாகவும் பெரு மதிப்புடனும் வாதங்களை நடத்திச் சென்றதால் சிறந்த பாராட்டுதலுக்கு உரியவர்களாய்த் திகழ்ந்தார்கள். உயரிய குடியாட்சி மரபுகளை வளர்ப்பதில் நாம் ஏற்கெனவே நாட்டின் ஏஞ்சிய பகுதிகளுக்கு உதாரணமாகச் செயல்பட்டிருக்கிறோம். அந்த மரபுகளுக்கேற்ப நடந்து கொள்வதுடன், அவற்றை மேலும் வளர்க்கவும் இன்று நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அண்மையில் இம் மாநில மக்களின் நம்பிக்கையைப் பெருமளவில் பெற்றுள்ளவர்கள் இம் மன்றத்தின் ஆட்சிப்பாலகையில் அமர்ந்திருப்பதையும், பல ஆண்டுகளாக நிர்வாகத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றுள்ளவர்கள் எதிர்க் கட்சியினராக வீற்றிருப்பதையும் இன்று காண்கிறோம். இந்தச் சூழலில் மக்களின் நலனை வளர்க்கும் பொது முயற்சியில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களிடையே பயன் தரும் வகையில் ஒத்துழைப்புக் கிட்டுமென நான் உறுதியாக நம்புகிறேன். பொதுநன்மைக்காகப் போட்டியிடும் பல சக்திகளின் ஆற்றல்களையும் திறன்களையும் பொது நன்மைக்காக ஒன்று திரட்டிச் செயலில் ஈடுபடுத்துவதுதான் குடியாட்சியின் உயர்ந்த குறிக்கோளாகும். இத்தகைய ஒன்றுபட்ட முயற்சிகளின் வாயிலாக, நமது மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு நிலையான பணி ஆற்ற முடியும் என்றும், நமது மக்களுக்கு நம்பிக்கையும் தனி மகிழ்ச்சியும் அமைதியும் ஆன்ற வளமும் நிறைந்த ஓர் இனிய வாழ்வை உறுதியாக்க முடியும் என்றும் நம்புகிறேன்.

64985

D 1
V211,31 N67